OFFICE OF THE ... OF BOOKS. REGISTERED 26 JUN 1911 MADRAS.

# விவேகபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி III } ஸாதாரண௵ சித்திரைமீ 1911–௵ மேமீ { பகுதி 11

## ஆத்மா ஆனந்தரூபன்

### THE ATMAN, THE EVER DEAR

ஆத்மா ஸத்வஸ்து, அழிவற்றது என்பதை முன்னரே விளக்கியாயிற்று. இங்கு ஆத்மா ஆனந்தவஸ்து என்பதைச் சற்று விவரிப்பாம்.

ஆத்மா ஆனந்தரூபம் என்பதற்கு ஆதாரம் 'ஸச்சிதானந்தம் பிரஹ்மம்' என்றும், 'உலக வஸ்துக்கள் எல்லாம் பிரிய வஸ்துக்களல்ல, அவைகளால் நாம் திருப்தி அடைவதுபோல இருக்கும், ஆத்மாவே ப்ரிய ரூபம் ஆதலால் தான் இவைகள் ஆனந்தமாகத் தோற்றுகின்றன' என்றும் கூறும் சுருதியுமே. அதாவது ஆத்மாவைவிட ப்ரிய ரூபமானது ஒன்றுமில்லை. ஆதலால் அது ஆனந்த ரூபம் என்பதாயிற்று. 'ஒரு நாய் எலும் பொன்றைக் கடித்துக்கொண்டிருக்கையில் அதன் பல்லில் அது குத்தி ரக்தம்வர அது எலும்பின்மேல் பரவும் அந்த ரக்தத்தை மறுபடியும் நக்கும் அது அதிக ருசிபோலத் தோன்ற நாய் அந்த எலும்பை விடாது கடிக்கிறது. இங்கு ருசி எலும்பில் உள்ளதல்ல, நாயின்வாய் ரக்தத்திலே உள்ளது. ரக்தத்தின் ருசி எலும்பினது என்று மயங்கி நாய் ஓயாது எலும்பைக் கடித்துக்கொண்டேயிருக்கிறது. இதுபோலவே தான் நாம் ஆத்மாவின் ஆனந்தமே வெளியில் திருப்தி முதலியவை ரூபமாக ஸுக காலங்களில் வெளியாகிறது. அது வெளி வஸ்துக்களிலிருந்து வருவதாக மயங்கி அவைகள் ஆனந்தகரமென்று எண்ணி ஓயாது விஷய ஆசையை விருத்திசெய்கிறோம். உண்மையில் ஆனந்தம் ஆத்மாவிலே ஆதலால் விஷயங்கள் முடிவில் துக்கமாகவே பரிணமிக்கின்றன' என்று இக்கருத்தையே பெரியோர்கள் திருஷ்டாந்த ரூபமாக விளக்குவது உண்டு.

ஆத்மா ஆனந்த ரூபன் என்னும் வேத வாக்யத்தைத் திட்டப்படுத்த பின்வருமாறு மனனம் செய்யலாம். 'உலகில் உள்ள விஷயங்களில் ஆனந்த மிருக்கின்றது என்று வரும் எண்ணத்தை விமர்சிப்போம். பணம் முதலிய ஸொத்துக்கள் ஸுகவஸ்துக்கள் என்போம். பிள்ளைக்கு வ்யாதி முதலியன வருங்கால் இப்பணத்தைத் திரணமாக மதித்துச் செலவிடுவோம். பிள்ளை பணத்தைவிடப் பிரியமானவஸ்து. தீப்பற்றி எரிதல் கொலைத்தண்டனை முதலிய அபாய காலங்களில் பிள்ளையைக் கூடக்கவனியாது தன் தேஹம் தக்கினல் போதும் என்று வருகிறது. ஆதலால் பிள்ளையைவிடத் தன் தேஹம் பிரியமானது. மண்காற்று முதலிய சிறிய அபாயாதிகளில் கண் முதலிய முகத்திலிருக்கும் இந்திரியங்களை மூடிக்கொள்வதால் இந்திரியங்கள் தேஹத்தைவிடப் பிரியமானவை. தனக்கே கொலைத்தண்டனை விதிக்கப்படுங்காலத்தில் 'கண்ணையாவது குத்திவிட்டு என்னை உயிரோடு விடுங்கள்' என்று கெஞ்சும் நிலை நமக்கு வந்து விடுவதால் உயிர் இந்திரியங்களை விட மிகப்ரியம். இவ்வுயிரையும் கஷ்டம் அதிகமாக வரும் காலங்களிலாவது அல்லது கங்கா யமுனா ஸங்கத்தில் விழுந்து இறத்தலால் தன் ஆத்மாவுக்கு நற்கதி வரலாம் என்ற நம்பிக்கை உண்டாகுங்காலங்களிலாவது. ஆத்மா உயிரைவிட மிகப்ரியம் என்பது வெளியாகும் ஆகவே எல்லாவற்றையும்விட ஆத்மாவே ப்ரியரூபமானது. இதை ஒட்டித்தான் மற்றவைகள் பிரிய வஸ்துக்கள் எனத்தோன்றுகின்றன.'

இந்த ஆத்மா நம்மால் விடக்கூடியதேயல்ல. இதன் ரூபமாகிய ஆனந்தத்திற்கும் ஸாதாரண ஸுகத்திற்கும் மிகுந்த பேதம் உண்டு. ஆத்மாவின் ஆனந்த ரூபம் எல்லா த்வந்தத்திற்கும் அப்பாற்பட்டது. துவந்துவங்கள் எல்லாம் அதையே ஆதாரமாக உடையது. ஆனால் ஆத்மாவின் ஆனந்த ரூபம் ஸாதாரணமாக விளங்காது. ஸாதாரண நிலையில் ஆத்மா **ஸத்** என்பது எளிதில் உணரக்கூடியது. வித்யாப்யாஸம் ஊஹம் முதலியவைகளால் புத்திமான்களுக்கு அது சித் என்பது நன்றாக வெளியாகும். இவர்களுக்கு ஆனந்த ரூபம் வெளியாகாதிருக்கலாம். இது வெளியாகாது மனதில் ஸத்வகுணம் அதிகரித்து ராஜஸத்தின் பரபரப்பு அடங்கி மனம் ஒய்வு பெறுங்கால் தான் ஆனந்த ரூபம் வெளியாகும். இதை அடிக்கடிச் சாந்தமாக இருந்து உணரப்பழகினல் எளிதில் குரு அருளால் மேலான நிலையை நாம் காலக்கிரமத்தில் அடையலாம்.

# விவேக போதினி

தொகுதி 3]ஸாதாரணஷு சித்திரைமீ [பகுதி11


## முக்கிய உபநிஷத்துக்கள்

### THE PRINCIPAL UPANISHADS

### X. ப்ருஹதாரண்யக உபநிஷத்து (1)

### THE BRIHADARANYAKA UPANISHAD.

இவ்வுபநிஷத் மிகப் பெரியது. இது 6-அத்யாயங்களை உடையது. இதுவரையில் கூறப்பட்டு வந்த உபநிஷத்துகளில் வெளியான விஷயங்கள் இங்கும் காணப்படுகின்றன. காட்டில் தபஸ்விகளுக்கு யோக்யமாகக் கூறப்படும் விஷயங்களை அடக்கியுள்ள வேதபாகங்களாகிய **ஆரண்யகங்களின்** பாகமாகி மிகப் பெரிதாக இருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. இதில் ஆங்காங்குக்கதைகளும் ப்ரஹ்மவிஷயமும், இன்னும் மற்றைய மத ஸம்பந்தமான விஷயங்களின் ஆராய்ச்சியும் விரிந்து காணப்படுகின்றன. இதில் தான் யஜுர்வேத மஹாவாக்யமாகிய **அஹம்பிரஹ்மாஸ்மி** (நான் பிரஹ்மமானேன்) என்பது காணப்படுகிறது. இப்பெரிய உபநிஷத்திற்கு **ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள்** சிறந்த முகவுரை ஒன்று எழுதியிருக்கிறார். அதில் காணப்படும் விஷயங்கள் மிகச் சிறந்தவையாயும் வேதங்களின்உள்ளுறைப்பொருள்,நோக்கம் முதலியவைகளை நன்றாக வெளிப்படுத்துவதாயும், இருப்பதால் அதை ஒருவாறு இங்குச் சுருக்கி எழுதிப் பின்னர் உபநிஷத்தைத் தொடங்குவோம்.

இந்த முகவுரையில் முதலில் உபநிஷத் என்ற வார்த்தைக்கு அர்த்தங்கள் கூறி அவைகளுள் அடங்கி இருக்கும் விஷயம் குறிக்கப்படுகிறது. அதன் பின்னர் வேதங்களின் பொது நோக்கத்தையும் அவைகள் வெளியிட வந்த விஷயங்களின் சிறப்பையும் பின்வருவாறு எடுத்து விஸ்தரிக்கப்படுகிறது.

'எல்லா மனிதனுக்கும் ப்ரியவஸ்துக்களை அடையவேண்டும் அப்ரியவஸ்துக்களை நீக்கவேண்டும் என்ற பொதுவான பரபரப்பு உண்டு. ஸாதாரணமாக ப்ரத்யக்ஷ அனுமானாதிகளால் இந்தப் பரபரப்பை மனிதன் அடக்கமுயலுவான். இம்மாதிரியான வழிகளைப்பற்றி வேதங்கள் கூற ஏற்படவில்லை. இவைகளுள் அகப்படாத விஷயங்களைக்காட்டி மனிதர்களைப் பரத்திலும் முடிவில் சாசுவதமாகவும் ப்ரியவிஷயத்திலேயே நிலைத்து ஸுகிக்கும்படி செய்யவேண்டும் என்பதே வேதத்தின் நோக்கம். இதற்காக ஆத்மா என்ற வஸ்து ஒன்றுஉண்டு. அதற்குக் கர்மானுஸாரம் ஜன்மம் உண்டு. ஆதலால் அது வரும் ஜன்மத்தில் இஹத்தில் செய்யப்பட்டுள்ள கர்மங்களுக்கேற்ப ஸுக துக்கங்களுக்கு ஆளாகும்; அவ்விஷயங்களில் ஸுகவிஷயங்களை அடைந்து, துக்கவிஷயங்களை நீக்க இன்னஇன்ன கர்மங்கள் செய்யவேண்டும் என்று விதிப்பதே வேதங்களின் முதல் பாகமாகிய கர்மகாண்டத்தின் நோக்கம். முற்கூறியவையாகிய ஆத்மா உண்டென்பதும், அது எப்பொழுதும் இருந்து, ஜன்மங்கள் எடுக்கின்றது என்ற ஞானமும் வேதத்தால் அல்லது வேறு எவ்வழியாலும் உண்டாக இடமில்லை. வேதங்கள் இவ்விஷயங்களை ஸ்தாபிக்க யுக்திமுதலியன கூறுகின்றதே என்று சங்கை பிறக்கலாம். உண்மையை விசாரித்து நோக்குங்கால் இந்த யுக்திகளால் வேதங்கள் முற்கூறிய உண்மைகளை ஸ்தாபிக்கவேயில்லை. தாம் வெளியிடப்புகுந்த இம் மேலான விஷயங்களில் நம்பிக்கை உடையவர்களுக்கு அதைத் திடப்படுத்தவே அது முயலுகிறது. இவ்வாறின்றி வேதம் இவைகளை ஸ்தாபிக்க முயலுகிறது என்று கூறினால் பௌத்தாதி மதஸ்தர்களுக்கு மாத்திரம் இந்த யுக்திகள் தகுந்தவைகள் என்று தோன்றாமலிருக்க இடமே இல்லாமல் போய்விடும். ஆதலால் இந்த அருமையான விஷயங்களை வேதத்திலிருந்து தான் நேரிட அறியவேண்டுமே ஒழிய வேறு எவ்விதப்

பிரமாணங்களாலும் உணரவே முடியாது. வேதங்களைப் பிரமாணமாகக்கொண்டு இதில் நம்பி விட்டால், பின்னர் வேதங்கள் கூறும் யுக்திகளும் இந்த நம்பிக்கைக்கேற்ப நாம் எடுத்துக் காட்டும் யுக்திகளும் ஒழுங்காகக் காணப்படும். (இதுபற்றியே 'சுருதி மதஸ்தர்க்கோனு ஸந்தீயதாம்' சுருதிக்கிணங்க யுக்திவாதம் செய் என்று நமக்கு ஆசாரியாள் புத்திமதி கூறி இருக்கின்றனர்.)

'ஆகவே ஆத்மா உண்டு அது கர்மங்களுக்கேற்ப ஜன்மம் எடுத்து ஸுக துக்கங்களை அனுபவிக்கிறது என்று நம்பி, அடுத்த பிறப்பில் தனக்குத் துக்கமில்லாது ஸுகமே வரவேண்டும் என்ற ஆவல் அதிகமாக உடையவனுக்கே கர்மகாண்ட பாகம் ஏற்பட்டது. இந்த ஆத்மாவின் நிஜஸ்வரூபம் விளங்காததால் தான் முற்கூறிய எண்ணங்கள் உண்டாகி அகங்காராதிகள் மேலிடுகின்றன. இதைக் கர்மங்களால் தடுக்கவே முடியாது. இதைத் தடுத்து உள்ளதை உள்ளபடி விளங்கச்செய்வது பிரஹ்மஞானமாகிய ஜீவப்ரஹ ஐக்ய உணர்ச்சியே. இது வாராதவரையில் எல்லோரும் அறியாமையில் ஈடுபட்டு அதனால் ஏற்படும் மலங்களில் உழன்று பிறந்து இறந்து, இறந்து பிறந்து வருந்திக் கொண்டிருக்கவேண்டியது தான்.

'இப்படி யிருந்தும் சாஸ்திரத்தில் கூறிய பிராயச்சித்தம் ஸத்கர்மங்கள் முதலியவைகளால் புண்யம் ஏற்பட மனம் சுத்தியாகும். இந்தப் புண்யம் ஞான ஸம்பந்தமான புண்யம் என்றும் வெறும் புண்யம் என்றும் இரண்டு விதம். பிந்தியதால் பிதிர்லோகம் முதலிய ஸாதாரண நிலையே கைகூடும். ஞானஸம்பந்தமான புண்யத்தாலோ பிரஹ்மலோக பரியந்தம் ஒருவன் போக இடமுண்டு. ஆதலால் தேவதைகளை ஆராதிப்பதைவிட பிரஹ்மத்தை ஆராதிப்பது மேலென சாஸ்திரங்கள் கூறும். மனுஸ்மிருதியும் வைதிக கர்மங்கள் இரண்டு விதமென்றும், அவைகள் இஷ்டபூர்த்தி செய்யக்கூடியதான காம்யகர்மங்கள், ஞானப்பிரதமான தியானம் முதலிய நிஷ்காம்ய கர்மங்கள் என்று இருவிதம் என்றும் கூறுகின்றது.

'கர்ம பேதங்களால் ஜீவாத்மா பிரம்மா முதல் ஸ்தம்ப (ஓர் சிறுபுல்) பரியந்தம் ஜன்மம் எடுக்க வேண்டும். இவைகளில் பாப புண்யங்கள் ஸமமாகக் கலந்திருப்பின் மனுஷ்ய ஜன்மம் வருகின்றது. இவைகளால் நாம ரூப கர்மங்கள் ஸம்பந்தமாக இப்பிரபஞ்சம் விசித்திரமாக வெளியாகின்றது. இது ஸ்ருஷ்டிக்கு முன்பு இம்மாதிரி இல்லாமலிருந்தது. இது ஆதி அந்தமில்லாததாகக் காணப்படினும் அஞ்ஞானத்தால் உண்டான மாறுபாடே ஒழிய வேறில்லை' என்ற எண்ணத்தால் பிரபஞ்ச விஷயத்தில் மூழ்கி இருக்க மனம் வாராதவர்களுக்குப் பிரஹ்ம ஞானம் உண்டாக்க இவ்வுபநிஷத்து ப்ரவர்த்திக்கிறது. கர்ம காண்டத்திலுள்ள யாகாதி கர்மங்களின் ஞானமுடைய ஒருவன் அவைகளால் கரை ஏற வழியறியாது தத்தளிக்க அவனுக்கு ஏற்பட்டுள்ள கர்ம விஷய அறிவைக்கொண்டு அதன் உட்கருத்தை வெளியிட்டு ஸாவதானமாக இவ்வுபநிஷத்து அவனுக்கு ஞானோபதேசம் செய்யத்தொடங்குகிறது. இந்த உட்கருத்தின்படி யாகாதிகர்மங்களை த்யானிக்கும் முமுக்ஷுவுக்கு அவைகளை நேரிடச் செய்தால் என்ன பலன் உண்டாகும் என்று வேதத்தில் காணப்படுகிறதோ அதே பலன் உண்டாகும் என்பது வேதத்தின் துணிபு. இவ்வாறு ஆடு காட்டி வேங்கை பிடிப்பதுபோல கர்மங்களின் உட்கருத்தைக்காட்டிப் பலன் தருவது போலக்கூறி வெகு தந்திரமாகப் பின்னர் ஆத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடி காட்டி முடிவில் பரமபதம் ஸித்திக்கும்படி வேதம் செய்கிறது. இவ்வுபநிஷத்து இந்தத் தந்திரத்தை மேற்கொண்டு முதலில் அசுவமேதயாகத்தைப் பின்பற்றி அதன் உட்கருத்தை வெளியிட்டு அதை த்யானிக்கும் வழியையும் அதனால் உண்டாகும் பலனையும் எடுத்து விஸ்தரிக்கிறது.

அத்யாயம், 1. :—முதலில் அசுவமேத யாகத்தை இவ்வாறுத்யானம் செய்தால் உடனே அதை நேரே செய்தபலன் ஸித்திக்கும் என்பதை இவ்வுபநிஷத்து எடுத்துக் கூறுகிறது.

(1) அசுவமேதம் நரமேதம் முதலிய யாகங்கள் ஆராய்ந்து பார்க்கின் பிராணிஹிம்ஸா ஸம்பந்தமான யாகங்களாகத் தோற்றவில்லை. சற்றேறக்குறைய 600 பிராணிகளை அசுவமேதயாகத்தில் யூபஸ்தம்பங்களில் கட்டி, மந்திரங்களைச்சொல்லி முடிவில் அவைகளை விடுவித்துவிட வேண்டும். இதில் உபயோகிக்கப்படும் குதிரையானது விசுவரூபமாகிய பரம்பொருளைக் குறிக்கிறது. இதற்கேற்ப இவ்வுபநிஷத்தும் 'பஞ்பஞ்ச உஷத்காலமே குதிரையின் தலை, ஸூர்யனே கண், காற்றேமூச்சு, வைச்வானராக்னியே வாய், வர்ஷமே தேஹம், ஸ்வர்க்கமே முதுகு, அந்தரிக்ஷமே வயிறு, பூமியே பாதம், ருதுக்களே அதன் அங்கம், மாஸமே பூட்டுகள், நக்ஷத்ரங்களே எலும்புகள், மேகங்களே மாம்ஸங்கள்' என்று இம்மாதிரியாக அசுவமேதக் குதிரையின் த்யான ரூபத்தை எடுத்து விஸ்தரிக்கிறது.

(2) இதன் பின்னர் அசுவமேத யாகத்தில் உபயோகப்படும் அக்னியின் உற்பத்தி கூறப்படுகிறது. 'ஆதியில் இப்பொழுதிருப்பவை ஒன்றும் இல்லை, எல்லாம் மறைப்பால் விழுங்கப்பட்டிருந்தன. இம்மறைப்பிற்குத்தேஹம் வேண்டும் என்ற எண்ணம் உண்டாக அது சலித்து ஆராதிக்கத் தொடங்கியது. அதிலிருந்து அப்பு உண்டாயிற்று. இதிலிருந்து ப்ருதிவியும் அக்னியாகிய விராஜுனும் உண்டாயின. இவ்வக்னி ஸூர்யன், அக்னி, வாயுவாகக் கவர் பிரிந்தது. மறுபடியும் இந்த மறைப்பிற்கு இனி ஒரு தேஹம் வேண்டுமென்று இச்சை உண்டாயிற்று. இதனால் வாக்கு உண்டாயிற்று. இதிலிருந்து வேதங்கள் உண்டாயின. உண்டானவைகளை எல்லாம் இம்மறைப்பு விழுங்க யத்தனித்தது. இப்படி இருந்தும் மேலும் மேலும் இந்திரியங்கள்முதலியன உண்டாகிப் பெருக இந்த மறைப்பே அசுவமாயது. இதை உணர்ந்து தன்னைத்தானே அசுவமாக மதித்து ப்ரஜாபதிக்கு அதை அர்ப்பிக்கவேண்டும். பிரகாசமான ஸூர்யனே அசுவமேதம், வர்ஷமே தேஹம், அக்னியே யாகாக்னி, இவ்வுலகமோ இதன் தேஹம், இவை இரண்டும் ஒரே வஸ்து வாகிய மரணம் அல்லது மறைப்பே. இவ்வாறு அசுவமேதத்தின் முடிவாகி மறைப்பை உணர்ந்தவன் மரணத்திலிருந்து விடுபடுவான்.

(3) இதன் பின்பு சாந்தோக்ய உபநிஷத்து முதல் அத்யாயத்திலிருக்குந் தேவாஸுர ஸம்பந்தமான **உத்கீத கதை** விஸ்தாரமாகக்கூறப்படுகிறது. பின்னர் அங்குக் கூறியபடியே ஸாம, உத்கீத சப்த த்யானங்கள் காட்டப்படுகின்றன. இதன் முடிவில் 'ஓ பரம்பொருளே! அஸத்திலிருந்து ஸத்திலும், இருளிலிருந்து ஒளியிலும், அழிவிலிருந்து அழிவற்ற நிலையிலும் எங்களைக் கொண்டுசேரும்' என்றமந்த்ரம் காணப்படுகிறது. இதில் இருக்கும் ஸத் அஸத் முதலிய பதங்கள் சிஷ்யன் நிலைக்குத் தகுந்தபடி பொருள் படுத்திக் கொள்ள இடங்கொடுத்து அவனைக் கிரமமாக முன்னுக்குக்கொண்டு வரும் திறனுடையன. இம்மாதிரி ஞானத்தோடு கர்மங்கள் செய்தாவது அல்லது இங்குக் கூறப்பட்ட மந்திர ஞானத்தாலாவது வரும்படியான முடிவு ஹிரண்ய கர்பராகிய பிரஜாபதியின் நிலையும் அதனால் ஸ்ருஷ்டி எங்கும் தாமாக ஊடுருவி நிற்கும் நிலையும் என்னும் இவைகளே.

(4) ஆதியில் இது புருஷ ரூபமான ஆத்மாவாக இருந்தது. இது சுற்றுமுற்றும் பார்த்து 'இது தான் நான்' என்ன **நான்** என்ற பதம் பிறந்தது. இந்த ஆத்மா எல்லாவற்றிற்கும் முன்னர் உள்ள (பூர்வ) பாபங்களை எரித்தது (உஷ்) ஆகையால் இதற்கு **புருஷன்** என்ற பெயர் ஏற்பட்டது. இது தனிமையா யிருந்தமையால் பயம் எற்பட்டது. 'என்னைத் தவிர வேறு ஒன்றும் இல்லாமையால் நான் ஏன் பயப்படவேண்

டும்? என்ற எண்ணம் உண்டாகப் பயம் நீங்கியது. இப்படியிருந்தும் ஸந்தோஷ குறைவுமாத்திரம் இருந்தது. வேறு ஒன்றிருந்தால் நலமாக இருக்கும் என்ற எண்ணம் உண்டாக இது இரண்டாகப் பிரிய ஸ்திரீ புருஷர்கள் உண்டாகி அதிலிருந்து மனிதர்கள் வெளிப்பட்டனர். ஸ்திரீ வெட்கிப் பசுவானுள், புருஷனும் காளையாக மாட்டினம் உண்டாயின. இம்மாதிரி இவர்கள் ஒவ்வொரு வர்க்கத்திலும் முறையே ஆண் பெண்ணுகி அவ்வவ்வர்க்கங்களை விருத்தி செய்தனர். இந்த வஸ்து 'இந்த ஸ்ருஷ்டிஎல்லாம் என்னிடமிருந்து உண்டானமையால் நானே இவ்வாறுனேன்' என்று உணர்ந்தது. இவ்வாறு ஸ்ருஷ்டியை உணர்பவனும் அந்த வஸ்துவின் நிலையை அடைவான்.

பின்னர் பிரஹ்மா வாயைக் கைகளால் தேய்த்து அக்னியை உண்டாக்கினுர். இது எல்லா தேவதைகளுக்கும் ஆதாரமாக விளங்கியது திரவமாகிய ரஸவஸ்துக்களைத் தமது சக்தியிலிருந்து ஸ்ருஷ்டித்தார். பிரபஞ்சம் முழுவதும் அக்னியாகிய உண்பவனும் ஸோம ரஸமாகிய உணவுமாக இருக்கிறது. இந்த இருவகை ஸ்ருஷ்டியை ஒரு வஸ்துவினிடமிருந்து வந்ததாக உணருபவன் மேலான நிலையில் ஸதா இருப்பான்.

முன்னர் இப்பொழுது காணப்படுபவைகள் எல்லாம் அரூபமாக விருந்தன. பின்னர் நாம ரூபர்திகளால் இவை இவ்வாறு விசித்திரமாக ஏற்பட்டன. கத்தி உறையுள் புகுந்து இருப்பது போலவும், அக்னி அக்னி ஸ்தானத்தில் நிறைந்து பிரகாசிப்பது போலவும், பரவஸ்து இவைகளுள் பிரவேசித்து அமர்ந்தது. இந்தவஸ்துவை ஸாதாரணமாக, உள்ளபடி உணர முடியாது. மூச்சுவிடல், பார்த்தல், எண்ணுதல் முதலிய தொழில்கள் மூலமாக அறியப் புகுந்தால் இதன் ஒவ்வொரு அவஸரமாகிய மூச்சு, கண், மனம் ஆகிய இவைகளை உணரலாமே ஒழிய இவ்வஸ்துவை நேரிட உணர முடியாது. இவை களுக்கு எல்லாம் ஆதாரமாக இருக்கும் ஆத்மாவை எல்லோரும் ஆராதிக்கட்டும். அடிச்சுவடுகளைக்கொண்டு கெட்டுப்போன பசு முதலியவைகளை கண்டு பிடிப்பதுபோல இந்த ஆத்மாவை ஆதார மாகக்கொண்டு பிரபஞ்சத்தில் எல்லாவற்றையும் உணரலாம். இந்த ஆத்மாதான் நம்மை நெருங்கினதாயும் ப்ரியமானதாயும் உள்ளவஸ்து. இது அழியாவஸ்துவாதலால் இதில் உள்ளபடி ப்ரியம் உண்டாகிவிட்டால் மாருது.

ஆதியில் எல்லாம் பிரஹ்மமாக இருந்தது; அது(நான் பிரஹ்மமானேன்) **அஹம்பிரஹ்மாஸ்மி** என்று கூறித் தன் நிலையை விளக்கியது. இதிலிருந்து எல்லாம் உண்டாயின. இந்த அபேத நிலையை அனுபவித்தறிந்தவன் எவனுனும் பிரஹ்மமேயாவான். **வாமதேவரிஷி** இவ்வாறே ஆனுர். இவ்வாறு உணர்பவன் தேவதைகளின் ஆத்மாவும் ஆகிவிடுதலால் இவனை எந்தத் தேவதைகளாலும் தடுத்து நிறுத்தவே முடியாது, இவன் பிரஹ்மமாகியே தீர்வான்.

இவ்வாறின்றித்தான் வேறு ஆராதிக்கும் தேவதை வேறு என்று மதித்து ஒருவன் எந்தத் தேவதையை ஆராதித்தபோதிலும் அவன் அந்தத் தேவதைக்கு உபயோகமாகும் மிருகத்திற்கு ஸமானமாகிறுன். மிருகங்களால் மனிதர்களுக்கு உணவு கார்யஸித்தி முதலிய விஷயங்கள் எவ்வாறு ஏற்படுகின்றனவோ அவ்வாறே தேவதைகளுக்கும் இத்தகைய மனிதனுல் மிகுந்த நன்மை உண்டு. மிருகங்களில் ஒன்று தவறிக் காணுமல் போய்விட்டால் ஸொந்தக்காரனுக்கு எவ்வாறு அதிருப்தி ஏற்படுமோ அதுபோல, **அஹம்பிரஹ்மாஸ்மி** என்ற மஹாவாக்ய விஷயம் ஒருவனுக்குத் தெரிந்துவிட்டால் 'நமக்கு அவன் உபயோகமற்றவனுய்ப் போய்விடுகிறுனே' என்ற ஏக்கம் தேவதைகளுக்கு ஏற்படும். (ஆகவே நன்னடக்கை முதலியவைகளால் தேவதைகளைத் திருப்திப்படுத்தி ஸாவதானமாக இந்த அனுபவத்தைப் பெறமுயலல் வேண்டும்.)

ஆதியில் பிரஹ்மம் (அக்னி ரூபமாகத்)தனித்திருந்தது. தொழிற்பட இதுபோதாதிருக்க இதிலிருந்து க்ஷத்ரம் உண்டாயிற்று. முதலில் அபிவிருத்திக்காகவே இது உண்டாக்கப்பட்டபடியால் இந்த ஜாதி தேவதைகளுள்ளும் மனிதர்களுள்ளும் பரவி எல்லோரையும் அடக்கியாளும் ஜாதியாயிற்று. ஆதலால் தன் நிலையிலிருக்கையில் ஏற்பட்டுள்ள பிராஹ்மண ஜாதியும் ராஜஸூயம் முதலிய அவஸரங்களில் இதற்குக் கீழ்ப்படிந்தே இருக்கும். ஆயினும் பொதுவாக க்ஷத்ரியஜாதிபிராஹ்மணனுக்கு உட்பட்டதே. பிறப்பிடமாகிய இந்த ஜாதியை அவன் அவமதிக்கலாகாது. இதுவும் போதாதென்று வைச்யரும், சூத்ரரும் உண்டாக்கப்பட்டனர். இவர்களைத் திடப்படுத்த தர்மம் உண்டாக்கப்பட்டது. இதைவிடச் சிறந்தது ஒன்றும் இல்லை. இதற்கும் ஸத்யத்திற்கும் பேதமே இல்லை. பிரஹ்மம் தேவதைகளுள் அக்னியாகவும், மனிதர்களுள் பிராஹ்மணனாகவும் இரண்டுவிதமாக இருக்கிறது. ஆதலால் எல்லோரும் இவைகள் மூலமாகவே மேன்மை அடைய விரும்புவர். இந்த ஆத்மாவை உணராது இறப்பவன் எவ்விதச் சிறந்த கர்மங்கள் செய்திருப்பினும் அவைகள் எல்லாம் எளிதில் அழிந்துவிடும். இந்த ஆத்மாவை இவ்வாறு வழிபடுபவனுக்கு இந்தக் கஷ்டமே நேரிடாது. இந்த விஷயத்தை உணராதவன் இப்பிரபஞ்சத்திலிருந்து எல்லாவற்றிற்கும் உபயோகமான வஸ்துவாகி அடங்கி ஸ்வதந்திரமின்றிக் கிடக்கவேண்டியதுதான். யாகம் செய்பவன் தேவதைகளிடத்தும், மந்திரம் ஜபிப்போன் ரிஷிகளிடத்தும், வம்ச விருத்திக்காகச் சிராத்தாதிகள் செய்பவன் பிதிர்க்களிடத்தும், அன்னதானாதிகள் செய்பவன் மனிதர்களிடத்தும், அடங்கிக் கிடக்கவேண்டியதே.

ஆதியில் ஆத்மாகவே எல்லாம் இருந்தபோதிலும் இப்பொழுது 'பெண்சாதி, பணம் முதலியன வேண்டும்' என்ற ஆவல் ரூபமான பிரபஞ்சம் காணப்படுகிறது. இவைகள் கிடைக்காவிடில் ஓர்வித அதிருப்தியும் துக்கமும் ஏற்படும். இதை நீக்கி ஆத்மாவின் வழிக்குக் கொண்டுபோவதற்கு 'மனமே புருஷன், வாக்கே பெண்சாதி, மூச்சே குழந்தை, கண்ணே ஐஹிக ஐச்வர்யம், காதே பாலோக ஐச்வர்யம், தேஹமே தொழிலிடம்,' என்று இம்மாதிரி மதித்துப் பெண்சாதி பணம் முதலியவைகளாலாகவேண்டியவைகள் எல்லாம் இவைகளால் நடந்து விடுவதாகப் பாவனை செய்து முதிர்ந்தால் முற்கூறிய அதிருப்தி எளிதில் நீங்கும்.

(5). முதலில் ஞானத்தாலும் கர்மத்தாலும் ஏழுவித அன்னங்களைப் பிரஜாபதி ஸ்ருஷ்டித்ததாகக் கூறி, அவைகளை அனுபவிப்பவர்களே அதை மறுபடி ஸ்ருஷ்டிக்கவும் அதுவும் அழியா வண்ணம் செய்யப்பட்ட விதமும் காட்டப்பட்டிருக்கிறது. 'பின்னர் அவர் இவைகளுள் மூன்றைத் தமக்காக வைத்தார். இவைகள் முறையே மனம், வாக்கு, பிராணன், என்பவைகளே. ஆசை, திடம், சங்கை, நம்பிக்கை, அவநம்பிக்கை, ஞாபகம் மறதி, வெட்கம், அறிவு, பயம் இவைகள் மனத்தின் ரூபங்கள், சப்தமே வாக்கின் ரூபம், வாயுக்களே பிராணனின் ரூபம். இம்மூன்றும் முறையே, (1) பூமி, அந்தக்ஷம், ஸ்வர்க்கம் (2) ருக், யஜுஸ், ஸாமம் (3) தேவதைகள், பிதிர்க்கள், மனிதர்கள் (4) தகப்பன், தாய், குழந்தை, (5) அறிந்த பொருள், அறியவேண்டியபொருள், அறியாப்பொருள் ஆகிய இவைகளாகக் காணப்படும். இவைகளை வெவ்வேறாக ஆராதித்தால் தாழ்ந்த நிலையும், இவைகள் உண்டான விதத்தை உணர்ந்து எங்கும் இருப்பதாக மதித்து ஆராதித்தால் அகண்ட நிலையும் கைகூடும்.

மூன்று உலகங்கள் உண்டு. மனுஷ்யலோகம், பிதிர்லோகம், தேவலோகம். இவைகளுக்கு முறையே பிள்ளை, யாகாதிகள், ஞானம் ஆகிய இவைகளே ஸாதனங்கள். இறக்குங்கால் ஒவ்வொருவனும் தனது பிள்ளைக்கு 'நீயே பிரஹ்மம், யக்ஞம், பிரபஞ்சம்' என்று உபதேசிக்க

வேண்டும். இவைகளை நன்கு உணர்ந்தால் அவன் தகப்பனைக் காப்பவனுவான். இதை உணர்ந்து இறக்கும் ஒருவன் தனது மனம், வாக்கு, மூச்சு இவைகளுடன் பிள்ளையுட்புகுவான். தகப்பனிடம் இருந்த குறைவுகளைத்தீர்த்து வைப்பவன் பிள்ளையாதலில் இவனுக்கு **புத்ரன்** என்று பெயர் ஏற்பட்டது. இவனால் தகப்பன் இவ்வுலகில் நிலை பெறுகிறான். இதன் பின்பு இவனுள் தெய்வீகமாயும் பொதுவாயும் உள்ள மனம்,வாக்கு, மூச்சுகள் வந்து சேர்கின்றன. இதனால் வருவன கூறல், ஸந்தோஷம், அழிவற்ற நிலை இவைகள் ஏற்படும். இதை உணர்ந்தவன் ஹிரண்யகர்ப்பர் நிலையை அடைந்து எங்கும் உள்ள ஆத்மாவாவான். இவனிடம் துக்காதிகள் வந்து தாக்கா. ஸுகங்களே வந்து அணுகும்.

பிரஜாபதி இந்திரியங்களை ஸ்ருஷ்டித்தார். அப்பொழுது சச்சரவு அவைகளுள் உண்டாகக் கண் பார்வையையும் இதுபோல ஒவ்வொன்று தம்தம் தொழிலையும் கைப்பற்றின. களைப்பு ரூபமாக மரணம் அவைகளைத் தாக்கியது. எல்லாவற்றிற்கும் களைப்பு உண்டாயிற்று. பிராணன் மாத்திரம் களைப்பால் தாக்கப்படாது நின்றது. இதைக்கண்டு எல்லாம் இதனிடம் ஒடுங்கி இதையே ஆதாரமாகக்கொண்டன. இதுபோலவே அண்டத்திலும், அக்னி ஸூர்யன், சந்திரன் ஆகிய இவைகளும் முதலில்தத்தம் தொழிலைச் செய்யத் தொடங்கி நிலைபெற்ற வாயுவை ஆதாரமாகக் கொண்டுநின்றன. ஆதலால் இந்த ப்ராணனை உணர்ந்து எல்லோரும் மாணத்திலிருந்து விடுபடுவர்.

(6) இப்பிரபஞ்சம் நாமம், ரூபம், கர்மம் ஆகிய இந்த ரூபமாக உள்ளது. வாக்கே நாமத்திற்கும், கண்ணே ரூபத்திற்கும், தேஹமே கர்மத்திற்கும் ஆதாரம். ஆத்மா ஒன்றே இம்மூன்ருகத்தோற்றுவது. இது ஸத்தால் மூடப்பட்டும் அழிவற்று மிருப்பது.பிராணனே அழிவற்றது. இது நாம ரூபங்களால் மூடப்பட்டது.

இந்த முதல் அத்யாயத்தில் இவ்வுபநிஷத்து ஞானம் அக்ஞானம் என்னும் இவைகளுக்குள்ள பேதங்களை நன்கு விளக்குகிறது. 'எவ்வளவுதான் யாகாதிவிஷயங்களை உருவகப்படுத்தி விச்வரூபமாக த்யானுதிகள் செய்தபோதிலும் முடிவில் பிரபஞ்ச காரணமான ஹிரண்யகர்பர் நிலையே வரும். மேலானதாயினும் இதுகூட நாம ரூப ஸம்பந்தப்பட்டதே ஒழிய வேறில்லை. இப்பேதங்கள் விளங்கும் வரையில்அக்ஞானம் முற்றிலும் நீங்காதாதலால் த்யானம் செய்பவன் தேவதைகளுக்குள் அடங்கியவன் என்றும், இந்தத் யான மூர்த்தியும் தானும் ஒன்று என்று **'அஹம் பிரஹ்மாஸ்மீ'** என்ற ஞானுனுபவத்தால் உணர்ந்தவனே பிரஹ்மமாகிப் பிறப்புத் தீர்ந்து நாம ரூபாதிகளிலிருந்து விடுபட்டு மனதற்ற பரிசுத்த நிலையை அடைந்து ஆனந்திப்பான்' என்றும் கூறும் விஷயங்களே இங்குக் கூறப்பட்டவைகளுள் முக்யமானவைகள்.

---

கடவுளைக் காண்பவனை உலகம் **பாதிக்காது.**—ஒருவன் சந்தைகூடும் இடத்திற்குத் தொலைவு தூரத்திலுள்ள வரையில் ஹோ!! ஹோ!! என்ற ஒருவித ஆரவாரத்தை மாத்திரம் கேட்கின்றுனாயினும், சந்தைக்குட் சென்றபிறகு முன்போல் ஆரவாரம் கேட்பதொழிந்து, ஒருவன் உருளைக்கிழங்கு 'பேரம்' செய்வதையும், மற்றொருவன் கத்தரிக்காய் 'பேரம்' செய்வதையும் தெளிவாய்த் தெரிந்து கொள்வதுபோல, ஸாதகன் ஸர்வேசுவரனுக்குத் தூரமாயிருக்கும் வரையில் மதவாதிகளின் வாதப்ரதிவாத விதண்டாவாத கோலாஹலத்தை மாத்திரம் கேட்பவனுகிறான். ஆனல் அவன் பகவத்ஸமீபத்தை அடையும் பொழுது இச்சமய வாதிகளின் விதண்டாவாதங்கள் ஒழிந்துபோகப், பரமபதியின் அரிய ரஹஸ்யங்களையெல்லாம் அவன் கரதலாமலகம் போல் அறிகின்றுன்.

'கண்ணும் பூச்சி, எனும் விளையாட்டில் தாய்ச்சியைப்போய்த் தொட்டுவிடுகிறவன் குருடனுவதில்லை. அதுபோலக் கடவுளை ஒருமுறை கண்டுவிட்டவனை இவ்வுலகபாசங்கள் கட்டுப்படுத்தா. தாய்ச்சியைப்போய்ப் பிடிக்கிறவன் திருடனுக்கப்படாமல் சுயேச்சையாய்த் திரிவதுபோல் எம்பெருமானது திருவடிகளைத் தொட்டதொண்டர்கள் இப்பிரபஞ்ச நாடக அரங்கத்தில் நிர்ப்பயமாய் ஒடியாடி உலக மாயா பாசங்களினின்றும் விடுதலை பெறுகின்றமையால் அவர்களை மீண்டும் எதுவும் ஒருநாளும் பந்திக்காது.

## IV. சூரியன்—அதன் தோற்றம்
## SUN: ITS APPEARANCE

இதுவரையிலும் நாம் சூரியனைப்பற்றித் தெரிந்துகொண்டதிலிருந்து, எவ்விதத்திலும் அது இப்பூமியை விட மேன்மையானதென்று தெளிவாயிற்று. அவ்வளவு சிறந்த வஸ்துவைப் பற்றி இன்னம் விபரமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் அதிகரிக்கிறது. ஆனால் நாம் அப்படிப்பட்ட ஆசையை எப்படி நிறைவேற்றிக்கொள்ளுகிறது? அதனிடத்துச் சென்று பார்த்தறியலா மென்றாலோ, போவதற்கு மார்க்கமுமில்லை. மார்க்கமேற்பட்டாலும் இம் மகாயாத்திரை செய்ய நம்மாயுள் முழுதும் போதாது. புராணங்களில் நாம் கேட்டிருக்கிற படி அசுவத்தாமன், வியாஸர், பரசுராமன் முதலிய மகா புருஷர்களைப்போல சிரஞ்ஜீவிகளாக வாழும்படியான சித்தியைப் பெற்றிருந்தாலும், நாம் சூரியனைச் சமீபிக்கு முன்னமேயே எரிந்து சாம்பலாய்ப் போய்விடுவோம். இப்பூமியிலேயே நின்று நேர் நிமிர்ந்து கண்ணெடுத்துப் பார்ப்போமென்றால், சூரியன் தன் காந்தி மகிமையால் நம்மை அந்தகர்களாக்கி விடுகிறது. வெகு தூரத்தில் வெறுங்கண்ணால் பார்க்க முடியாமல், புகை ஏற்றி மங்கிய கண்ணாடி வழியாய்ப் பரீக்ஷிக்க முயன்றால், ஒரு சிவந்த வட்டத்தைத் தவிர, வேறொன்றும் நம் கண்ணிற்படுவதில்லை. எல்லா விதத்திலும் அசாத்தியமான காரியமாகத் தோன்றுகிறது நம் பிரயாஸம்.

ஆகையால் கண்களின் பூர்ண சக்தியை யிழந்தவர்கள் கண்ணாடியைத் தேடுவதுபோல, நம் நேத்திரங்களுக்கு உபகாரமாகத் தூரதிருஷ்டிக் கண்ணாடி (Telescope) என்னும் கருவியைக் கொண்டு சிரமப்பட்டுப் பார்ப்போம். இக்கருவி நீட்டவும் குறுக்கவுங்கூடிய ஒரு இரட்டையான குழாயில் இரண்டு லென்ஸ் கண்ணாடிகள் பதிந்துள்ளது.

இக்கருவியின் நுனியைக் கண்ணில் வைத்து, வெகு தூரத்திலிருக்கும் ஏதாவதொரு வஸ்துவை நோக்கிப் பார்த்தால், அவ்வஸ்து அதிக சமீபத்தில் கொண்டுவரப்பட்டதுபோலவும் பெரியதாயும் காணப்படும்.

இத்தகைய கருவியைக்கொண்டு சூரியனைப் பார்த்தாலும் கண் கூசும். ஆகையால் குழாய் வழியாய் வரும் சூரிய கிரணங்களை ஒரு சுத்தமான கடிதம், பலகை அல்லது திரையில் விழும்படி பிடித்தால், சூரியனுடைய பிம்ப உருவம் அதில் படியும். அந்தப் பிம்பம் எங்குமொரே மாதிரியாகச் சுத்த வெளுப்பாயிராது. அதில் சில இடங்களில் சிறு மச்சங்கள் பல தோன்றும். தேஜோமயமான மண்டல பிம்பத்தில் சிறு துவாரங்களுண்டாய் உள்ளிருக்கும்அந்தகாரத்தைத் தெரிவிப்பது போலத் தோன்றுகிறது. என்ன ஆச்சரியம்! கண்கொண்டு பார்க்கமுடியாத சூரிய தலம் களங்கமுள்ளதென்று சொன்னால் யார் தான் நம்புவார்கள். ஒரு திவ்ய அழகுள்ள முகம் கண்ணாடியில் குரூபமாய்த் தோன்றினால், அக்குற்றம் கண்ணாடியினதேயல்லாமல் முகத்ததாகுமா? சூரியபடத்தில் தோன்றும் களங்கங்கள் தூரதிருஷ்டிக்கண்ணாடியின் குற்றத்தினாலுண்டான தோற்றமென்று நினைக்கலாம். ஆனால் தேர்ந்தெடுத்த உயர்ந்த பட்டைக் கண்ணாடியில் முகத்தினழகு உள்ளபடியே மாறாமல் தோன்றுமல்லவா? அதேமாதிரி வேறு சிறந்த சுத்தமான கருவிகளைக்கொண்டு சூரிய பிரதிபிம்பத்தைப் பிடித்துப் பார்ப்போம். ஆ! ஆச்சரியம்! அதிலும் முன்போலவே களங்கங்கள் தோன்றுகின்றனவே! நமது சந்தேகமிப்பொழுது தெளிந்துவிட்டது. குற்றம் கருவியினுடையதல்ல. களங்கங்கள் சூரியனைச் சேர்ந்தவையே.

ஒரு மனிதன் சரீரத்திலுள்ள மச்சங்களும், மிருகங்களினுடம்பிலுள்ள வர்ண வித்யாசங்களும் அநேகமாய் எப்பொழுதும் ஒரே மாதிரியானவைகளாயிருப்பதுடன், இடத்தை விட்டு

மாறுகிறதுமில்லே. சூரிய தலத்தில் தோன்றும் மறுக்களோ அப்படியல்ல. வெகு விசித்திர ஸ்வ பாவமுள்ளவைகள். அடிக்கடி அவைகளின் உருவம் மாறிக்கொண்டே யிருக்கும். இன்றைக் கிருந்தமாதிரி நாளேக்கிரா! ஒரு க்ஷணமிருப் பதுபோலக்கூட மற்றொரு க்ஷணமிராமல், அவைகளின் உருவமும் பருமனும் மாறிக்கொண்டே யிருக்கும். சில புதிதாய்த் தோன்றுகின்றன. மற்றுஞ் சில அல்பாயுஸுள்ளவைகளாய் சில நாளிருந்து முற்றும் மறைந்து இருந்தவிடமே தெரியாமல் போய்விடுகின்றன. ஆகவே, சூரிய களங்கங்கள் உருவத்திலும் பருமனிலும் வேற்றுமைப்படுவதுடன், சங்கியையிலும் மாறிக் கொண்டே யிருக்கின்றன.

ஆனல் இவ்வளவு நிலேயற்ற களங்கங்கள் ஒரு விதத்தில் ஒற்றிருக்கின்றன. தினந்தோறும்சூரிய மண்டலத்தைத் தூரதிருஷ்டிக் கண்ணுடியை கொண்டு அதிக ஜாக்கிரதையாய்ப் பரீஷித்துக் கொண்டு வந்தோமானல், அப்போது தோன்றும் மச்சங்கள் எப்போதும் ஒரே இடத்திலிராமல், ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்துக்குப் பிரயாணப்பட்டு ஒரே ரீதியாய்ச் செல்வனபோலக் காணப்படுகின்றன. இவ்விஷயமாக ஒரு உபாத்தியாயரும் அவர் சிடர்களும் செய்த பரீக்ஷையைக் கவனிப்போம்.

ஒருநாள் அவர்கள் ஒருகளங்கம் சூரியதலத்தின் ஓரோரமாகக் கண்டார்கள். அதன் சேஷ்டையை எல்லாரும் கவனிக்கலானர்கள். 5-6-தினங்களில் அது கொஞ்சங்கொஞ்சமாக நகர்ந்து ஸூர்ய தலத்தின் மத்தியில் வந்தது. இன்னும் 6,7-தினங்களில் எதிர் ஓரத்திலும் வந்து அடுத்த தினத்தில் மறைந்து போய்விட்டது. கொஞ்ச நாள்வரையில் அது அவர்கள் கண்ணில் படவே யில்லே. அதன்பின் 12, 13-நாள் கழித்தபின்பு, அந்தக்களங்கம் ஆரம்பத்தில் எவ்விடத்தில் தோற்றியதோ அதேயிடத்தில் மறுபடியும் உதயமானதைக்கண்டு அதிசயித்தார்கள். இதே மாதிரி சுமார் 26-நாள்களில் வேறு களங்கங்களும் அம்மாதிரி யாத்திரை செய்தனவென்றும் மாணுக்கர்கள் கண்டு திகைத்து நிற்க, உடனே உபாத்தியாயர் அவர்களுக்கு அவ்விதக்காக்ஷிக்குக் காரணம் தாங்களே கண்டறியும்படி பின் வரும் உபாயஞ்செய்தார்.

ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து அதன் தோலில் ஒரு துவாரம் பருப்புப்பிரமாணம் கிள்ளி விட்டு, அந்தச் சந்தின் கீழ் தோன்றிய வெண்மையான உள்தோளில் மையைத்தடவிக் கறுப்பாக்கினர். உடனே அந்தப்பழத்தை ஒரு நீண்ட இரும்பு கம்பியில் குத்திக் கையில் பிடித்துக் கம்பியை மெதுவாய் கைவிரல்களால் உருட்டித் திரித்தார். அவர்கள் முன் சூரிய தலத்தில் கண்ட களங்கங்கள் இடம் மாறுவதுபோல, எலுமிச்சம் பழத்திலிட்ட கறுப்புப்புள்ளியும், முதலில் ஒரு ஓரத்தில் தோன்றி, குறுக்காகச் சென்று, மற்றொரு ஓரத்தில் மறைந்தது. கொஞ்சநேரம் அப்படி மறைந்திருந்து, மறுபடி ஆதியில் தோன்றின இடத்திலேயே உதயமாயிற்று.

இதைப்பார்த்த மாத்திரத்தில், அம்மாணுக்கரிலொருவன், "எனக்குத் தெரிந்துவிட்டது, எனக்குத் தெரிந்துவிட்டது," என்று குதூகலமாய்க் கத்தினன். உபாத்தியாயர் உடனே என்னவென்று வினவ, அவன், "எலுமிச்சம் பழம் எப்படிச் சுற்றுகிறதோ அப்படிச் சூரியனும் தன்னேத் தானே சுற்றுகிறதென்று தெளிவாகவில்லேயா? இல்லாவிட்டால் நாம் சூரியபடத்தில் கண்டபடி மச்சங்களெல்லாம் எப்படி ஒரேமாதிரி குறுக்கே ஓடும்?" என்றுன். அந்தப்பையன் சொன்னது முழுதும் சரியே. சூரியன் நடு ஆகாசத்தில் ஆதாரமின்றி, ஒன்றினுலும் தடுக்கப்படாமல் நின்று தன்னேத்தானே சுற்றிக்கொண்டிருக்கிறது. சிறு எலுமிச்சம்பழம் சிறியதாகையால் கையால் சீக்கிரத்தில் சுற்றிவிடலாம். ஆனல் சூரியனே அநேக லக்ஷம்மைல் அகலமுள்ள பந்தாகையால் தன்னேச்சுற்ற சுமார்

26 தினங்களாகின்றனவென்று மேலே நாம் கண்ட களங்கங்களின் கதித்தோற்றம் தெளிவாய்த் தெரிவிக்கிறது.

மேலும், ஒரு வட்டமான தட்டு, ரூபாய், இவை போன்ற ஏதாவதொரு வஸ்துவைச் சுற்றினால், அது கீழே காட்டியபடி முதலில் நல்ல வட்டமாகவும், திருப்பத்திருப்ப நீள்வட்டமாய் (oval) வரவர அகலம் குறைந்துகொண்டு வருவதாகத் தோன்றுகிறது. ஆனால் சூரியனுடைய வடிவமோ, எப்படித் திரும்பினாலும் ஒரே வட்டகாரமாகவே யிருக்கிறது. இதனால், சூரியன் ஒரு தட்டையான வஸ்துவல்லவென்றும், உருண்டையான ஒரு பெரியபந்து போன்றதென்றும் தெளிவாகிறது.

எஸ். பாலகிருஷ்ணய்யர், பி.ஏ., எல். டி.

### நீதி வாக்கியங்கள்.

மேகச்சாயை, துஷ்டனுடைய தயை, இளம்புல், பாலஸ்திரீ, யௌவனம், தனமாகிய இவைகள் நெடு நாளைக்கு நில்லா.

வெட்கப்படுகிறவன், பொறுமையுள்ளவன், சந்தோஷப்படாதவன், குரோத முள்ளவன், தீராச் சந்தேகமுள்ளவன், பிறர்பொருளாற் சீவிக்கின்றவன் முதலியோர் பெருந்துக்கத்தையே யனுபவிப்பார்கள்.

வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம், சத்தியம், உறுதி, பொறுமை, ஆசையின்மை யென்னும் இவ்வெட்டுத் தருமங்களையும் ஒருவர் அனுசரிக்கவேண்டும்.

சாதுக்கள் புத்தியைக்கேளாமல் துஷ்டர் புத்தியைக் கேட்கின்றவனெவனோ அவன் மருந்து தின்னாத ரோகியைப்போல் விபத்தையடைவான். காதுக்கினிமையாயும் இதம்பண்ணுகிறதாயும் இருக்கிற வசனந் துர்லபம்.

காதகனுடைய வசனம், செவிக்கினிமையாயினும் அதைக் கேட்கலாகாது.

அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடலாகாது. பசு, பூமி, தானியம் இவற்றினைக்காட்டிலும்; அபயதானம் அதிகம். அசுவமேத புண்ணியத்தைக்காட்டிலும் இந்தப்புண்யம் அதிகமென்று சாஸ்திரமிருக்கிறது.

யானை தொட்டாலும், பாம்பு மோந்தாலும், அரசன் நகைத்தாலும், துர்ச்சனர் மரியாதை பண்ணினாலும் உயிர்ச்சேதம் வரும்.

நினைப்பின்படி மனதிலிருக்கிறதை யறிகிற சிநேகிதனும், மனோகர ஸ்திரீயும், பிறர் துக்கமறிகிற பிரபுவும் கிடைக்கிறதருமை.

## மறவர் நாடு

### THE LAND OF THE MARAVARS

மறவர் என்ற ஜாதியார் பெரும்பாலும் மதுரை இராமநாதபுரம் திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் வசித்துவருகிறார்கள். முன் காலத்தில் தென் இந்தியாவில் இந்த ஜாதியார் தான் மிகவும் பிரபலமாயிருந்தார்கள். இப்படிக் கீர்த்தி பெற்ற ஜாதியார் இப்பொழுது தாழ்ந்த ஸ்திதியிலிருப்பதைப் பார்க்கவும் கேட்கவும் பரிதாபமாயிருக்கிறது. ஆகையால் தேசாபிமானிகளாகிய மகான்கள் இந்த ஜாதியாரைத் தங்களாலியன்றமட்டும் உழைத்து நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர வேண்டியது முக்கிய கடமை. இவர் நாடுகளில் பள்ளிக்கூடங்களேற்படுத்தவேண்டும். இவர்களுக்குப் போலீஸ் பட்டாளம் முதலியவைகளில் உத்யோகமேற்படுத்த வேண்டும். இவர்களுக்கு அநியாயமாயேற்பட்ட திருட்டுத் தொழிலை யொழிக்கவேண்டும். இவர்களுக்கு ஆதிமுதலுண்டான காவற்றொழிலை நிலை நிறுத்த வேண்டும். இத்தகையவர்களின் சரித்திரத்தை ஆதியோடந்தமாக வரையப் புகுவாம்.

மாக்கென்ஸி மகாபிரபு வரைந்தவாறு இலங்கைத்தீவுக்கு எதிர்க்கரையிலுள்ள இராமலிங்க க்ஷேத்ரமாகிய இராமேசுவரம் என்ற தீவில் இச்சாதியார் ஆரம்பத்தில் கோயிற்காவலுக்காகச்செம்படவர்களாய் ஏற்படுத்தப்பட்டார்கள். சிலர் கூறுவதாவது: இராமாயணத்தில் சொல்லியபடி ஸ்ரீராமசந்திரர் இலங்கைத்தீவுக்குச் சென்று இராவண வதம் செய்ததில் இவ்வகுப்பார் விசுவாசமாய்ச் செய்த உபகாரத்திற்கு உங்களை என்றும் மறவேன் என்று வாக்களித்து அவர்களுக்கும் மறவேன் என்றபெயருமிட்டதாக அனுமானம். ஆனால் வாஸ்தவ விஷயம் யாதென்று ஆராய்ந்தால் இவர்களுக்குள்ள நடையுடை பாவனைகளை யோசிக்குங்கால் இவர்களின் தைரியத்தை யுத்தேசித்து மறமுள்ளவர் அல்லது மறவர் என்று பெயரிடப்பட்டது போலக்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 26 JUN 1911 MADRAS.

காண்கிறது. இப்பொழுதும் இவர் வசிக்கும் ஜில்லாக்களிலுள்ள மற்ற ஜனங்களைக் கேட்டால் இவர்களின் பராக்கிரமமும் முரட்டுத்தனமும் தைரியமும் நன்ருய்ப் புலப்படும். முன்காலத்தில் தென்னிந்தியாவில் ஆண்டுவந்த அரசர்களுக்கும் தற்காலத்துள்ள ஆங்கிலேய துரைத்தனத்தாருக்கும் அவர்கள் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் இம்மறவர்கள் முன்னோர்கள் செய்த இடுக்கண்களை யோசித்தால் மனம் துடிக்கும். பாளையங்கோட்டை, மறவாக்குறிச்சி திண்டுக்கல் முதலியவைகள் இவர்கள் நாடுகளாயிருந்தவைகள். ஆனால் இச்சாதியாரில் பெரும்பாலும் இப்பொழுது ஆங்கிலேய துரைத்தனத்திற்கு அடங்கி யொடுங்கி மரியாதையாய்ப் பயிரிடுங் குடிகளாய்விட்டார்கள். இவர்களில் பல சாலிகளைப் பட்டாளத்தில் அமர்த்தலாம். அம்மாதிரி செய்தால் இவர்களும் பிழைப்பார்கள்; கொள்ளை யடித்தலும் இந்த நாடுகளில் நின்றுவிடும்.

இந்த ஜாதியார் ஏழுவகை வகுப்பினர். செம்புநாட்டு மறவர்; கொண்டையன்கோட்டை மறவர்; அப்பனூர் நாட்டுமறவர்; அகதமறவர்; ஓரையூர் மறவர்; உப்புக்கோட்டை மறவர்; குறிச்சிக்காட்டு மறவர். இவை தவிர உட்பிரிவுகளுமுள. **இவர் நடையுடைபாவனை**—இவர்களை வீர சைவர்களென்றே கூறலாம். இப்பொழுதும் இராமநாதபுரத்துச் சேதுபதி மஹாராஜாவைப் பார்த்தால் தெரியவரும். இவர்கள் நல்ல சிவபக்தர்கள்தான். இராமநாதபுரம் புதுக்கோட்டை முதலான இடங்களில் நவராத்ரி யுத்ஸவம் மிகவும் விமரிசையாய் நடக்கும். ஆனால் தமிழ்ப்புராணங்கள் முதலானவை படியாத தாழ்ந்த மறவஜாதியார் பத்ரகாளி மதுரை வீரன் கருப்பணசுவாமி முதலான சில்லரை தெய்வங்களைக் கொண்டாடுகிருர்கள். இவர்கள் தெய்வபக்தியுள்ளவர் என்பதில் ஆக்ஷேபனையே கிடையாது. இவர்கள் வழக்கங்கள் பெரும்பாலும் மற்ற இந்துக்கள் மாதிரிதான். ஆனால் அண்ணன் தம்பிகளுக்குள் பெண்பிள்ளை கொடுத்து வாங்குவது வழக்கம். மேலும் செம்பு நாட்டு மறவர் தவிர மற்றவர் கைம்பெண் கலியாணம் நடத்துகிருர்கள். இங்கிலீஷ்காரர் ஏற்பாடுமாதிரி புருஷனை விலக்கிவைத்துக் கலியாணம் நடத்துவதும் உண்டு. இவைகளை ஆலோசித்தால் ஆசார சீர்திருத்தத்தில் மேல்நாட்டு நாகரீகத்திற்கு முன்பே இவர்கள் முதன்மையானவர்கள் என்று புலப்படுகிறது. இதனுல் நாம் தெரிந்துகொள்ளும் விஷயம் யாதெனில் திராவிடர்களில் இந்த வழக்கமிருந்ததாகத்தான். இது இப்படியிருக்க இவர்களில் கணவனுடன் இறத்தலாகிய உடன்கட்டை யேறுதலிருந்ததாகத் தெரியவருகிறது. ஆங்கிலேய துரைத்தனத்தார் தடுக்கும் வரை இராமநாதபுரம் மகாராணிகள் செய்துகொண்டுவந்தார்கள் என்று தெரிகிறது. இதற்கு அடையாளமாக இப்பொழுதும் இராமேசுவரத்திற்குப் போகும் வழியில் அக்கா தங்கச்சி சத்திரங்களைப் பார்க்கலாம். ஆனுல் ஒரு விஷயத்தைப்பார்த்தால் நிரம்பவும் கட்டுப்பாடுள்ளவர்கள் என்று ஏற்படுகிறது. அதாவது செம்புநாட்டு மறவர்களில் மூன்று உட்பிரிவுகளுண்டு. அவை தொண்டைமான்களை, பிச்சகளை மரக்கல்களை என்பன. பிராமணரிலுள்ள கோத்ரமாதிரி இக்களைகள் கருதப்படுகின்றன. பிராமணர்கோத்ரம் விட்டுப் பெண் கொடுப்பதோ வாங்குவதோ அதேமாதிரி இந்த ஜாதியார் ஒருகளைவிட்டு ஒருகளையில் கலியாணஞ் செய்வதே யொழிய ஒரே களையில் செய்வதில்லை. கலியாணம் நடத்தும் விஷயம் இம்மாதிரி கட்டுப்பாடுண்டு. பெண் மாப்பிள்ளை யிருவருக்கும் பிராமணர்களிலுள்ள மாதிரி தங்கள் கலியாண விஷயத்தில் ஒன்றுமில்லை. பெண்ணைச் சேர்ந்த பெரியோர்களும் மாப்பிள்ளையைச் சேர்ந்த பெரியோர்களும் தங்களுக்குள் தீர்மானஞ் செய்யவேண்டியதுதான். தீர்மானமான பிறகு பிள்ளைவீட்டுக்காரர் பெண்வீட்டுக்குப் போய் பெண்கழுத்தில் தாலி கட்டவேண்டியதுதான். பிறகு பெண்ணைப் பிள்

வீட்டிற்கு அழைத்துப்போய் விருந்தளிக்க வேண்டியதுதான். ஆனால் இச்சடங்குகள் எல்லாம் ஒரே ஸமயத்தில் நடக்கவேண்டுமென்பது அவசியமில்லை. சில ஸமயங்களில் நாலு ஐந்து குழந்தைகள் பிறந்த பிறகு கூட நடத்துவார்கள். எப்படியிருந்தபோதிலும் இச்சடங்குகள் புருஷன் இருக்கும்போதே நடத்தித் தீரவேண்டும். ஒரு ஸமயம் இச்சடங்குகள் நடத்தாமல் புருஷனிறந்துவிட்டால் அந்த(ச்சென்ற)புருஷன் பிணத்தின்முன்பாகப் பணம்கடன் வாங்கியாவது இச்சடங்குகளை நிறைவேற்ற வேண்டும். இம்மாதிரி நடத்தினால் தான் அந்தஸ்திரி தன் தாலியையெடுத்துவிட்டு வேறொரு புருஷனை மணம் புரியலாம். இவர்கள் நடத்தும் தொழிலைப்பார்த்தால் முன்காலத்தில் இவர்கள் யுத்தவீரர்களாயிருந்ததாகவும் அதற்கு மானியமாக நிலங்கள் அனுபவித்து வந்ததாகவும் தெரியவருகிறது. இப்பொழுதும் அனேக கிராமங்களில் இவர்கள் காவல் தொழில் புரிந்து ஜீவனம் பண்ணி வருகிறார்கள். கனம்பொருந்திய ஜஸ்டிஸ் ஸங்கர நாயர் கிராம பந்தோபஸ்தில் இச்சாதியார் முற்காலத்தில் செய்துவந்த உபகாரத்தைப்பற்றித் தெளிவாய் கூறியிருக்கிறார். அத்தகைய கிராமக் காவல் நம்தேசத்தை விட்டு விலகினது நம் அதிர்ஷ்டக்குறைவுதான். இப்பொழுதுள்ள அதிகாரிகள் இக்காவலைத் திரும்பவும் நம்கிராமங்களில் ஏற்படுத்துவார்கள் என்று மனப்பூர்வமாய் நம்புகிறோம்.

வி. ஜி. சுப்பய்யாவய்யர், பீ.ஏ., எல்.டி.

பாபவிமோசனம்.—மண்ணிற் புரண்டு உடம்பை யழுக்காக்கிக்கொள்வது குழந்தையின் சுபாவமாயினும், அதன் தாய்மாத்திரம் அதை அழுக்குடன் இருக்கவிடாமல் அடிக்கடி நீராட்டுகின்றாள். அதுபோலவே பாவம் புரிவது மனிதனது சுபாவமாயிருப்பினும், அவன் பாவம் புரிவது வாஸ்தவமாயின், அவனைப் பாவத்தினின்று விமோசனம் செய்விக்க எம்பெருமான் ஏற்படுத்தும் சாதனம் அதைவிட இருமடங்கு வாஸ்தவமாயிருக்கின்றது.

## நக்ஷத்திர நிலையைக்கண்டு நாழிகை கணிக்கும் வகை

### FIXING TIME BY THE POSITION OF STARS

விவேக போதினியின் 1911 ஞு ஜனவரி மாதத்திய 7-ம் நெ. சஞ்சிகையில் மேற்கண்ட தலைப்பின் கீழ் பிரம்மஸ்ரீ நாராயணசாமி அய்யரவர்களால் எழுதப்பட்டிருக்கும் விஷயத்தைக் கவனித்துப் பார்த்ததில் அது காலமறிவதற்கு ஒரு நிச்சயமான வழியாகவேயிருக்கிறது. அதற்காக அய்யரவர்களுக்கு யாவரும் வந்தனம் செய்யத்தக்கதே. ஆகிலும் மிகவும் படித்தறிந்தவர்களைக்கொண்டு அந்தப்படிக்குள்ள கணக்கெடுக்க வேண்டியதாயிருக்கிறது. சொல்பமாய்க்கற்றவரும் சுலபமாயறியத்தக்க ஓர் முறையுண்டு. மிகவும் விஸ்தாரமாய்ப் பிரசுரமாகிற இவ்விவேக போதினியின் மூலமாய் அம்முறையை வெளியிட்டால் வெகுஜன உபகாரமாயிருக்குமென்றெண்ணுகிறேன். அஃதாவது

1. 27 நக்ஷத்திரங்களையும் திட்டமாயறிந்து கொள்ளவும். பிறகு இரவில் தனக்கு வேண்டிய நேரத்தில் தலைக்கு நேராய் உச்சத்திலிருக்கிற நக்ஷத்திரத்தைப் பார்த்துக்கொள்ளவும்.

2. அடியில் கண்ட பாட்டைப் பாடஞ்செய்து கொள்ளவும். (அதில் செய்யுள் இலக்கணம் பார்க்கவேண்டாம்)

சித்திரைக்குப் பூசமுதல் சீரா வணிக்கனுஷம்
உத்த தனுசக் குத்திரட் டாதிமுதல்
எதச் சமானலுமி ரண்டேகா லில்பெருக்கி
மாதமைந்து தள்ளி மதி.

3. இப்பாடலின் கருத்து. சித்திரை 1வ முதல் ஆடிமீ முடிவுவரை என்றைக்கு நாழிகை பார்க்கிறதா யிருந்தாலும் பூச நக்ஷத்திரத்திலிருந்து உச்ச நக்ஷத்திரம் வரையில் எண்ணிக் கொள்ளவும்.

ஆவணிமீ 1வ முதல் கார்த்திகை முடிவு வரையில் என்றைக்கு நாழிகை பார்க்கிறதாக

யிருந்தாலும் அனுஷ நக்ஷத்திரம் முதல் உச்ச நக்ஷத்திரம் வரையில் எண்ணிக்கொள்ளவும்.

மார்கழிமீ 1௨ முதல் பங்குனி முடிவுவரையில் என்றைக்கு நாழிகை பார்க்கிறதா யிருந்தாலும் உத்திரட்டாதி முதல் உச்ச நக்ஷத்திரம் வரையில் எண்ணிக்கொள்ளவும்.

அப்படி எண்ணிவந்த தொகையை $2\frac{1}{4}$-ஆல் பெருக்கி வந்த தொகையில் அந்தந்த நான்கு மாஸங்களில் சென்றுபோன ஒவ்வொரு மாஸத்துக்கு 5-நாழிகைவீதம் கழித்துவிட்டால் நாம் பார்க்கும் காலத்தின் நாழிகை திட்டமாய் ஏற்படும்.

குறிப்பு:—ஒவ்வொரு முழுமாஸத்துக்கு 5-நாழிகை வீதமும் ஒரு மாஸத்திற்குள்பட்ட நாள்களுக்கு நாள் ஒன்றுக்கு 10-விநடி வீதமும் கழிக்கவேண்டியது. (ஒரு நாழிகை=60-விநடி.)

உதாரணம்

4. ஆனிமீ 21௨ ராத்திரி ஒரு நேரத்தில் ஆகாசத்தைப் பார்ப்போம். விசாக நக்ஷத்திரம் உச்சமாயிருக்கிறது.

| | |
|---|---|
| மேற்கூறிய விதிப்படி பூசம் முதல் விசாகம் வரையில் கூடிய நக்ஷத்திரம் 9-யை $2\frac{1}{4}$-ஆல் பெருக்கிவந்த நாழிகை | $20\frac{1}{4}$ |
| இதில் சித்திரை வைகாசியாகிய இரண்டு மாஸத்துக்கு நாழிகை | 10 |
| ஆனிமீ 21௨க்கு நாள் ஒன்றுக்கு 10 விநடியாக 210-விநடிக்கு நாழிகை | $3\frac{1}{2}$ |
| ஆக | $13\frac{1}{2}$ |
| பாக்கி நாழிகை | 68 |

அஸ்தமித்து 68-நாழிகை யென்று தீர்மானிக்கவும்.

கடிகார ரீதியாய் மணி ஒன்றுக்கு $2\frac{1}{2}$-நாழிகை வீதம் கணக்கிட்டு 8-மணி 42-மினிட்டென்றும் தீர்மானிக்கலாம்.

இதை எழுதியிருப்பது சற்று விஸ்தாரமாயிருப்பினும் அரை நாழிகைக்குள் அறிந்துகொள்ளலாமென்று நம்புகிறேன்.

டி. ஸ்ரீநிவாஸாசாரியார்.

# ஒற்றை அலகு நடுதல்

## SINGLE PLANTING OF PADDY

சென்ற சில வருஷங்களாக நெல்நாற்றுக்களை ஒவ்வொரு அலகாக நடுவதால் மிகுந்த பிரயோஜனமும் இலாபமுமிருப்பதாக விவசாய நிபுணர்களால் வற்புறுத்தப்பட்டு வருகிறதல்லவா? அந்த ஏற்பாடு நமக்கு நவீனமல்ல வென்பதற்கும் நம்முன்னோர்கள் அதன் பிரயோஜனத்தை அறிந்தே யிருக்கிறார்களென்பதற்கும் நமது புராதன கிரந்தங்களில் ஆதார மிருக்கின்றது. விசாகதத்தர் என்னும் கல்வி நிபுணரால் இயற்றப்பட்ட "முத்திரா ராக்ஷஸ" மென்னும் நாடகத்தின் முதல் அங்கத்திய 3-வது சுலோகம் அடியிற்கண்டபடி யிருக்கிறது

चीयते बालिशस्यापि सत्क्षेत्रपतिता कृषिः ।
नाशाले स्तम्बकरिता वप्तुर्गुणमपेक्षते ॥

இதன் பொருள்.—அறியாதவனுக்கும், நல்ல நிலத்தில் விடப்பட்ட விதையானது விருத்தியடைகிறது. சம்பாபயிருக்குக் கூட்டமாகும் தன்மையானது விதைப்பவனுடைய குணத்தை யபேட்சிக்கிறதில்லை. இந்தக் கிரந்தத்துக்கு வியாக்கியானமெழுதிய துண்டிராஜ் என்பவர் **"शाले स्तम्बकरिता"** என்பதற்கு அடியில்கண்டபடி அர்த்தம் எழுதுகிறார். **शालेः=एकस्यशाल्यङ्कुरस्य** (ஒரு சம்பா அலகு) **स्तम्बकरिता=सुक्षेत्रगुणकृत निषिडीधवनगीलता** (நல்ல நிலத்தின் குணத்தினால் நெருக்கமாகும் சாமர்த்தியமானது.)

நல்ல நிலத்தில் கொத்துக்கொத்தாய் நடுவதைக்காட்டிலும் ஒவ்வொரு அலகாக நடுவதில் விசேஷமிருப்பதால் தான் அதை இந்த மகான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறாரென்பது ஸ்பஷ்டமாய் விளங்குகிறது.

ப்ரொபஸர் வில்ஸன் என்பவர் இந்தக்கிரந்தம் கி. பி. 11. அல்லது 12-வது நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்றும், பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருந்த காசிநாத் திரியம்பக் டிலாங் இன்னும் சில நூற்றாண்டுகளுக்கு முந்தியிருக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். வியாக்கியானம் மட்டில் கி. பி. 1713-ம் வருஷத்தில் எழுதப்பட்டதென்று நிச்சயமாய்த் தெரிகிறது.

வி. பஞ்சாபகேச அய்யர்.

# குடித்தன முறைமை

## DOMESTIC ECONOMY

குடித்தன முறைமையின் முக்கியத்தன்மை யாரும் அநுபவத்தில் அறியக்கூடியது. ஐசுவரியவான்கள், நடுத்தரத்தார், ஏழைகள் என்ற முப்பிரிவினரும் இவ்விஷயத்தைக் கவனமாகப் பார்த்தல் வேண்டும். ஏனென்றால் ஏழைகளுக்கோ இது இன்றியமையாததாகும். நடுத்தரத்தார் வரவுக்குமிஞ்சி செலவு செய்யாமல், தக்கவாறு செல்வஞ்சேர்க்க வேண்டுமென்றெண்ணுமிடத்து, குடித்தன விஷயத்தில் சாமான்கள் வீணாய்ப்போகாதபடி கவனித்தல் முதலியன அவசியம். ஐசுவரியவான்கள் எப்படிச் செலவழித்தாலு மென்னவென்று சொன்னபோதிலும், அவர்களுக்குங்கூட அனேகந்தடவைகளில் இஷ்டப்பட்ட சாமான் வாங்குதல் தட்டக்கூடும். அவர்கள் வாங்குஞ் சாமான்களிலும், அவற்றைப் பிரயோகிக்கும் விதங்களிலும் தக்கவாறு கவனம் ஊன்றினரேல், இன்னுமதிகச் சொத்து சேர்க்கலாமென்பதும், தமக்கு வேண்டிய மற்றையச் சாமான்களைத் தடையின்றி வாங்குதல் கூடுமென்பதும், விளங்கும். ஆகவே இவ்விஷயத்தை யெல்லோருங் கவனித்திடல் தகுதி.

மனித வாழ்விற்கமைந்த வெவ்வேறு வகைப்பட்ட தொழில்களும், நடத்தைகளும், உயிர் வளர்ப்பதற் குதவுவன. உயிரையே தக்கவாறு பிரயோகித்து ஆத்ம பயன் அடைவதற் குதவுவன என விருபாற்றாய்ப் பிரித்தல் கூடும். சகல விதமான தொழிலாளிகள், கப்பல் ஓட்டுபவர், மின்சாரம் புகைவண்டி ஓட்டுபவர், அணைக்கட்டு, பாலம், ஏரி, குளம் ஏற்படுத்துபவர், அரசாட்சி செய்பவர் என்னும் இவர்கள் கூட துயரம் தொந்தரவு இன்றி, உயிர் வளர்ப்பதற்கான ஏற்பாட்டையே செய்கிறார்கள். இது மிகவும் அத்தியாவசியமானதே. ஏனென்றால் இவ்விதவுதவி இல்லாவிட்டால் வேறெவ்வித முயற்சியும் முடியாதுபோகும். வயலில் விதை விதைத்தவன் அதை அறுத்து வீடு சேர்க்குமுன்னர் கள்ளர் கொண்டுபோய் விடுவார்களானால், அல்லது மிருகங்கள் அழித்து விடுமானால் உயிர் வாழ்வதெங்ஙனம் முடியும். இனி மற்றது ஆத்ம பயனுக்காய் கல்வியறிவு, தத்துவஞானம், மதக்கோட்பாடு, சில்பம், சித்திரம், முதலியவற்றைப் பற்றிய சாஸ்திரப்பழக்க முதலானவை.

ஆகவே நாமெடுத்துப் பேசப்போகிற விஷயமாகிக் குடித்தன முறைமை இவ்விரு பாலதாய வகுப்பில் முதல் வகுப்பிற் சேர்க்கப்படுதல் வேண்டும். இதை யெடுத்துரைக்குங்கால் மற்றைய மேன்மையான விஷயங்கள் தள்ளுபடியாவன வென்றில்லை. அவற்றைப் பற்றி அடிக்கடி அநேகர் வெகுவான திறத்துடன் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இதுவரை எமக்குத் தெரிந்த மட்டிலும் குடித்தனமுறைமை யென்ற விஷயத்தைக் குறித்து யாவரு மதிகமாகச் சொல்லியிருப்பதில்லை.

இத்தேசத்திற்கு வரும் ஐரோப்பியர்கள் தங்கள் மனைவி மக்களுடன் பெரிய விடுதிகளில் குடியிருந்து சாப்பிட்டுங் குடித்தனத் தொந்தரவை யொழித்து விடுகிறார்கள். ஆனால் இத்தகைய சௌகரியந் தேடிக்கொள்ள பண விரயஞ் செய்வது சொல்லி முடியாது. வெளியே வீடுகள் கிடைக்கும் வாடகையைவிட அதிகமாயும், வீட்டிடங் குறைவாயுஞ், சாப்பாட்டுச் செலவிற் கிரட்டிப்பாயும், குழந்தைகளுக்கடிக்கடி வேண்டிய தின்பண்டகங்ளுக்கொவ்வோர் தடவை பணஞ் செலவழிப்பதாயும் வீணே பணத்தை நாசப் படுத்துகிறார்கள். சிலர் சமையல் செய்யுங் கஷ்டத்தைக் குறித்து விடுதியினின்று உணவை வாங்கிக்கொண்டு தம் வீட்டிலேயே வைத்துச் சாப்பிடுகிறார்கள். இவை யிரண்டு விதங்களிலுமுண்ணு முணவு சுத்தமில்லாமலும், உடம்புக்குப்பிடிக்காததாயும், அதிகபணம் கொடுத்து வாங்கப்படுவனவாயுந் தமக்கு வேண்டிய சமயத்திலெல்லாங் கிடைக்க முடியாததாயும், இன்னுமுரைக்கத் தகாதவண்ணம் அசுசி

யாயு மிருக்கின்றன. இப்படி நடத்தப்படுகிற குடித்தனத்தின் செலவு 400, 500 ரூபாய் என்ருல் அதன் பயனின்மை தெற்றென விளங்கும்.

இவர்களிவ்வாறின்றி வீட்டில் சரிவரக் குடித்தன முறை நடாத்தி வருவரேல் சிறிது கவனமுடையவராயிருத்தலின் எவ்வித சௌகரியமுமிதில் மூன்றில் ஒரு பங்கில் வெகு சாதாரணமாகச் செய்து கொள்ளலாம்.

உலகில் எவ்வளவு ஜனங்கள் உண்ண உணவின்றி வருந்துகிருர்களென்று யோசிக்குமிடத்து இவரழிக்கும் பொருளைக்கொண்டு எவ்வளவோ ஜனங்கள் சந்தோஷமாயிருக்கலாமே என்று மனதில்படுகிறது. மேலும் தனக்குச்செய்துகொள்ளுவதுபோலஅவ்வளவு ருசியாயும் சுத்தமாயும் ஒவ்வொன்றுஞ் செய்யப்படமாட்டாது. கடைசியாய்ப் பார்க்குமிடத்து எல்லோரு மிவ்வளவு செலவுசெய்து சாப்பிடுதல், குடியிருத்தல் முதலியன முடியாதகாரியம். இவ்வண்ணஞ் செலவு செய்து கொண்டிருக்கும் பிறதேசத்தார் தம் சுயதேசத்துக்குப் போனல் தமக்குத் தாமே செய்துகொள்ளத்தான் வேண்டியிருக்கிறது ஆகையா லெவ்விதத்திலு மிவ்விஷயமாகத் தெரிந்துகொள்வது பலவகையாகப் பிரயோஜனப்படுவதனையே.

முக்கியமாக இக்காலத்தில் இந்திய பெண்கள் அனேகர் சிறு வயதிலேயே வாழ்கைப்பட்டு, தமது கணவன் மாற்றப்படு மிடங்களுக்குப் போய் தாமே தனி நின்று குடித்தன நடத்த வேண்டி வருகிறது. ஒரு புதிய ஊரிற் குடியிருக்கவேண்டியதாலும் சொல்ப சம்பளத்திற் குடியிருக்கவேண்டியதாலு மதிகமாய்க் கஷ்டப்படுகிருர்கள். அவர்களுக்கு முக்கியமாக உதவுமாறு நாமிதுமுதல் இனி யடிக்கடிக் குடித்தன முறைமைப்பற்றியு மதைச்சேர்ந்த மற்ற விஷயங்களைப்பற்றியுமெழுதி யவர்க்குதவி புரிய எண்ணுகிருேம். இங்கே கூறப்போகிற விஷயங்கள் வெகு சாதாரணமாயும், வீட்டு முறைமையிலுள்ள ஒவ்வொரு சிறு விஷயத்தையும் பற்றியதாயு மிருக்கலாம். என்ருலுமடிக்கடியிவ்விஷயங்களிற் பழகியவர்கள் மட்டிலுமே அவற்றினருமையையும் முக்கியத்தையுமறிந்து கொள்வார்கள்.

இனிக் குடித்தனமுறைமை யென்னும் விஷயத்திற்குஞ் சமையல் செய்யும் விதம் முதலியவைக்கு மதிக சம்பந்தமில்லை. பிற் கூறியவிஷயம் முற்கூறியதில் ஒரு சிறு பாகமாகும். சமையல் முறையைப்பற்றி ஏராளமான புத்தகங்களிருக்கின்றன. நாம் கூறப்புகுவது சமையல் முதலிய தெரிந்த பெண்ணென்று எவ்விதமாய் மற்றக் குடித்தன விஷயங்களைப் பார்த்துக் கொள்ளல்வேண்டும் என்பது பற்றியாகும்.

ஆகவே இப்பக்கங்களிலநேக விஷயங்களைப் பற்றிச் சொல்லுவோம். இவற்றில் முதலிற் கவனிக்கவேண்டியது வீட்டைப்பற்றியதாகும்.

### வீடு

வீடுகளுக்கு அனேகமாய் **சேமின்ட்** தரை அல்லது **சேங்கல்** தரைகளுண்டு. நாட்டுப் புறங்களில் அனேகமாக வீடுகளைச் **சாணமிட்டு** மெழுகுகிருர்கள். மண் தரை ஒன்றுக்குமட்டுமே இங்ஙனம் மெழுக வாய்ந்தது சாணம். படப்பட மண் தரைகளிறுகிவருவது வீட்டுக்கு முன்னலே கோலமிடு மிடங்களில் சாணமிட்டுக் கடினமாயிருப்பதிலிருந்து காணலாம். மண் தரைகளே முன் காலத்திலிருந்தபடியால், அத்தரைகளுக்கு உறுதி கொடுக்கும்படி சாணமிட்டு மெழுகுதல் வேண்டுமென்று நம்முன்னேர் விதித்தார்கள். இக்காலத்தில் **சேங்கல்** தரைகளும் அதற்குமேல் **சேமின்ட்** தரையுமுள்ள விடங்களில் அங்ஙன மெழுகுவது சாணத்திலுள்ள குப்பையைப் பரப்புவதும், சாணத்தினது நாற்றத்தை உட்கொள்வதுமே யாகும். இந்நாற்றம் மண் தரையிற் பட்டுச் சிக்கிரத்தில் சுத்தமாய்விடும். அதைச் செமின்ட்மேல் உபயோகிப்பவர் சாணத்

தின் பயனை யடையாமல் அதன் கெடுதியையே அடைகிறார்கள்.

இவ்விதத் தரைகளுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால், தேங்காய் நார் கொண்டாவது, விளக்குமாறு கொண்டாவது,கொஞ்சங் கொஞ்சமாய்த் தண்ணீர்விட்டு இவற்றால் தரையைத் தேய்த்துக் கழுவுவதே வேண்டும். அநேக வீடுகளில் தரைகளைக் கழுவிய நீர் வெளியே போக நடைவழிகளில் துவாரங்களிருப்பதில்லை. அப்படி யில்லாத வீடுகளில் அவ்விதமாக துவாரஞ்செய்ய முதல் முதல் ஏற்பாடு செய்ய வேண்டியது. ஏனென்றால் கழுவுவது, வீட்டைப் பலவிதமாகச் சுத்தம் செய்கிறது; தூசி துரும்புமட்டு மல்லாமல் சிறு ஜெந்துக்க ளிருப்பவற்றையு மிப்படிக் கழுவுவது, சுத்தமாக நீக்கிவிடும். இன்னும் அவ்விதமாய்க் கழுவின தரை பளப்பளப்பாய்க் கண்ணுக்கினிமை யாயுமிருக்கும். காற்றுப்படும் இடமாயிருந்தால் வெகு சுகமான குளிர்ந்த காற்றாய் அவ்விதத் தரையில் பட்டுவரும். எவ்விதத்திலுங் கழுவ முடியாத சமயங்களில் தரையை நன்றாய் அலகிட்டுத் தண்ணீர் தெளித்தல் வேண்டும்.

இரண்டாவதாகக் கவனிக்கவேண்டியது வீடுகளில் ஒட்டடை முதலியன சேரவிடாதிருத்தல். ஒட்டடையாவது, எட்டுக்கால் பூச்சிகளினுடலிலிருந்து கழிக்கப்படுவது. இவ்வோட்டடை இருப்பது அசுத்தமாக விருப்பதன்றியும், பூச்சிகளில்லாத ஒட்டடையைச் சுற்றி அனேகங் கொசுக்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். பின்னுஞ் சமையல் செய்யுமிடங்களிலிவ்வித ஒட்டடை இருக்குமாயின், புகை அதிற்பட்டுக் குகையறை யெனப்படும். சமையல்செய்து வைத்திருக்கும் பதார்த்தங்களில் விழுந்து விடுதல்கூடும். ஒட்டடை அடைந்த இடங்கள் கண்ணுக்கழகில்லாமலும், கொசு முதலியன அடைதற்கிடமாயு மிருப்பதால் உடனே எடுத்தல் வேண்டும். இது முதலியன செய்தல் குடித்தனமுறை நடத்துவோர் செய்யவேண்டிய செய்கைகளாம்.

# கல்வி

## LEARNING

கல்வியானது ஆண், பெண்ணாகிய இரு திறத்தார்க்கும் இன்றியமையாததாம். இவ்விருதிறத்தாரும் தங்கட்கு இனி உபயோகமாயிருக்கும் கல்வியைக் கற்பது அவசியம். மனிதர் தாம் சம்சாரிகளாக விருக்குங்காலையில் செய்யத்தக்கவை இவை செய்யத்தகாதவை இவையென்றறிவதற்குக் கல்வியே முக்கிய சாதனமாகவிருக்கிறது. ஆகையால் நம்மில் ஒவ்வொருவரும் கல்வி என்பதென்ன? எத்தன்மையது? எப்பிரிவினையுடையது? எங்ஙனமடைவது? ஆகிய இவைபோன்ற விஷயங்களை ஆலோசித்துப்பார்த்தால் உண்மையில் கல்வி ஒவ்வொருவருக்கும் மிக்க அவசியம் என்பது வெளியாகும்.

கல்வி என்னும் சொல்லுக்குக் கற்றுக்கொள்ளல் என்பது பொருள். ஒவ்வொருவனும் தன் சௌகர்யாதிகளுக்குத்தக்கபடி தன்னுடைய வாழ்நாட்களில் எவ்விதமான விஷயங்களைக்கற்றால் தனக்குப் பயன்படுமோ அவ்விதக் கல்வியைக்கற்றல் மேன்மையானதென்று முன்னமேயே சொல்லி யிருக்கிறேன். கற்பதற்கு அனேக விஷயங்களிருக்கின்றன. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விஷயத்தில்தான் ஆசையிருக்கும். அவன் தன்னிஷ்டப்படி அதையே கற்றுத்தெளிந்தானானால் அக்கல்வியானது பிற்காலத்தில் மிகுந்த உபயோகத்தை விளைவிக்கும். உதாரணமாகத் தத்வம், கணிதம், தார்க்கிகம், வியாகரணம், பௌதிகம், சிற்பம், சித்திரம், ரசாயனம், வானசாஸ்திரம், பூகோளம், யோகம் முதலிய அனேக சாஸ்திரங்க ளிருக்கின்றன. ஒருவனுக்குச் சித்திரம் வரைவதில் மிக விருப்பமிருக்குமாயின், அவன் அதிலேயே தன் கவனத்தைச் செலுத்தவேண்டும். அப்படி அவன் அதிலேயே தன் கவனத்தைச்செலுத்த ஒரு இன்பமுமுண்டு. தான் மேற்கொண்டதில் ஊக்கத்துடன் முயன்று அக்காரியத்தில் பூர்த்திபெற வேண்டும். இதற்குத்தான் கல்வி என்று பெயர்.

நம் முன்னோர்கள், இவ்வாறு பல பிரிவுகளையுடைய கல்வியை எல்லாருக்கும் கற்பித்து வந்தனர். எவ்வெவனுக்கு எதில் மிகுந்த ஆசையோ அதையே அவனுக்குக் கற்பித்து வந்தனர். அவன் அதில் பாண்டித்தியம் அடைந்து தன் புத்திரனுக்கும் அதையே போதித்தான். இப்படி வம்சபாரம்பரையாக ஒரேவித கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. இவன் இன்ன கல்வியைக் கற்று அதனால் சீவிக்கிறான் என்று குறிப்பிக்கும்

பொருட்டு அக்கல்வியையுடையவருக்கு ஒரு பெயரிடப்பட்டது. இதுமாதிரியே எல்லா சாஸ்திரங்களும் வெவ்வேறு இனங்களுக்குக் கற்பிக்கப்பட்டு வந்தன. தையல் வேலை கற்ற ஒருவன் வியாகரணத்தில் தன் வாழ்நாட்களைச் செலுத்துவதில்லை. இப்படியே சாதிகள் உண்டாயின. பிராமணன் சாதாரணமாய் மிகுந்த அறிவுள்ளவனுதலாலும் அவனுக்குத் தேகபலம் சற்றே குறைவானதாலும் படித்து மனதில் சிந்தித்துக் கற்கவேண்டிய வேதம், கணிதம், வியாகரணம், முதலியவற்றை அநேக பரம்பரையாகக் கற்றுவந்தனன். இப்படி ஒரே இரத்தத்தினின்றுந் தோன்றி ஒரே வேலையில் பழகிவிட்டபடியால் அதைவிட்டு வேறு கல்வியைக்கற்க இயலாதவனுகின்றான். ஆனுலிப்பொழுது பிராமணரிற் சிலர் கைத்தொழில்களைக் கற்கின்றனர். ஆயினும் அவ்வேலையையே வம்ச பரம்பரையாகச் செய்துவரும் மற்ற சாதியாரைப் போலவ்வளவு சாதுர்யமாயும், கஷ்டப்பட்டும் அவ்வேலையை இவர்கள் செய்யமுடியாமற் போகின்றனர். இதேமாதிரிதான், க்ஷத்திரியனும் இராசாங்க விஷயங்களை யறிந்து, துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யவல்லவரானுர்கள். அயல் தேசங்கட்குச் சென்று வாணிபஞ் செய்வதில் வல்லவர்கள் வைசியர்களேயாம்.

சூத்திரரும் அனேகவிதமான கைத்தொழில்களைக் கற்று அதனுல் வரும் பயனை யடைகின்றனர். கைத்தொழில்களில் அனேக பிரிவுகளிருக்கின்றபடியால், சூத்திரரும் தங்களுக்குள் அனேக சிற்பிரிவினர்களானுர்கள். இதனுலேயே நம்மிந்தியாவில், தச்சன், கருமான், தட்டான், அம்பட்டன், வண்ணுன் முதலாகிய எண்ணிறந்த சிற்பிரிவினர் இருக்கின்றனர்.

இவ்வகை நூல்களில் சில இம்மையிலிலும், மற்றவை இம்மை, மறுமையாகிய, இவ்விரண்டிலும் உபயோகமுள்ளவை. நல்லறங்களைப் போதிக்கும் நூல் இம்மையில் நாம் செய்யவேண்டிய இல்லறத்தைப்பற்றிப் போதிக்கின்றது. இவ்வில்லறத்தை யாதொரு இடரும் வராவண்ணம் பொருள் சம்பாதித்தல், செலவு செய்தல், ஆகிய இவற்றுல் நடத்தவேண்டும். யாம் எவ்விதத்தில் பொருள் சேகரிக்கவேண்டும், எப்படி அவற்றைச் செலவு செய்யவேண்டும் ஆகிய இவ்விஷயங்களைப் போதிப்பது பொருணூல். பின்பு தன் இல்லாளுடன் கூடிச் சுந்தர புத்திரனை யீன்று சுகித்திருந்து அப்புத்திரனுடைய உதவியினுல்தான் முக்தியடைய வேண்டிய மார்க்கத்தைத் தேடிக்கொள்ளல் மிகவும் அவசியம். ஆகவே அறம், பொருள், இன்பம், வீடு என்கிற தர்மார்த்த காமமோக்ஷமாகிய புருஷார்த்தங்களை யடைவதும் இக்கல்வியினுலேயே. இது பற்றியே கல்வியானது அனேக பிரிவுகளையுடையதாகவிருக்கின்றது. இப்பிரிவுகளை அடியில் சிறிது ஆலோசிப்போம்.

அறநூலானது மனிதர்களிவ்வுலகில் செய்யவேண்டிய கடமைகளைப் போதிக்கின்றது. இவ்வறநூலே, நாமிறந்தபிறகு நற்கதியை யடைவதற்கும் முக்கிய சாதனமாக விருக்கிறது. செய்யத்தக்கவை இவை, செய்யத்தகாதவை இவை, என்று இவ்வறநூல் காட்டும் கர்மங்களை ஒருமனிதன் செய்யவேண்டும். வெறும் படிப்பிலும் தாம் அறிந்துகொள்வதை ஆசாரமாகக் கடைபிடித்து ஒழுகுவதே சிறந்ததாகும். இது பற்றியே,

"கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

என்றார் பொய்யாப்புலமைத் திருவள்ளுவனுரும்.

பொருணூல், நாம் இவ்வுலகில் சுகமாய்ச் சீவிப்பதற்கு ஏதுவாகிய திரவியத்தை எப்படி அடைவது, எங்ஙனம் அவற்றைப் பாதுகாத்து விருத்தி செய்வது, ஆகிய இவைகளை போதிக்கின்றது. இப்பொருணூலில் அனேக பாகங்கள் உண்டு, அவை, வியவசாயம், சிற்பம், வாணிபம், கணிதம் என்பவைகளே. இவைகளுள் வியவசாயமானது பாபஹேதுவான காரியங்களை யுடைத்தாயிராததாலும், அதிகபொருளைத் தரக்கூடியதாய் இருப்பதாலும், சிறந்ததாகக் கொண்டாடப்படுகிறது. இதுபற்றியே,

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வகையாய் சன்மார்க்கத்தில் பொருள் சம்பாதித்து, அதைத் தானுமனுபவித்து, பிறருக்கும் உதவி செய்தலே, இல்லற வாழ்க்கையாம். இப்படி இல்லறத்தில் சிலகாலம் நடாத்திய பின்னர் மோக்ஷத்திற்கு ஹேதுவாகிய நல்ல கருமங்களைச்செய்து முத்தியடைதல் வேண்டும்.

இக்கல்வியைக் கற்பதற்கு அனேக வழிகள் உண்டு. நல்லாசிரியனை யடுத்து அவரிடம் கற்றல் சாதாரணமாக நடந்துவருகிறது. புஸ்தகங்களின் மூலமாயும், உபாத்தியாயர்களைக்கொண்டு கற்றலும் உண்டு. புஸ்தகங்களில் படித்ததை நேரில் பிரத்யக்ஷமாய்க் காண்பது

மிகவும் நன்று. உதாரணமாகப் பள்ளிக்கூடங்களில், ரசாயன சாஸ்திரங்களில் படிப்பதைப் பிரத்யக்ஷமாய் செய்து காண்பிக்கிறார்கள். சரித்திரத்தில் டாஜ் மஹாலைப்பற்றிப் படித்திருந்தும் அதை நேரில் பார்ப்பதே மனதுக்கு ஒரு திருப்தியை உண்டாக்குகிறது. தேச சஞ்சாரம் செய்து, விஷயங்களையறிந்து கொள்ளல் மேலாம். உபாத்தியாயரிடம் கல்விகற்க வேண்டுமாயின், அவரிடம் உண்மையான அன்பும் பக்தியுமிருந்தாலொழிய, மற்றப்படி அவருக்கு இவனிடம் வெறுப்பு உண்டாய்விடுமாதலின், இவனால் ஒன்றும் கற்கமுடியாது. குருபக்தி நிறைந்துள்ள அனேக சீடர்களைப்பற்றிக் கேட்டிருக்கிறோம். நாம் படிக்கும் படிப்பில் சிரத்தையிருந்தாலொழிய நம்மால் அதை முற்றும் கற்கமுடியாது. சோம்பலை யொழித்துத் தன் காரியத்தில் கண்ணுள்ளவனாயிருத்தல் வேண்டும். இது பற்றியே,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."

என்றார் குமரகுருபரர். நாம் பிரத்தியக்ஷமாகக் காணும்படியான கல்வியைக் கற்பதற்கு, உற்று நோக்குதல் மிகவும் அவசியம். இப்படி உற்றுநோக்குமியல்பினால் தான் மேற்றேசத்தினர் நம்மிலும் மேம்பட்டிருக்கின்றனர். கண்கள் திறந்தபடி இருந்தும், ஒருவிஷயத்தையும் பார்க்காத கனவான்கள் சிலர். அவர்கள் தம் கண்களை எப்படி உபயோகிக்கின்றனரோ, அப்படியே காது முதலிய முக்கிய அவயவங்கள் பயனற்றனவாக, அவர்கள் நெட்டுயிர்ப்போடற்ற பிணமாய் விடுகின்றனர். நம்புலன்களைக் கண்டவழியில் செல்லவிட்டுவிட்டுக் கற்கும் கல்வி பயனற்றதாய்விடும். இதற்குத்தான் கவனமில்லாமை என்று பொருள். ஒருமனிதனுக்குக் கவனம் மிகவும் அவசியம். இவ்விதம் கல்வியைக்கற்றபின் அமைதியாக உட்கார்ந்து, சிறிதுநேரம் தாம் கற்றதைப்பற்றி யோசிக்கவேண்டும். இவ்விதமாகச் செய்வதினால் நாம் கற்றதை ஞாபகத்திற்குக்கொண்டு வர முடியும். இப்படிச் சிந்தனைசெய்வது, மிகவும் அவசியம். நாம் கற்றோரைக் காணுந்தோறும் நமக்கு ஏதாயினும் சந்தேகமிருக்குமாயின், அவர்களிடம் அச்சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளல் வேண்டும். தம்மினும், அதிகமாய்க் கற்றவர்களுடன் அடிக்கடிக் கல்வியின் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி, சம்பாஷித்துக்கொண்டிருப்பது மிகவும் நல்லது. கல்வியில் தேறுதல் மாத்திரமின்றி நாம் கற்ற கல்வியைப் பிறருக்குச்சொல்லும்படியாகிய சொல்வன்மை இருத்தல் நலம். இதுபற்றியே,

"எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந் [ர்ந்தும்
துய்த்துணர் வில்லெனினில்லாகும்—உய்த்துண
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்
பொன்மலர் நாற்ற முடைத்து." [டேல்

என்றார் குமரகுருபரரும். கற்றவர்களுடன் அடிக்கடிச் சம்பாஷிப்பதால் தான் பிறருக்குத் தாம் கற்றதைக் கற்றுக்கொடுக்க வல்லவராகின்றனர்.

நாம் கற்றவற்றை மறக்காதிருப்பது மிகவும் அவசியம். கற்றவற்றை மறந்து மேலே கற்க வாரம்பித்தலானது, சுவரின்றிச் சித்திரம் வரைவது போலாம். இதைப்பற்றிதான்,

"வருந்தித்தாம் கற்றன ஓம்பாது, மற்றும்
பரிந்து சிலகற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்"

என்றார் பெரியோர். ஞானத்தைப் போதிக்கும் நூல்கள் பலஉள. அவ்வளவு நூல்களையும் கற்றல் முடியாதாகையால் அவற்றுட் சிறந்தவற்றைக்கற்கவேண்டும். மனுஷாயுஸோ, மிக சொல்பம். அதில் பாதி இரவாக இருக்கிறது. மற்றைய பாதியில் பிணி, விளையாட்டு, தள்ளாமை முதலியவைகளில், அதிகம் கழிந்து விடுகிறது. மிகுதியாய் இருக்கும் காலம் மிகச் சொற்பம். இச்சொற்பகாலத்தில்,

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற்றெரிந்து."

என்றபடி மிகவும் பிரயோசனமுள்ள நூல்களைக் கற்க வேண்டும்.

இப்படிக்கற்றதனால் யாம் புலவராய் விட்டோமென்னுஞ் செருக்கில்லாதவராயிருக்க வேண்டும். நம்மைவிடப் படித்தவர்கள் இவ்வுலகில் அனேகர் இருப்பார்களென்றெண்ணி மேலும் மேலும் கற்கவேண்டும். கல்விச் செருக்கடைந்தவர் ஏதோ அரைப்பங்கு கற்றவர்களாக விருப்பார்களே யன்றி, முற்றுங்கற்றுணர்ந்தவர்களாக விரார். கல்வியின் ஸ்வரூபியாகிய சரஸ்வதியே, "தான் கற்றது கைம்மண்ணளவு கல்லாததுலகளவு" என்றாள். ஆகையால் நாம் கல்

வியில் செருக்கற்றவர்களாக விருத்தல் வேண்டும். இதனாலன்றோ,

"கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி - விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும்."

என நன்னெறியிலும்,

"முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க - சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால்"

என நீதிநெறி விளக்கத்திலும் கூறியுளார் சான்றோர்கள்.

கல்வி மனிதர் பெறக்கூடிய பேறுகளில், மிசச்சிறந்தது. இதன் சிறப்பை எல்லாக்கவிகளும் எடுத்துரைத்திருக்கின்றனர். மற்ற பேறுகளைவிட இது எப்படிச் சிறந்தது? மனிதர் பெறக்கூடிய பேறுகளில் முக்கியமானதாக எல்லாராலும் கருதப்படும், செல்வப்பேற்றினும் கல்வியே சிறந்ததாகும். கல்வியே செல்வத்திற்குங் காரணமாகின்றதாகையால், கல்வியானது மற்றெல்லாப் பேறுகளிலும் சிறந்ததென்று கொள்ளயாதேனுமையமுண்டோ? இதுநிற்க, சிலர் செல்வமே கல்விக்குக் காரணமென்பார்கள். ஆயினும், நாம் சிறிதும் பணச்செலவின்றி எல்லாவித கல்விகளையும் கற்ற மகாத்மாக்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். எவ்விதக் கல்வியினாலும் ஒருவன் சிறப்படைவன். என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. சகலகலைகளிலும் கற்றறிந்தவன் எங்கிருந்தபோதிலும் தன் ஞானத்தின்மகிமையினால் சிறிதும் தாழ்வின்றி விளங்குவன். அவனுக்குக் கவலைகளென்பதே கிடையாது. எத்தேசத்திலும், யாவராலும், பெருமை படுத்தப்படுவான். பூமியின் அனேக பாகங்களை யாளும் அரசனும் இக்கற்றவனுக்கு ஒப்பாகமாட்டான். ஏனெனில்கற்றவனொருவன் தன் தேசத்தில் மாத்திரமேயன்றி எல்லாத்தேசங்களிலும் மரியாதையுடன் அங்கீகரிக்கப்படுவான்; ஆனால் அரசனோ தன் தேசத்தில் மாத்திரமேயன்றி வேறெங்கும் மதிக்கப்படமாட்டான். இதுபற்றியே,

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் [குத்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிடம் எல்லாம் சிறப்பு."

என்றார் பெரியோர். பணத்தாலடையும் பயன்களெல்லாம் கல்வியினாலும் அடையப்படுபனவே. செல்வத்திற்கும், கல்விக்கும் ஒரு முக்கியமான பேதமிருக்கிறது. கல்வியானது திருடர்களால் அபகரிக்கப்பட முடியாதது; ஆனால் தனவந்தன் எப்பொழுதும் பணத்தைச் சாக்கிரதையுடன் பாதுகாக்க வேண்டும். அன்றியும் நாம் ஒருவருக்குப் பணம் கொடுத்தால் நமது பணம் குறையும். கல்வியோ கொடுக்கக்கொடுக்க விருத்தியாகும். நமக்கிருக்கும் சந்தேகம் ஒருவாறு நீங்கும்.

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்,
தம்மை விளக்குமால், தாமுணராக் கேடின்றால்,
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்ம ரறுக்கு மருந்து."

என்பது நாலடியார். தான் இருக்கும் ஸ்திதி இன்னது என்பதை ஒருவனுக்கு நன்றாக வெளிப்படுத்துவது இக்கல்வியே. தன்னிலைமையை நன்றாக அறிவதனால், அவன் தன்கடமைகளைச் சரிவரச்செய்வான். இவைதவிர, கல்விக்கே சிறப்பான ஒரு குணம் அமைந்திருக்கிறது. ஒருவனுக்குப்படிப்பில் உண்மையில் ஒரு அபிமானமுண்டாய் விட்டால், பிறகு அவன் எப்பொழுதும் படித்துக்கொண்டிருக்க ஆசைப்படுவான். இவ்வித லக்ஷணமமைந்த, கல்வியை நம்மிந்தியாவில் அனேகர் அடையாதிருப்பது மிகப் பரிதபிக்கத்தக்கதே.

இவ்வளவு நன்மையை விளைவிக்கின்றதும், நிகரற்றதுமான கல்வியை அடையாது, கண்ணற்றவர்போலும், பேச்சற்றவர்போலுமிருக்கின்ற ஒன்றும் தெரியாத பேதைகளையுடைத்தாய் இருந்தால் எப்பொழுது நம்மிந்தியாவானது முன்னுக்கு வருமோ தெரியவில்லை. ஆதலால் ஏதோ கொஞ்சம் அறிந்தவர்களாகிய நாம் குருடர்களுக்குக் கண்ணைக் கொடுத்து, நம்மிந்தியாவை முன்னுக்கு கொண்டுவருவது மன்றி, நம் பெற்றோர்களைச் சந்தோஷப்படுத்தியும் வாழ்வோமாக.

# இயற்கை அற்புதங்கள்
## WONDERS IN NATURE
### XX உஷ்ணம்: அதன்தொழில்: உஷ்ணஅளவை
### HEAT: ITS EFFECTS: THERMOMETER

உஷ்ணம் என்பது நம்மைச் சுற்றிக் காணப்படும் ஓர் சக்தி. இதன்ஸ்வரூபம் நமக்குத் துவக்குஅல்லது தோல் என்ற இந்திரியத்தால் வெளியாகின்றது. இதை உண்டாக்கும் வஸ்துக்களும் நிலைகளும் சில உள. ஸூர்யனும் அக்னி அல்லது நெருப்பும் நம்மைச் சுற்றி உஷ்ணம் உண்டாக்கும் முக்யவஸ்துக்கள். இவைகளில் ஒளியும் ஸம்பந்தப்பட்டுக் காணப்படு கின்றது. ஒளியோடு ஸம்பந்தப்படாத உஷ்ணத்தை நாமே உண்டாக்கலாம். ஒருகையை இன்னொரு கையின் மேல் தேய்த்தால் சுரசுரப்பால் உஷ்ணம் உண்டா கிறது. ஓர் துண்டு ஈயத்தைச் சம்மட்டியால் ஓயாது ஓங்கி அடித்தால் அப்பொழுது உண்டாகும் உஷ்ணத் தால் ஈயத்தை உருக்கியும் விடலாம். இம்மாதிரி உரைதலாலேயே நெருப்பும் உண்டாகி விடலாம். கற்பாவியபாதையில் குதிரைவண்டிஓடுகையில் குதிரை லாடத்திலிருந்து தீப்பொறி பறக்கும். சாணை பிடிக் கையில் கத்திபடும் இடத்தில் கல்லிலிருந்து தீப்பொறி பறக்கும். மூங்கிற்காடு உரசுவதால் காட்டுத்தீக்கள் உண்டாகின்றன. இம்மாதிரி உஷ்ணமும் நெருப் பும் உரசலால் உண்டாவதோடும் கூட இரண்டு வஸ்துக்கள் ரஸாயனச் சேர்க்கை யாக ஸம்பந் தப்பட்டாலும் இவை உண்டாகும். இதற்கு எளி தாக இரண்டு உதாரணங்கள் கொடுக்கலாம். நீற் ருத கிளிஞ்சில் சுண்ணும்பில் குளிர்ந்த ஜலத்தை விட்டால் அப்பொழுது உண்டாகும் ரஸாயனச்சேர்க் கையால் அதிக உஷ்ணம் உண்டாகத் தண்ணீர் கொதி க்கத் தொடங்கிவிடுகின்றது. சர்க்கரையும், பொட்டி லுப்பும் சேர்த்துப் பொடிசெய்து இதில் இரண்டு ஒரு பொட்டு அக்னிந்ராவகத்தை விட்டால் உடனே அந் தப்பொடி பற்றி மத்தாப்பைப்போல எரியும். ஆகவே உஷ்ணமானது ஸூர்யன், நெருப்பு, உரைவு, ரஸா யனச்சேர்க்கை இவைகளால் பெரும்பாலும் உண்டா கின்றது என்பதாயிற்று.

இந்த உஷ்ணம் வஸ்துவல்ல சக்தி என்றோம். இதற்கு என்ன ஆதாரம் என்ற சங்கை பிறக்கலாம். ஒரு இரும்பு உருண்டையை முதலில் தராசில் நிறுத்து, அதை நன்ருகச் சுடவைத்து பின்னரும் நிறுத்துப் பார்த்தால் அதில் யாதொரு நிறைமாறுபாடும் காணப் படாது. ஆதலால் அது ஓர் வஸ்துவல்ல என்பது உட னே வெளியாகிவிடும். இது ஓர்வித சக்தி என்பதற்கு இதனுல் ஏதாவது காரியம் ஆகுமா என்பதை விசாரித் தல் வேண்டும். உஷ்ணத்தால் ஆகும் காரியம் அநே கம். வஸ்துக்களைப் பெரிதாக்கல், வஸ்துவின் உஷ்ண நிலையை அதிகப்படுத்தல், வஸ்துவின் நிலையை மாற் றல், முதலிய அநேக வேலைகளை உஷ்ணம் செய்யும். இவைகளுள் உஷ்ணம் வாயுதண்ணீர் இவைகள் விஷ யத்தில் உண்டாக்கும் மாறுபாடுகளை விவேகபோதினி I, 366. II, 220. III, 14.இல் காணப்படும் இயற்கை அற்புத பாகங்களாகிய, பனிக்கட்டியும் அதன் ரூபாந் திரங்களும், காற்றுகள்,வாயுவிலுள்ள நீராவியும்அதன் ரூபாந்தரங்களும், என்பவைகளில் விஸ்தாரமாக எடுத் துரைத்தாகி விட்டது. உஷ்ணத்தின் மற்றயவேலை களை இங்கு எடுத்து விஸ்தரிப்போம்.

உஷ்ணத்தின் முதல்தொழில் வஸ்துக்களைப் பெரி தாக்கல். உஷ்ணம் திடபதார்த்தங்களைப் பெரிதாக்கு வதை பின்வரும் சோதனையால் விளக்கலாம். ஒரு இரும்புப்பந்தையும் அது இடைவெளியின்றி ஸரியாக உள்ளே புகுந்து வெளிவரக்கூடிய வளையமொன்றை யும் எடுத்துக்கொள்ளுவோம். இந்த வளையத்தை மட்ட மாகப் பிடித்துக்கொள்ள அதனோடு சேர்க்கப்பட்ட ஓர் கைபிடியும் பந்து சூடாக இருக்குங்கால் பிடித்துத்தூக்க அதிலிருந்து ஓர் சங்கிலியும் அமைந்திருத்தல் வேண் டும். பந்தில் கரி ஏராதிருப்பதற்காக அதைச் சாராய விளக்கில் நன்ருகக் காய்ச்சி, அதைச் சங்கிலியால் தூக்கி, மட்டமாகப் பிடித்திருக்கும் வளையத்துள் போடு வோம். அது ஊடுருவிப் போகாது வளையத்தின் மேலேயேதங்கிவிடுகிறது. சூடாறக்கொஞ்சநாழிகைக்கு எல்லாம் அந்தப் பந்து வளையத்துள்ளாகக் கீழே விழு ந்து விடுகின்றது. இதனுல் உஷ்ணம் திடபதார்த்தங் களைப்பெரிதாக்குகின்றது என்பதாயிற்று. இந்த ஞான த்தை முன்னிட்டுத்தான் இருப்புப்பாதைகளில் இரும் புக்கம்பிகள் இடையில் இடம் விடப்பட்டிருக்கின்றன.

திரவ பதார்த்தங்களை உஷ்ணம் பெரிதாக்குவதை விளக்கப் பின்வரும் சோதனையைச் செய்வோம். ஓர் கண்ணுடிக் குவளைப்பாத்திரத்தில் தண்ணீர்விட்டு அதை ஓர்புறம் சாய்த்து ஓர் முக்காலிமேல் நிறுத்தி அதனுள் பிடிக்கு வரையில் தண்ணீரை விடுவோம். ஒருபொட்டுக்கூட விட்டால் தண்ணீர்வழியும் நிலையில் அது இருக்கவேண்டும். இந்த ஸமயத்தில் அடியில் ஓர் சாராய விளக்கை வைத்து இந்தக் குவளையைச் சுட வைப்போம். சூடேற ஏற கொஞ்ச நாழிகைக்கெல்

லாம் குவளையின் வாயிலிருந்து தண்ணீர் சொட்டத் தொடங்கும். அந்த ஸமயத்தில் தண்ணீரைத் தொட்டுப்பார்த்தாலும் அவ்வளவு சூடாகக் காணப்படாது. இவ்வாறு தண்ணீர் சுட வைக்குங்கால் குவளையுள் அடங்காது சொட்டுவதே அது சூட்டால் பெரிதாக்கப்படுகின்றது என்பதைக் காட்டுகின்றது. இதனால் தான் நம்மவர் சூடான நெய்யை அளந்து வாங்குவதே இல்லை. அதை ஆறவைத்தே அளப்பது. பதார்த்தம் எவ்வளவு சூடாக விருந்தாலும் அதை அளக்காது நிறுத்து வாங்குவதே நலம். உஷ்ணம் வஸ்துக்களைப் பெரிதாக்கிய போதிலும் நிறையை ஓர் அணுவேனும் மாற்றாது. இந்த விஷயம் நம்மவர்களுக்குத் தெரிந்திருக்கிறது என்பது முற்கூறிய விஷயத்தால் நன்கு விளங்கும்.


வாயு பதார்த்தங்களை உஷ்ணம் பெரிதாக்கும் என்பதை விளக்கப் புகுவோம். ஓர் கண்ணாடிச் சோதனைக் குழாயை எடுத்து அதை ஓர் தொளையுள்ள சடையால் அடைப்போம். அந்தத்துளையுள் ஸரியான ஓர் வளைந்த கண்ணாடிக்குழாயை விட்டு அதன் வெளி நுனியில் ஓர் ஸரியான ரப்பர் குழாயைப் பொருத்தி இதன் மற்றைய நுனியைக் கொஞ்ச ஆழம் கண்ணாடி மூக்குப் பாத்திரத்தில் உள்ள தண்ணீரில் தோய்த்து அமைத்து விடுவோம். கண்ணாடிச்சோதனைக்குழாயைஓர் ஆதாரத்தில் மாட்டியிருக்கும் பிடிப்பால் தகுந்தஉயரத்தில் கவ்வப்பட்டுச் சாய்ந்து நிற்கும்படி செய்வோம். அடியில் சாராய விளக்கால் சூடுகாட்டவேண்டியது தான் தாமதம், உடனே மூக்குப்பாத்திரத்துள்ளிருக்கும் ஜலத்தில் வாயுக்குமிழிகள் கிளம்பத்தொடங்கும். இதனால் கண்ணாடிச் சோதனைக்குழாயுள்ளிருக்கும் வாயு உஷ்ணத்தால் பெரிதாக உள்ளே அதற்கு இடம்போதாமல் போகிறது. உடனே அது வெளியே குழாய் வழியாக ஓடித் தண்ணீரில் குமிழ்ரூபமாகப் போகின்றது. இப்பொழுது முதலில் ரப்பர் குழாயைத் தண்ணீரிலிருந்து எடுத்துவிட்டுப், பின்னர் விளக்கை சோதனைக்குழாய் அடியிலிருந்து நீக்கவேண்டும். இப்படிச்செய்யாது விளக்கை எடுத்து முதலில் அணைக்கத்தொடங்கினால், அதற்குமுன் சோதனைக்குழாயுள் உள்ள வாயு குளிர்ச்சி அடையச் சுருங்கும், அழுத்தத்தில் வெளி வாயுவை விடக் குறையும். உடனே மூக்குப்பாத்திரத்திலிருந்த தண்ணீரை வெளிவாயு குழாய் வழியாகச் சோதனைக் குழாயுள் ஏற்றும். தண்ணீர் சூடாகிய கண்ணாடிச் சோதனைக் குழாயுள் பட்டதும் அது படீரென வெடித்துச் சிதறிச் சோதனையை அலங்கோலமாக்கும்.

முற்கூறிய சோதனைகளிலிருந்து உஷ்ணம் வஸ்துக்களைப் பெரிதாக்கும் என்றும், குளிர்ச்சி அவைகளைச் சிறிதாக்கும் என்றும் விளங்கும். மேலும் திட பதார்த்தங்கள் உஷ்ணத்தால் மிக மெதுவாகப் பெரிதாகின்றன என்றும், வாயுபதார்த்தங்கள் வெகு சீக்கிரமாக அவ்வாறாகின்றன என்றும், திரவபதார்த்தங்கள் ஸாவதானமாக நடுத்தரமாகப் பெரிதாகின்றன என்றும் விளங்கும். உஷ்ணத்தால்பெரிதாக்கப்பட்ட வஸ்துக்கள் அடர்த்தியில் குறைய விசிஷ்டகன அளவில் குறையும். இம்மாறுபாடு ஸாதாரண வாயுவில் சூர்ய வெப்பத்தால் உண்டாகக் காற்றுக்கள் உண்டாவதைக் காற்றினங்கள் என்னும் வியாஸத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. 'உஷ்ணம் வஸ்துக்களைப் பெரிதாக்கும், குளிர்ச்சி சிறிதாக்கும்' என்னும் விதிக்குப் புறனடை இரண்டொரு விஷயத்தில் காணப்படுகின்றது. வார்ப்பு இரும்பு, பனிக்கட்டி இவைகள் விஷயத்தில் உஷ்ணம் அவைகளைச் சிறிதாகவும், குளிர்ச்சி அவைகளைப் பெரிதாகவும் செய்கின்றது. வார்ப்படஇரும்பு விடப்படும் அச்சுள் பாய்ந்து அதிலிருக்கும் சித்திரவேலைகள் எல்லாவற்றையும் தாங்கி நிற்பதும், பனிக்கட்டி தண்ணீரில் மிதப்பதுமே இதற்குத் தகுந்த ஆதாரம். பொதுவாக இந்த விதி ஸரியாகவே இருக்கும்.

திரவபதார்த்தங்கள் ஸாவதானமாகப் பெரிதாவதால்தான் இவைகள் உஷ்ணநிலையை அளக்க ஏற்பட்ட கருவிகளில் உபயோகப்படுத்தப்படுகின்றன. திரவங்களுள்ளும் பாதரஸமும், சாராயமுமே முக்யமாக இதற்கு உபயோகப்படும் திரவங்கள். இவைகளுள் முன்னது எளிதில் உரைந்தும் போகாது, ஆவியாகவும் மாறாது, வெளி உஷ்ணத்தை எளிதில் ஏற்கும் திறனுடையது. கண்ணாடிக்குழாயுள் வெள்ளிக் கம்பிபோன்ற தோற்றத்தை உடையது. கண்ணாடியில் ஒட்டாது லகுவாக ஏறியிறங்கும் தன்மை உடையது. இந்தக் குணங்கள் அதற்கு இருப்பதால்தான் அதைப் பொதுவாக உஷ்ண அளவையில் உபயோகப்படுத்துகிறார்கள் பின்னதை பாதரஸக்கருவியால்அளக்கமுடியாத தாழ்ந்த குளிர்ச்சிகளை அளவிட உபயோகப்படுத்துவது. உஷ்ணநிலை அளக்கும் கருவியொன்றை வர்ணிப்போம்.

இந்தக் கருவியில் ஓர் உருண்டை அல்லது அகன்ற பாகத்தைஓர் நுனியிலுடைய மயிரிழைக்குழாய்ஒன்று உண்டு. இந்த அகன்ற பாகம் பாதரஸத்தால் நிரப்பப்பட்டிருக்கும். குழாய்ப்பாகத்தில் அநேக ஸம அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும். இந்தக் குழாயின் மற்றைய நுனி நன்றாக மூடப்பட்டிருக்கும். இந்தக்கருவியின்


அகன்ற பாகத்தை ஏதாவது உஷ்ண வஸ்துவில் படும் படி பிடித்தால் பாதரஸம் பெரிதாக்கப்பட்டுக் குழாயுள் ஏறி ஓர் அளவில் சென்று நின்றுவிடும். அதற்கு எதிரே 75-என்ற இலக்கம் இருப்பின் வஸ்துவின் உஷ்ணம் 75-டிகிரி என்று சொல்லப்படும். (ஒவ்வொரு உஷ்ண அளவிற்கும் டிகி என்று பெயர்). சிற்சில உஷ்ண வஸ்துக்கள் விஷயத்தில் இதன் குழாய்ப்பாகம் முழுவதும் பாதரஸத்தால் நிறைந்து காணப்படுவதால், பாதரஸம் அகன்றபாகத்துள் அடங்கியிருக்கையில் குழாயுள் வெறு இடமாக இருக்குமே ஒழிய அதில் ஸாதாரண வாயுக்கூட இராது என்பது தெரியவருகிறது.



இக்கருவிகள் விஷயமாகப் பின்வரும் விஷயங்கள் கவனிக்கவேண்டியவை. (1) இந்தக் கருவி, 'உஷ்ணத்தால் திரவ வஸ்துக்கள் ஸாவதானமாகப் பெரிதாகி உஷ்ணத்தின் ஏற்றத்தாழ்வை நன்ருக விளக்கும்' என்னும் விஷய ஞானத்தால் உண்டாக்கப் பட்டது. (2) பாதரஸத்தின் முற்கூறிய சிறப்பால் அது இங்கு உபயோகப்படுத்தப்பட்டது. (3) இரண்டுவித உஷ்ணக்கருவி ஸாதாரணமாக உபயோகப்பட்டு வருகின்றன. (4) முதலாவது சதாம்ச உஷ்ண அளவை என்பது. இதில் ஆரம்பம் உருகும் பனிக்கட்டியின் உஷ்ணம். முடிவு கொதிக்கும் தண்ணீரிலிருந்து வரும் நீராவியின் உஷ்ணம். இந்த இரண்டு உஷ்ண அளவைக்கு இடையில் உள்ள குழாய்ப்பாகம் 100 ஸம பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதனுல் தான் இதற்கு இப்பெயர் வந்தது. (5) இரண்டாவது பாரின்ஹைய்ட் உஷ்ண அளவை இதைக்கண்டுபிடித்தவன் பெயரால் இக்கருவிக்கு இப்பெயர் வந்தது. இதில் ஆரம்பம் பனிக்கட்டியையும் உப்பையும் சேர்க்குங்கால் அந்தக் கலவைக்கு உள்ள உஷ்ணமே. முடிவு முற்கூறிய கருவியிலிருக்கும் முடிவுநிலேயே. இடைவெளி 212 ஸமபாதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதில் 32 - வது டிகிரிதான் பனிக்கட்டி உருகும் நிலே. ஆகவே சதாம்ச உஷ்ண அளவையில் உள்ள மொத்த இடைக்கு ஸமமாகப் பாரின்ஹைய்ட் உஷ்ண அளவையில் உள்ள இடைவெளி 180 ஸமபாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. (6) இந்தப்பாரின்ஹிட் உஷ்ண அளவை உஷ்ணத்தில் நுட்பமான மாறுபாடுகளைக் கண்டுபிடிக்க அடிக்கடி உபயோகப்படுத்துவது. மனிததேகத்தின் உஷ்ணநிலே ஜ்வரம் முதலிய காலங்களில்கண்டறிய இந்த உஷ்ண அளவையே உபயோகப்பட்டு வருகிறது. வியாதிஸ்த உஷ்ண அளவையில் 95 டிகிரி முதல் 108-டிகிரிவரையில்தான் காணப்படும் மனிதனுக்கு ஸாதாரணமாக இருக்கவேண்டிய உஷ்ணம் $98\frac{1}{2}$-டிகிரி. சீதளத்தால் 95-டிகிரிக்குக் கீழாவது, அதிக உஷ்ணத்தால் 108-க்கு மேலாவது மனிததேக உஷ்ணம் தாண்டிவிடுமாயின் ஜன்னி உண்டாகி மனிதன் இறக்க வேண்டியதுதான். ஆதலால்தான் வியாதிஸ்த உஷ்ண அளவையில் 95-டிகிரி முதல் 108-டிகிரிவரையில் உள்ள அளவைகள் ஒவ்வொன்று 10-ஸமபாகமாக மேலும் பகுக்கப்பட்டு அமைக்கப்பட்டிருக்கின்றன.

உஷ்ண அளவைக்கருவிகள் இவ்வாறு உண்டாக்கப் படுகின்றன என்பதைச் சற்று விளக்குவோம். கண்ணுடி உண்டாக்கும் சாலேயில் ஒரே குறுக்களவுள்ள இடை இருக்கும் குழாய்கள் தயார் செய்யப்பட்டு ஓர் நுனியில் அகன்ற அல்லது உருண்டையான பாகமும், மற்ருெரு நுனியில் சிறுபெய்குழல் போன்ற பாகமும் அமைக்கப்படுகின்றன. இந்தக்குழாயை எடுத்து அதனுள்கொஞ்சம் பாதரஸம் போகும்படி செய்து அந்தக் குழாயுள் வெவ்வேறிடத்தில் போகும்படி அதைக் குலுக்கித்தள்ளி அவ்விடங்களில் எல்லாம் பாதரஸத்தின் நீளங்களே முதலில்அளப்பார்கள். இவைகள் ஒரே

அளவுடன் இருப்பின் குழாய் எல்லாவிடங்களிலும் ஒரேவித குறுக்களவை உடையது என்பது வெளியாகும். இத்தன்மையை உடையதும், அகன்றபாகம் ஒரு



நுனியிலும் பெய்குழல் பாகம் மறு நுனியிலும் உடையதுமான குழலை எடுத்துப் பெய்குழல்பாகத்தில் போதுமான அளவுபாதரஸத்தை விடவேண்டும். பின்னர் அடிப்பாகத்தைச் சாராய விளக்கில் சுட வைத்தால் அதனுள்ளிருக்கும் காற்றுப் பெரிதாகி பெய்குழற்பாகத்திலிருக்கும் பாதரஸத்தின் வழியாகக் குமிழியாகப் போவதைக் காணலாம். குமிழி போவது நின்றதும் விளக்கை விட்டு அடிப்பாகத்தை நீக்கிவிடவேண்டும். அடிப்பாகம் குளிர உள்ளிருக்கும் வாயு சுருங்கி அழுத்துவதில் குறையும். உடனே வெளிவாயு பாதரஸத்தை அகன்ற பாகத்துள் சொட்டும்படி தள்ளும். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் அகன்றபாகம் பாதரஸத்தால் நிறைவதோடுங்கூட குழாயுள்ளும் கொஞ்ச பாதரஸம் நிற்கலாம். மறுபடியும் அகன்ற பாகத்தை விளக்கில் சுட வைத்துப் பாதரஸம் குழாய் முழுவதும் நிரம்பி பெய்குழல்வரைப் போகும்படி செய்யவேண்டும். இவ்வாறானதும் பெய்குழல் பாகத்தை உருக்கித் திருக்கி உள்ளே வாயு புகவொட்டாது நன்ருக மூடிவிடவேண்டும். இப்பொழுது இக்கருவி தயாராகிவிட்டது. இனிமேல் இதில் டிகிரி குறிக்கவேண்டியதுதான். இதன் அகன்ற பாகத்தை உருகும் பனிகட்டித்தூளிலாவது அல்லது பனிக்கட்டித்தூளும் உப்பும் கலந்த கலவையிலாவது அமிழ்த்தவேண்டும். குழாயுள்ளிருக்கும் பாதரஸம் சுருங்கி அதில் அகன்ற பாகத்தருகாமையில் ஓரிடம் வந்துநிற்கும். அங்குக்குழாய்மேல் தேன்மெழுக்கு அப்பி ஊசியால் கண்ணுடியில் படும்படிக் கீறிக் குறிப்பிடவேண்டும். பின்னர் கொதிக்கும் தண்ணீரிலிருந்து கிளம்பிவரும் ஆவிதாக்கும்படி அத்தண்ணீர் அருகாமையில் பிடிக்கவேண்டும் (தண்ணீரில் இதைத்தோய்த்துவிடவேகூடாது). பாதரஸம் குழாயுள் ஏறி மற்றைய நுனியின் அருகில் வந்துநிற்கும். இங்கு முற்கூறியது போல குறியிடவேண்டும். இப்பொழுது ஆரம்பக்குறியும் முடிவுக்குறியும் இட்டாகிவிட்டது. இனிமேல் கருவி முழுவதையும் தேன்மெழுக்கால் மூடி இடையை 100 அல்லது 212 ஸமபாகமாக ஊசியால் கீறிட்டுப் பிறித்து 0 முதல் 100 அல்லது 212 வரையில் இலக்கமிடவேண்டும். பின்னர் மெழுக்கால் பொதிந்த அதை ஹைட்ரோப்ளோரிக் அஸிட்டு ஆவியில் கொஞ்ச நாழிகை பிடித்தால் கோடிட்ட பாகங்களை எல்லாம் அது தின்றுவிடும். இதை வெளியிலெடுத்து மெழுக்கை நீக்கிப்பார்த்தால் குழாயில் கோடுகளும் இலக்கங்களும் அறுக்கப்பட்டிருக்கும். இதன்பின் இந்த உஷ்ண அளவையை உபயோகிக்கத் தொடங்கலாம்.

உஷ்ண அளவை = Thermometer
ரஸாயனச் சேர்க்கை = Chemical combination
அக்நித்திராவகம் = Sulphuric acid
உரைவு = Friction
பெரிதாதல் = Expansion
ஆதாரம் = Stand
பிடிப்பு = Clamp
வார்ப்பட இரும்பு = Casti ron
பாதரஸம் = Mercury
மயிரிழைக்குழாய் = Capillary tube
சதாம்ச உஷ்ணஅளவை = Centigrade Thermometer
வியாதிஸ்த ,, = Clinical ,,

# ஸுசீலா ஸ்வயம்வரம்

## SUSILA SWAYAMVARAM

உத்தராபாரிசத்தில் **அந்புததேசம்** என்று ஒரு நாடு புராதனகாலத்தில் இருந்தது. பெயரால் மட்டும் அந்தத் தேசம் அத்புதமா யிருந்ததென்று எண்ணலாகாது. நீர் வளத்தாலும், நில வளத்தாலும், குடி வளத்தாலும் பூமியிலுள்ள மற்றப்பிரதேசங்களைவிட அது மேன்மை யடைந்திருந்தது. அந்த நாட்டின் நடுவில் **அக்ஷாமி** என்று ஓர் ஜீவநதி உபநதி கிளைநதிகளோடு பாய்ந்து உலகத்திலுள்ள பலவகை உணவுப் பொருள்களையும் விளைவித்துப் பஞ்சமென்பது கொஞ்சமு மில்லாமல் நாட்டிலுள்ளவரெல்லாம் செழித்தோங்கிக் களித்து வாழும்படி செய்துவந்தது. பொன்முதலிய உலோகங்கள், நவரத்னங்கள், இன்னும் பல அரும்பொருள்களும் அந்தத் தேசத்திலுள்ள மலைகளின் கனிகளில் வெட்டியெடுக்கப்பட்டு ஏழைகளும் பொன்னாலும் வயிரத்தாலும் செய்யப்பட்ட ஆபரணங்களை யுடையவர்களாயிருந்தார்கள்,

அந்த ராஜ்யத்தின் தலைநகரத்திற்கு **அதிசயநகரம்** என்று பெயர். இந்தப் பெயருங் காரணம்பற்றியே வந்ததாகச் சொல்லவேண்டும். பிரகிருதி சாஸ்திரப்பண்டிதர் அனேகர் நாட்டிலுள்ள பிரபுக்களாலும் அரசனாலும் ஸன்மானிக்கப்பட்டதால் அந்த நகரம் இந்திரப்பட்டினமென்றும் சொல்லத்தகுந்தது. நகரத்திலுள்ள ஜனங்களுக்கு ஆகாசமார்க்கமாய்ச் செல்கின்ற பருத்த தாமிரக்குழாய்களின் வழியாய் வீடுகள்தோறும் சுத்தமான மழைஜலமே ஸ்நானபானாதிகளுக்குக் கிடைத்தது. காலையிலும் மாலையிலும் குறித்தவேளைகளில் இயந்திரமூலமாய்க் கிளம்பும் ஓர் காற்று நகரத்தில் கூட்டிவைத்திருக்கும் குப்பை கூளங்களை ஒன்றுகத்திரட்டி ஓரிடஞ் சேர்த்தவுடன், பெரிய வண்டிகளில் அவைகளை ஏற்றி வேலைக்காரர்கள் நகரத்துக்கு வெளிப்புறத்தில் வெகுதூரத்துக்கப்பால் கொண்டு சேர்த்து விடுவார்கள். கிருஷ்ணபக்ஷமே அந்தப் பட்டினத்தார்க்கு இல்லையெனலாம். பகல்வெளிச்சம் தோற்றியது என்னும்படி இயந்திர தீபங்கள் அஸ்தமித்தவுடனே எரிய ஆரம்பித்து இரவுமுழுதும் காற்றினாலாவது வேறு காரணத்தினாலாவது அவை அணைவதில்லை. எங்குப்பார்த்தாலும் மாடமாளிகைகள் நிறைந்திருந்தன.

இவ்வாறு எல்லா ஐசுவரியங்களும் பொருந்தி இருந்த நாட்டிற்கு "அருமந்த குடத்திற்கு அடியிலே பொத்தல்" என்றபடி அரசன் மாத்திரம் நல்லவனாயமையவில்லை. அது பிரஜைகளின் பாவத்தினாலோ, வேறு எந்தக்காரணத்தினாலோ சொல்லமுடியவில்லை. அரசன் பெயர் **அஸூயாவர்மன்**. இவன் ஸிம்ஹாஸனம் பெற்றஐந்துவருஷத்திற்குள் சத்துருக்களெல்லாம் வென்று அவர்கள் நாடுகளைக் கைப்பற்றியும் பொருள்களைப்பறித்தும் எங்கும் மஹாபலவான் என்னுங்கீர்த்தியை யடைந்திருந்தான். அஸூயாவர்மன் புஜபலபராக்கிரமங்களால் மட்டில் பிரதாபத்தை யடைந்தவனன்று. வருஷத்துக்கு ஒருமுறை நாட்டிலுள்ள வித்வஜ்ஜனங்களை ஒருகோஷ்டி சேர்த்து அவரவர் படிப்பின் ஏற்றப்படி ஸம்பிரமமாக அவர்களுக்குப் பரிசளித்து அனுப்புவது வழக்கம். ஒவ்வொரு ஸமயத்தில் ஒருமாத காலம்வரையில் வித்வான்களைத் தன் ஸபையில் வைத்துக்கொண்டு அவர்களுடைய அருமை பெருமைகளைப்பாராட்டி அவர்கள் மனங்கோணாமல் நடந்தான். ஒன்றுங் கொடாதவனைக் கோவென்றுங் காவென்றுங் கூறுமியல்புள்ள கவிவாணர் அஸூயாவர்மனைப் புகழ்ந்து காவ்யங்களைப் பாடினார்களென்று சொல்லவும் வேண்டுமோ? யுத்தத்தில் தானடைந்த வெற்றியாலும் புலவர்களால் போற்றப்பட்டதாலும் அரசனுக்கும் மதை பெருகிச்சற்று அக்கிரமவழிகளுக்கு இடங்கொடுக்க ஆரம்பித்துவிட்டான். இவ்வேந்தனுக்கு **ஸமயஸஞ்சீவி** என்று ஒருபிரதானி இருந்தான்; அரசனைத்திருப்தி செய்து பொருளைத்தேடிக் காலத்தைப் போக்குகிற மந்திரியாயிருந்தான். "ராஜா ராஷ்டிர கிருதம் பாபம், ராஜபாபம் புரோஹித:" என்ற முதுமொழி ஸமய ஸஞ்சீவி மனத்தில் பற்றினதேயில்லை. இதுவும் அரசனுடைய நிர்ப்பாக்கியந்தான். மந்திரி தக்கவனாய் ஏற்பட்டால் அரசு ஓங்கும். மந்திரி இச்சகம் பேசிப் பிழைப்பவனாயின் அரசு தாழும். இது உலகப்பிரஸித்தமான நீதி.

அஸூயாவர்மனுக்குப் பட்டமஹிஷியாய் வாழ்க்கைப்பட்டவளுக்கு **ஸுந்தரி** என்று பெயர். விவாகம் ஆகிச் சிலவருஷம்வரையில் மக்கட்பேறில்லாமலிருந்தமையால் அரசனுக்கு அவளிடத்தில் ஏதோ வெறுப்புத் தோன்றி முதலில் அவளிடத்தில் வைத்தகாதல் குறைந்தது. ஸுந்தரியோ தன் பர்த்தாவிலும் உயர்ந்த தெய்வம் இல்லையென்னுங் கோட்பாட்டை அனுஸரித்து இராஜனுக்குத் தோன்றினவைகளெல்லாம்

திருப்திவரும்படியே செய்து வந்தாள்; என்ன செய்தும் அவன்மாத்திரம் முன்போல நடக்கவில்லை. ஸாமான்யஸ்திரீகள்போல் ஸுந்தரிஅரசன்வெறுப்பையுணர்ந்தபிறகும் சுழித்த முகத்தைக் காட்டினதில்லை. அரசன் ஸந்தோஷப்படாதது தன்னிடத்திலுள்ள குறையென்றெண்ணித் தன் மனத்தைச் சோதித்தும் தன் சேடிகளை விசாரித்தும் பலவேறு வகைகளில் தன்னிடத்தில் உத்தமகுணங்களே பிரகாசிக்கும்படி பிரயத்னங்கள் செய்துவந்தாள். அரசனும் ஒவ்வொரு வேளைகளில் மனமிளகி ஸுந்தரியிடத்தில் பழைய நட்பைப் பாராட்டி அவள் மனம் பூரிக்கும்படி செய்துவந்தான். மக்கட்பேறில்லாத குறை குறையாய்த் தானிருந்தது. அதை மாற்ற மருந்துண்டோ?

வருஷந்தோறும் வித்வான்களின் கோஷ்டி ஒன்று கூடுவதுண்டென்றோம். அரசனுக்கு ஒரு ஸமயத்தில் வித்வான்கள் கூடுவதுமாத்திரம் போதாது. காடுகளில் தபஸ்செய்து த்ரிகாலஞ்ஞர்களாயுள்ளவர்களையும் தன் ஸபைக்குத் தருவிக்கவேண்டுமென்று ஒரு ஆசை பிறந்தது. உடனே தன் ஏவலாட்களை நாட்டிலுள்ள காடுகளில் ஆச்ரமங்களிலிருக்கும் பெரியோர்களைத் தக்க உபசாரங்கள் செய்து கொணர்தல் வேண்டும் என்று ஆஞ்ஞாபித்தான். வித்வான்களில் சிலரை வேலையாட்களோடு அனுப்பி எந்த உபாயந்தேடியாவது பெரியோர்களைத் தன் ஸபைக்குத் தருவிக்க வேண்டுமென்ற ஆவல்கொண்டான். அவன் மனத்தின்படியே வித்வான்களும் ஏவலாட்களும் பலதிக்கிலுமுள்ள காடுகளுக்குச் சென்று அங்குள்ள தபஸிகளுக்கு இனிய மொழிகள் சொல்லி இராஜஸபை வரும்படி செய்தார்கள். தபஸிகளும் வித்வான்களும் கூடிய தன் மண்டபத்தைப்பார்த்த அரசன் மனம் மிகுந்த குதூகலத்தை அடைந்தது. ஸமயஸஞ்சீவியும் அரசனுக்கொத்தபடி நடந்தான்.

தபஸிகளுக்கும் வித்வான்களுக்கும் ஒருமாதம் பூர்த்தியான ஆகாரங்கள் ஸன்மானங்கள் செய்து அவரவருடைய அருமைபெருமைக்குத்தக்கபடி உபசாரமொழிகளைத் தானே சிலருக்கு நேரில் சொல்லியும் சிலருக்கு மந்திரிமூலமாய் அறிவித்தும் எல்லாரும் விடைபெற்று, அவரவர் தத்தமிடம் செல்லுந்தினத்தன்று ஒரு விசேஷம் நடந்தது. அது என்னவென்று இனிச் சொல்வோம்.

அரண்ய வாஸிகளான தபஸ்விகளில் ஒருவர் ஸபை நடந்த காலம் முழுமையும் மௌனமாகவே யிருந்தவர். அவர் சடை முடியும் நரைத்து நீண்ட தாடியும் கண்டவர்களுக்கெல்லாம் அவரிடத்தில் மிகுந்தமதிப்பை உண்டாக்கின. வித்வஜ்ஜனங்கள் ஒருவரோடொருவர் பல வகையில் சர்ச்சை செய்துவருகையில் இந்தத் தபஸியர் ஒருவர்மாத்திரம் விருப்பு வெறுப்புச் சின்னங்கள் ஒன்றுங்காட்டாமல் திடசித்தராயிருந்தார். அவரவர் அரசனிடத்திலோ மந்திரியிடத்திலோ விடைபெற்று ஸ்வஸ்தானங்களுக்குப் போய்விட்டனர். இந்த விருத்த ரிஷி ஒருவர் மட்டில் தன் இருப்பிடத்தை விட்டுப் பெயராமல் மனத்தையும் புலன்களையும் ஒரேவழி செலுத்தும் யோகிகளைப் போல் மௌனமாயிருந்தார். இது அரசனுக்கு ஒரு விந்தையாயிருந்தமையால், அஸூயாவர்மன் தன் ஆஸனத்திலிருந்து இறங்கித் தபஸியிடத்தில் வந்து வெகு விநயமாக அடியில் வருமாறு இனியமொழிகள் கூறலாயினன்:—

தம்மைப்போன்ற மஹாத்மாக்கள் அற்பர்களாகிய அரசர்களைப் பொருள்செய்து அவர்கள் சபையைப் பெருமைப்படுத்தினதற்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்தலாகும்? தங்களுக்கு என் ஏவலாளிகள் ஏதாவது அவமரியாதை செய்தமையால் நான் அபராதியானேனோ? என் மந்திரியினால் நான் அனுப்பித்தபரிசுகள் தங்களுக்குத் திருப்தியுண்டாக்கவில்லையோ? நான் கவனித்தமட்டில் ஸபை நடந்தபோதெல்லாம் தாங்கள் மௌனமாகவே யிருந்துவிட்டீர்கள். சிற்றறிவினனாகிய நான் தங்கள் பெருமையை முற்றிலுமறியாமலிருந்திருக்கலாம். முக்காலத்தையும் உணர்ந்த முதியவரே, என் அபராதங்களை க்ஷமித்துத் தங்கள் மனோரதம் எது என்று தெரிவித்தால் அவ்வாறு இயன்றமட்டில் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். திருவாய் மலர்ந்தருளல்வேண்டும். தாங்கள் பாடின கவிகள் இருக்குமாயின் அவைகளை இங்கேயே அரங்கேற்றலாகும். ஜோதிஷ சாஸ்திரத்தில் தேர்ச்சி இருந்தால் அதையும் காட்டலாகும். கணித சாஸ்திரங்களில் நிபுணத்வம் இருக்குமாயின் அதையுங் கண்டுகளிக்க உடன்படுகிறேன். மனமுவந்து மறுமொழி பகர்தல் வேண்டும்" என்று பலமுறை வணங்கிக் கேட்டான்.

அந்தத் தபஸியரும் அரசனுடைய உபசாரமொழி

களால் மனமிரங்கி அடியில்வருமாறு உத்தரஞ்சொல்ல லாயினர்:—

இராஜனே, உலகப்பற்றையெல்லாங் கைவிட்டு உத்தமனை நாடி உயர்ந்த பதவியைத் தேடுகின்ற எம் போலியர்க்குப் பரிசினலும் உணவினலும் ஆவதொன் றில்லையென்று நீ அறியாய்போலும். போலித் தபஸி களும் போலி வித்வான்களும் பொருளை நாடி இச்சகம் பாடிச் சாண்வயிற்றைப் பூரிக்கப் பாட்டிசைத்தும் கோட்டி சேர்த்தும் தமதுமகிமையை எல்லாரும் அறிய வேண்டுமென்கிற ஒரே கருத்தை மனத்தில் பதியவைத் தவர்களாயிருக்கிருர்கள். நீ பெரும்பொருள் படைத்து யுத்தரங்கத்தில் அபஜயமென்பதை அறியாமல் சத்ருக்களை யெல்லாம் வென்று மமதையடைந்து தயா பரக்கடவுள் ஸர்வஸாக்ஷியாயிருக்கிருர் என்னும் உண் மையைமுற்றிலும் மறந்து ஸமய ஸஞ்சீவியென் னும் இச்சகம் பாடியாகிய உன் மந்திரியை ஒரு கருவியாக வைத்துக்கொண்டு அனேக பாவங்களை நீ செய்திருக்கிருய். அவற்றில் சிலவற்றை இத்தருணத் தில் உனக்கு எடுத்துச்சொல்வது அத்யாவச்யமென்று எனக்குத் தோன்றுகின்றது. குமணதேசத்தரசன் தன் பொருள்களை யெடுத்து வந்து உன்னிடத்தில் அடைக் கலமாய்ப் புகுந்தவனை இரவில் ஸமய ஸஞ்சீவியைக் கொண்டு வெட்டுவித்து அவன் பொருள்களை யெல் லாங் கவிர்ந்து பசுவைக்கொன்று செருப்புதானஞ்செய் ததுபோல் நீ மாருட்டங்கள் பல செய்திருக்கிருய். உன் சேனபதிகளில் ஒருவன் உன் சத்துருவை வென்று ஜயபேரிகை அடித்துக்கொண்டு உன் இராஜ தானிக்குத் திரும்பிவந்த காலத்தில் அவனிடத்தில் உனக்கும் உன் மந்திரிக்கும் பொருமை ஜனித்துக் கொலையாளிகளைக்கொண்டு நிரபராதியாயிருந்த சேனை த்தலைவனைக்கொல்வித்திருக்கிருய். பிறர் செய்த பாபச் செயல்களை வாயினற் சொல்வதும் பாபமென்பது பெரியோர் கொள்கை. எனக்குப்பாபம் வந்தாலும் வர லாகும். உலகரக்ஷணைக்கு நியமிக்கப்பட்ட அரசரிடத் தில் பாபங்கள் சேருமாயின் உலகம் சீரழியும். அரச னெவ்வழி அவ்வழி அவன்குடிகளானமையால் உனக்கு இனியாவது துர்ப்புத்தி நீங்கி நல்வழிப்படுதல் கிடைக்குமாறு சில ஹிதங்களையும் வருங்காலத்தில் நடப்பவைகளையும் சொல்லவேண்டுமென்று இவ்வளவு காலம் இங்குக் காத்திருந்தேன். தனித்துக்கேட்பாயாக" என்ருர்.

(இன்னும் வரும்.)

கே. வெங்கிட்டராமய்யர், பீ. ஏ.

# இந்துலேகை

## INDU LEKA—A MALAYALAM NOVEL

(அக்டோபர்மீ த்து ஸஞ்சிகை 132-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

"சரி, புகைவண்டி விஷயத்தில் அவள் சொல்லு வது சரியாயிருக்கலாம்" என்று சொல்லலுற்ருன் கேச வன் நம்பூதிரி, "அது எப்படியிருந்தபோதிலும் நூல் கம்பெனி சுழலச்செய்வது புகையே தவிர வேறில்லை. இது தவிர கம்பெனியின் கொடிக்கொம்புக்குள்ளாக வே ஏதோ மந்திரசக்தி யிருக்கிறதென்று எனக்கு நிச் சயமாய்த் தோற்றுகிறது. அதுவிஷயமாய் எனக்குச் சந்தேகமே கிடையாது. மாதவனே கோவிந்தக்குட்டி யோ ஏதோ கதை சொல்லி இந்துலேகையை ஏமாற்றி யிருக்கவேண்டும். இந்தக் கப்பெனிக்காரர்கள் இந்த அசடுகளுக்கு ஒருகாலும் நிஜத்தைச் சொல்லியிருக்கவே மாட்டார்கள். அவர்கள் ஏதோ பொய்யும் புளுகும் இவர்களுக்குச் சொல்லுகிருர்கள். அதை இந்த மேதா விகள் நம்பி பெண்டுகளிடத்திலும் மற்றவர்களிடத்தி லும் கிளிப்பிள்ளைபோல் ஒப்பிக்கிருர்கள். உள்மர்மத்தை அவர்கள் ஒருபோதும் சொல்லார்கள். அப்படி ஒரு வேளை சொல்வதாயிருந்தாலும் அவர்கள் மதத்தைச் சேர்ந்து அவர்களைப்போல் டொப்பி போட்டுக்கொள்ளு கிறவர்களுக்குத்தான் சொல்வார்கள்."

"நீ சொல்வது அவ்வளவு நிச்சயமென்று எனக்குத் தோற்றவில்லை;" என்ருள் லக்ஷ்மிகுட்டி, "புகைக்கா வதும் சத்தியம் நன்ருய்ச் சொன்னய்."

அதைக்கேட்டுக் கேசவன் நம்பூதிரி, "அப்படிச் சொல்லாதே. வாஸ்தவமாகவே புகையில் ஏதோ சக்தி இருக்கிறது. ஒரு திருஷ்டாந்தம் பார். யாகம் செய் யும்போது அக்னியில் உண்டாகும் புகைக்குச் சக்தியி ல்லையென்ரு உன் அர்த்தம்? இந்தக்கம்பெனி விஷயத் திலும் இப்படி ஏதோ ஒன்றிருக்கவேண்டும். அவர் களும் ஏதோ சில தேவதைகளின் தயவைச் சம்பாதிப் பதற்காக ஏதோ ஒருவிதமான யாகம் செய்துகொண் டிருப்பதாகவே எனக்கு அனுமானம் தட்டுகிறது. அந்தக் கொம்புக்குள் ஏதோ ஒரு விக்ரஹமோ அல்லது மந்திர சக்ரமோ இருக்கவேண்டும். யார் கண்டார்கள்? இந்த யாகம் அந்தத் தேவதைகளுக்கு அதிக பிரியமா யிருக்கிறதோ என்னமோ? அந்தத் தேவதைகளின் அநுக்ரஹத்தால் தான் இந்தக் கம்பெனி நடக்கிறதோ என்னவோ? இதையெல்லாம் அந்தச் சாக்ஷாத் விஷ்ணு பகவானைத் தவிர வேறே யாரால் கண்டுசொல்ல முடி யும்?" என்ருன்,

"என், நீ உள்ளே போய்ப்பார்த்து உண்மையைக் கண்டுபிடிக்க முடியாதா?" என்று கேட்டாள் லக்ஷ்மி குட்டி.

"லக்ஷ்மி, இப்படியும் ஒரு கேள்வி கேட்கலாமா? இந்தக் கம்பெனிக்காரர்கள் இதற்கு இடங்கொடுப்பார்களென்று நீ நினைக்கின்றாயா? அவர்கள் அப்படிச் செய்தால், அவர்களின் பெருமையே போய்விடாதா?" என்றான் கேசவன் நம்பூதிரி.

"அவர்கள் வெள்ளைக்காரர்கள் தானே. அவர்களுக்குத் தெரிந்த ரகசியங்களெல்லாம் அவர்களுடைய பாஷையாகிய இங்கிலீஷில் இருக்குமல்லவா? நம் பிள்ளைகள்தான் ஸ்கூலில் சேர்ந்து இங்கிலீஷ் படிக்கிறார்களே. அப்போது அந்தப் பஷையில் எழுதியிருக்கும் மேற்படி ரகசியங்களையும் படித்துத் தெரிந்து கொள்ளலாமே. அந்தக் கம்பெனியார் சொல்லித்தருகிறவரையில் ஏன் காத்திருக்கவேண்டும்" என்று கேட்டாள் லக்ஷ்மிகுட்டி.

"நம் பையன்களுக்கு அவ்வளவு புத்திகூடவா? இங்கிலீஷில் ஏ. பி. என்று அக்ஷராப்பியாசம் ஆரம்பித்தவுடனே ஸ்நான ஸந்திகளை விட்டுவிடவும் தலைமயிரை ஷோக்காய்க் கத்திரித்துக்கொண்டு பாழ்நெற்றியுடன் திரியவும் புத்தி உண்டாகிறதே யொழிய இங்கிலீஷில் சொல்லியிருக்கிற ரகசியங்களை யறிந்து வெள்ளைக்காரர்கள் செய்யும் அற்புத காரியங்களைத் தாமும் செய்ய ஒருவனும் பிரயத்னப்படுவதில்லை. ஏதோ சில புத்தகங்களைக் குருட்டுப்பாடம் போட்டுப் பரீட்சை கொடுக்கிற பெருமையே தவிர, ரெயில் எப்படி ஓடுகிறது, தந்தியின் ரகசியமென்ன, என்று இவர்களைக் கேட்டால் உனக்கும் எனக்கும் தெரிந்தது கூட அவர்களுக்குத் தெரியவில்லை. ஒரு சிறுவன் இங்கிலீஷ் படிக்க ஆரம்பிக்கிறானோ இல்லையோ, உடனே அவனுக்குத் தன் வீட்டிலுள்ள பெரியவாளிடத்தில் மதிப்பு போய்விடுகிறது. இதுதான் இங்கிலீஷில் கண்ட பலன்" என்றான் கேசவன் நம்பூதிரி.

"நீ சொல்வது சுத்த மோசமாயிருக்கிறது. அன்றைக்குத்தான் நான் இந்துலேகையைக் கேட்டேன். ரெயில் ஓட்டுகிற சங்கதியின் மர்மமெல்லாம் அவள் நன்றாய்விவரித்துச் சொன்னாள். அது எனக்குத் திவ்யமாய்த் தெரிந்துவிட்டது. நமக்குத் தெரிந்ததைவிட இந்தச் சிறு பிள்ளைகளுக்கு எவ்வளவோ அதிகமாய்த் தெரிந்திருப்பதாக எனக்குத் தோற்றுகிறது. அதனால்தான் நம்மை அவர்கள் அவ்வளவு இளப்பமாய் நினைக்கிறார்கள். கொஞ்ச நாளைக்குமுன் தந்தியைப்பற்றி மாதவன் எனக்குச் சொன்னபோது எனக்கு எவ்வளவோ சுவாரஸ்யமாயிருந்தது" என்றாள் லக்ஷ்மிகுட்டி.

"அதெல்லாம் சரிதான். இந்துலேகை ஒரு ரெயில் வண்டியை ஓட்டட்டும் பார்ப்போம். அப்போது நீ சொன்னதை நம்புகிறேன்" என்றான் கேசவன் நம்பூதிரி.

"அது எப்படியாகும்? முதலில் நம்மிடத்தில் ரயில் வண்டி யிருக்கவேண்டும். பிறகு இந்துலேகைக்கு ரெயிலோட்ட கற்றுக்கொடுக்கவேண்டும். பிரதிதினமும் ரெயில்வண்டிகளை ஓட்டுகிறவர்கள் சாமான்யமான வேலைக்காரர்கள் தானே. இங்கிலீஷ் படித்த நம் சிறுவர்களுக்கு அந்தரெயிலைப்பற்றிய சாஸ்திர விஷயங்கள் எவ்வளவு தெரியுமோ அவ்வளவு அவர்களுக்குத் தெரியுமா?" என்றாள் லக்ஷ்மிகுட்டி.

"லக்ஷ்மிகுட்டி நீ சுத்த மட்டி. இவர்கள் சொல்வதை நீ ஒருபோதும் நம்பக்கூடாது" என்றான் கேசவன் நம்பூதிரி.

"நான் என்னசொன்னாலும் உன் முரட்டுப்பிடிதான் உனக்கு. உன்னோடு வம்பு கொடுக்க என்னால் முடியாது. எனக்குத் தூக்கம் வருகிறது." என்றாள் லக்ஷ்மிகுட்டி.

கேசவன் நம்பூதிரி தனக்கும் தூக்கம் வருகிறதென்றான். அதன்மேல் லக்ஷ்மிகுட்டி கும்பகர்ணனுக்குச் சீட்டெழுதலானாள். கேசவன் நம்பூதிரியும் அந்தப்படியே செய்யப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கையில், திடீரென்று அவனுக்கு ஒரு ஞாபகம் வந்தது. அது என்னவென்றால், இந்துலேகைக்கும் தனக்கும் நடந்த சம்பாஷணையைக்குறித்தும் நம்பூதிரிப்பாட்டைக்குறித்தும் லக்ஷ்மிகுட்டிக்குச் சொல்வதற்காகவல்லவோ அவளை வந்து எழுப்பினான். நூல் கம்பெனியையும் மற்றசங்கதிகளையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டதில் தான் வந்த முக்கிய சங்கதியை மறந்துவிட்டான். இப்படியும் அசட்டுத்தனமாயிருந்துவிட்டேனே என்று கள்ளங்கபடற்ற அந்தப் பரம மூடன் தன்னைத்தானே நொந்துகொண்டான்.

## 7-ம் அத்தியாயம்

### கண்ணழி மூர்க்கிலாத்த மனக்கல் ஸூரி நம்பூதி. ப்பாடு.

ஒரு கதையைச் சரியாயும் சத்தியமாயும் எழுத வேண்டுமென்றுஆரம்பிக்கிற கிரந்தகர்த்தா அந்தக்கதையில் தான் சொல்லப்போகும் எந்தச் சங்கதிகளாவது யாருக்காகிலும் மனக்கொதிப்பையோ அல்லது வருத்

த்தையோ உண்டாக்குமென்று நினைப்பது அபூர்வம்.

ஆனல் இந்தமாதிரியாகக் கதைஎழுதுவது மலையாள தேசத்தில் நூதன முறையானபடியால் இந்தப் புஸ்தகத்தில் காணப்படும் சில சங்கதிகளில் என் வாசகர்கள் என்னுடைய கருத்தையும் நோக்கத்தையும் எங்கே பிசகாய்க் கிரஹித்து விடுகிறார்களோ என்ற சங்கையினல் அதுவிஷயமாக இங்கே இரண்டொரு வார்த்தை சொல்வது யுக்தமென்று தோற்றுகிறது.

இந்த அத்தியாயத்திலும் இதற்குப் பின் வரும் சில அத்தியாயங்களிலும் ஸ்திரபுத்தி யில்லாதவனும் ஸ்திரீ லோலனுமான ஒரு நம்பூதிரிப்பாட்டைப்பற்றிச் சொல்லவேண்டி யிருக்கிறது. எனக்கு மலையாளதேசத்தில் நம்பூதிரிமார்களைக் காட்டிலும் அதிக கௌரவத்துக்குரியவர்கள் யாரும் இல்லை. அவர்களுக்குள் அதிக புத்திமான்களாயும் சமர்த்தர்களாயும் உள்ள அநேகர் எனக்குத் தெரியும். அவர்களில் சிலர் எனக்கு ஆப்தமித்திரர்களாகவும் இருக்கிறார்கள். கெட்டிக்காரர்களும் மூடர்களும், புத்திமான்களும் புத்தியீனர்களும், சத்துக்களும் அசத்துக்களும் எந்தஜாதியிலும் உண்டு. அதுபோலவே நம்பூதிரிமாரிலும் இருக்கிறார்கள். இந்தக்கதையிலே ஒரு நம்பூதிரிப்பாடு பரம மூட சிகாமணியாக வர்ணிக்கப்பட்டிருப்பதாகக் காணப்பட்டால், அவரோடுகூடவே நம் வாசகர்களுக்கு அறிமுகமாகப் போகிற செருச்சேரி நம்பூதிரியென்னும் இன்னொரு நம்பூதிரிப்பாட்டின் சமத்காரத்தையும் ரஸிகத்தன்மையையும் கவனிக்கவேண்டும். அப்படிக் கவனிக்கும் பட்சத்தில், மலையாள தேசத்தில் சர்வ சாதாரணமாய்ப் பூஜிக்கப்படுகிறவர்களும் கௌரவிக்கப்படுகிறவர்களுமான நம்பூதிரிகளையும் நம்பூதிரிப்பாடுகளையும் ஏளனம் செய்யவேண்டும் என்ற துஷ்டபுத்தி எனக்கு ஒருகாலும் உண்டாகவில்லையென்று விவேகிகளும் பக்ஷபாதமற்றவர்களுமான என் வாசர்களுக்குத் தாராளமாய் மனதிற்படும் என்று நம்புகிறேன்.

இங்கிலீஷ் பாஷையிலுள்ள 'நாவல்' களிலே வரும் ஸ்திரீ புமான்களாகிய கதாபுருஷர்களின் குணவர்ணனையானது பற்பல அந்தஸ்துக்களிலுமுள்ள ஐரோப்பிய ஸ்திரீபுருஷர்களின் குணகுணங்களை அனுசரித்தே அமைக்கப்படுகிறது. அதுமாத்திரமல்லாமல் சில புஸ்தகங்களிலே, ஜீவதசையிலிருக்கும் பிரசித்தி பெற்ற துரைகளைக்கூட தூஷித்தோ, ஏளனம்செய்தோ அல்லது புகழ்ந்தோ சிற்சில சமயங்களில் எழுதுவதுண்டு; ஆனல் அப்படிப்பட்ட புஸ்தகங்கள் துஷ்ட எண்ணத்துடன் எழுதப்பட்டிருந்தாலொழிய, அவைகளில் காணப்படும் வர்ணனைகளைப்பற்றி மனஸ்தாபப்படவாவது சண்டைபோடவாவது ஒருவரும் யோசிப்பதில்லை.

ஆகவே இந்தப் புஸ்தகத்தில் சொல்லப்படும் சங்கதிகளின் நிமித்தம் யாரும் வருத்தங்கொள்ள மாட்டார்களென்னும் நம்பிக்கையோடு கதையை மேற்கொண்டு சொல்லுகிறேன்.

கேசவன் நம்பூதிரி பஞ்சுமேனனுக்குப் படித்துக் காட்டின கடிதம் இந்த அத்தியாயத்தின் தலைப்பில் கண்ட ஸூரி நம்பூதிரிப்பாட்டினிடமிருந்து வந்தது. "கண்ணழி மூர்க்கில்லாத மனை"யானது மலையாள நாடெங்கும் பிரசித்தி பெற்றிருந்தது. செல்வத்திலும் கௌரவத்திலும் அதற்கு இணையே கிடையாதென்று சொல்வதுண்டு. இந்த மனையிலே குபேர சம்பத்துடன் வாழ்ந்து வந்த நம்பூதிரிப்பாடுகளுக்குள் இளையவராயிருந்தார் நம்முடைய ஸூரி நம்பூதிரிப்பாடு. ஆனல் மூத்த நம்பூதிரிப்பாடு வயோதிகராகவும் நோயாளியாகவும் இருந்தபடியால் இந்தக் குடும்பகாரியங்களை நிர்வகிக்கும் முழு பொறுப்பும் ஸூரிய நம்பூதிரிப்பாட்டின் வசத்திலேயே விடப்பட்டிருந்தது.

இந்தக்கதை நடந்த காலத்தில் அவருக்கு வயது 45; அவர் பால்யம் முதல்கொண்டே குடும்ப விவகாரங்களை நிர்வாகஞ் செய்யவேண்டி யிருந்தபடியால், அவருக்கு வித்தியாப்பியாசம் இல்லாமற் போய்விட்டது. அவர் சுபாவத்தில் அதிக ஸ்திரீலோலராயிருந்தும் தம் ஜாதியிலேயே கலியாணம் செய்துகொள்ளவில்லை. அவரைக் கலியாணம்செய்துகொள்ளும்படி மூத்த நம்பூதிரிப்பாடு எவ்வளவு வற்புறுத்தியும் அவர் பிரம்மசாரியாகவே இதுவரையில் இருந்துவிட்டார். அவருடையஇளைய சகோதரர்களிருவருக்குக்கலியாணமாயிருந்தது. அந்தக் கலியாணங்களை அவர்தான் நடத்திவைத்தார். தான் மாத்திரம் சூத்திர ஸ்திரீகளுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டு அப்படி யிருப்பதிலேயே திருப்தியடைந்து காலங்கழித்து வந்தார். அவருடைய ரூபத்தைக் குறித்துப் பாதாதிகேசம் வரையில் வர்ணித்துச் சொல்ல எனக்கு உத்தேசமில்லை. அவர் பார்வைக்கு கோரமாயிருக்கும்படியான விகாரரூபியாய் இராவிட்டாலும், அவருடைய தேகம் நல்ல சிவப்பு வர்ணமாயிருந்தும், ஸௌந்தர்யமாவது காந்தியாவது அவருடைய உடம்பில் கொஞ்சமாகிலும் உண்டாயிருக்கவில்லை. அவருடைய அங்கங்களில் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கதொன்றுமில்லை. பொதுவாய் அவரைப் போன்ற தேகலக்ஷணமுடைய புருஷர்கள் மலையாளத்தில் லக்ஷம்பேர் இருக்கிறார்கள்; ஆனல் சிற்சில அம்சங்களில் மாத்திரம் அவருடைய முகத்திலும் பிரகிருதியிலும் இரண்டொரு விசேஷங்கள் காணப்பட்டன. அவர் சிரிக்கும்போது, அவருடைய வாய் இரண்டு பக்கத்திலும் விசாலமாய் விரிந்து இரண்டு காதுகள்வரையிலும் சென்று அவ்விடத்திலிருந்து மீண்டும் திரும்பி குவிந்திருக்கிறதோ என்று பார்க்கிற

வர்களுக்குத்தோற்றும். அவருடைய மூக்கு சரியாகவே சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும்அந்த முகத்துக்குப் பொருத்தமாயிராதபடி அவ்வளவு சிறியதாயிருந்தது. அவர் சாதாரணமாய் எல்லாரும் நடப்பதுபோல் நடக்காமல் காக்கையைப்போல் தட்டித்தட்டி அடியெடுத்து வைப்பார். ஸ்திரீ விஷயத்தில் இவருக்குள்ள சித்த சாபல்யத்தைப்பற்றி முதலிலேயே நாம் சொல்லியிருப்பதால், அந்தக் குண விசேஷத்தைப்பற்றி இங்கே விரித்துக்கூறுவது அநாவசியம்.

தனவானுயுள்ள ஒருவனுக்கு ஸ்திரீகள் விஷயத்தில் அபரிமிதமான சாபல்யம் உண்டாய்விட்டால் அவனுடைய மற்ற குணங்களைப்பற்றி விஸ்தரிப்பது அநாவசியம். ஸதா சர்வகாலமும் இந்த ஒரு எண்ணமே அவன் மனதில் குடிகொண்டிருக்கிறபடியால் இதற்குச் சம்பந்தமில்லாமல் மற்ற காரியங்களைக் கவனிக்க அவனுல் முடியாது.

நம்பூதிரிப்பாடு குடும்பகாரியங்களை மேல் விசாரணை செய்து வந்தாரென்பது பெயருக்கு மாத்திரந்தான். யதார்த்தத்தில் காரியங்களை நடத்திவந்தது மாதச்சம்பளக்காரரான காரியஸ்தர்களே. அவர்களில் சிலருடைய சாமர்த்தியத்தால் காரியங்கள் ஒருவிதத்தில் சரியாகவே நடந்தேறிவந்தனவென்று சொல்லலாம்.

இந்த நம்பூதிரிப்பாடு சூதுவாது ஒன்றும் தெரியாத சாதுவாயிருந்தாலும், இவரிடமிருந்த துர்க்குணங்களால் இவர் சாதுவென்று ஒருவரும் நம்புவதற்கில்லாமற் போய்விட்டது. சாதாரண அறிவும் கல்வியுமற்ற தனவான்களுக்குள் சகஜமாயிருப்பதுபோலவே இவருக்கும் தம்மைப்பற்றிப் பெருத்த அபிப்ராயம் உண்டாயிருந்தது. இவர் காரிய நிர்வாகத்தில் மகா நிபுணரென்று இவருடைய சேவகர்களாகிய காரியஸ்தர்களும், அழகில் சாக்ஷாத் மன்மதனே யென்று இவர் வைத்திருந்த வைப்பாட்டிகளும் முகஸ்துதி பண்ணி இந்த மகா மூட சிகாமணியை முழுவதும் நம்பச் செய்தார்கள். இப்படி முகஸ்துதி கேட்டுக் கேட்டு இந்த அசட்டுப்பிராமணர் தாம் உள்ளபடியே ஒருமகா புருஷன் என்று நிச்சயமாய் நம்பலானுர். பழி பாவத்துக்கஞ்சாமல் பணம் பிடுங்குவதையே தொழிலாகக் கொண்ட வஞ்சக வேசிகள் இவருடைய தேக காந்தியைப்பற்றி உளறும் அபத்தங்களெல்லாம் இந்த அசடு வாஸ்தவத்தில் தன்னிடத்திலுள்ள குணங்களே யென்று நம்பி மகா டாம்பீகமாய் நடந்துகொள்ளுவார். வயது நாற்பத்தைந்தாயிருந்தும்இவரைப் பிடித்திருந்த இந்த மோகப்பேய் சிறிதும் விட்டபாடில்லை. "என் துரையே! தங்கள் திருமேனியைக் காணுமல் ஒரு நொடிப்பொழுதும் அடியாள் இருக்க முடியவில்லை" என்று ஒருத்தி எப்போதோ ஒருகால் பேசியது. இவருடைய மனத்தில் கல்லின் மேல் எழுதிய எழுத்தைப் போல் இன்னும் அழியாமல் அழுத்தமாய்ப் பதிந்து கிடக்கிறது. "என் துரையே, தேவரீர் திருமேனியைத் தழுவிக்கொள்வதால் உண்டாகும் திவ்ய சுகத்தைவிட அடியாளுக்கு வேறென்ன பாக்கியம் இருக்கிறது. பணம் காசு யாருக்குவேண்டும்? அது யாருக்குத்தான் கிடைக்காது? இப்படிப்பட்ட திவ்யத்திருமேனி எங்கே காணக்கிடைக்கும்?" என்றுஇன்னெருத்தி சொன்னதை இவர் வேதவாக்கியமாய்ப் போற்றி மனதில் வைத்திருக்கிறுர். கடைசியாக இவர் செருச்சேரி இல்லத்துக் கோவிந்தன் நம்பூதிரியைச் சிநேகம் செய்துகொண்டு அவரை எப்போதும் தன்னிடத்திலேயே வைத்திருந்தார். இவரைப்போல் அவ்வளவு சரசப்பேச்சும் சாமர்த்தியமுமுள்ள மற்றெருவரை நான் எங்கும் கண்டதில்லை. ஸம்ஸ்கிருத பாஷையில் அற்புதமான வித்பத்தி; வியாகரண சாஸ்திரத்தில் அபாரமான பாண்டித்தியம். சங்கீத வித்தையில் சிறந்த ஞானம். அவருடைய தேககாந்தியும் முகதேஜஸ்ஸும் நேத்திரானந்தமாயிருக்கும். சரசமாய் ஸம்பாஷணை செய்வதில் இவருக்கு ஒப்பாகச் சொல்லக்கூடியவர் ஒருவரும் எனக்குத் தோற்றவில்லை. இவரிடத்தில் ஒருவித துர்க்குணமும் கிடையாதென்றுலும் பரிகாசத்துக்கிடமாய் நடந்துகொள்ளுபவர்களிடத்தில்மாத்திரம் இவருக்குச் சிறிதும் தயை தாட்சிண்யம் கிடையாது. இவருடைய பரிகாச வார்த்தைகளுக்குப் பயப்படாதவர்கள் கேவலம் புத்தியீனர்கள் மாத்திரமாகவே யிருந்தார்கள். பரிகாசம் செய்தால் சுரணையற்றிருப்பவர்களே இவருக்கு அஞ்சாமலிருந்தவர்கள்; நம்முடைய ஸூரி நம்பூதிரிப்பாட்டுக்கும் இவரிடத்தில் பயமில்லை. ஸூரி நம்பூதிரிப்பாட்டினிடத்தில் இவருக்கு எப்போதும் சிநேகபுத்தி கிடையாது; அவரை வெகு அலக்ஷியமாய்க் கருதியிருந்தார். ஆனபோதிலும் அந்தக் கருத்தை வெளிப்படையாய் காட்டுவதுஅனுசிதமல்லவா? ஸூரி நம்பூதிரிப்பாடு செல்வத்திலும்கௌரவத்திலும் நம்பூதிரிமார்களுக்குள் முக்கியஸ்தராயிருந்தபடியால், அவருக்கு வெளிக்காகிலும் எப்படி மரியாதை காட்டாமலிருக்கமுடியும்? ஸூரி நம்பூதிரிப்பாட்டுக்குத் தன்னைப்பற்றி யாராவது முகஸ்துதி செய்தவரை கேட்க வெகு பிரியம். அது நிந்தாஸ்துதியா அல்லது வாஸ்தவமான புகழ்ச்சியா என்று தெரிந்துகொள்வதுமாத்திரமே பிரயாசம். ஸூரி நம்பூதிரிப்பாட்டுக்குச் சகல குணசபன்னரான நாராயணன் நம்பூதிரி என்னும் பெயருள்ள தம்பி ஒருவர் உண்டு. அவர் கோவிந்தன் நம்பூதிரிக்கு ஆப்த ஸ்நேகிதர். என்றுலும் மூர்க்கில்லாத மனைக்குப் போகும்போது அவரைக்கண்டு பேசுவதென்றுல் இவருக்குப் பிரம்ம பிரயத்னமாயிருக்கும். அந்த மனைக்குச் செல்லும்போதெல்லாம் இவரை ஸூரி நம்பூதிரிப்பாடு தானிருக்கும். மாளிகைக்கு உடனே வரவழைத்து விடுவார். பிறகு அங்கிருந்து தப்பித்துக்கொண்டு லேசில் போகமுடியாது.

ஸூரி நம்பூதிரிப்பாட்டுக்கும் கோவிந்தன் நம்பூதிரிக்குமுள்ள சம்பந்தம் இவ்விதமாக இருந்தது. ஸூரி நம்பூதிரிப்பாட்டைச் சொர்க்கலோகம்வரையில் உயர்த்திப் புகழ்ந்தாலொழிய அவருக்குக் கோபம் பிறந்துவிடு

மாகையால் வீணே அவருடைய ரோஸத்துக்கும் கோபதாபத்துக்கும் ஏன் ஆளாகவேண்டுமென்று நினைத்துக் கோவிந்தன் நம்பூதிரி அவரை இந்திரன் சந்திரனென்று வாய்கொண்டமட்டும் வீண் ஸ்துதி செய்வது வழக்கம். தன்னைப்போல் ரூபவானும் சிறந்த காரிய நிர்வாகியும் இந்தப் பூலோகத்தில் வேறொருவர் கிடையாதென்று யார் தன்னைப்புகழ்ந்து பேசுவதில்லையோ அப்படிப்பட்டவரிடத்திலெல்லாம் அதிக அதிருப்திகொண்டு விரோதம் பாராட்டுவது நம்பூதிரிப் பாட்டின் சுபாவமாதலால், செருச்சேரி நம்பூதிரிக்கு அவரை ஆகாசத்தில் தூக்கி வைப்பதைவிட வேறே வழி ஒன்றும் காணவில்லை.

நம்பூதிரிப்பாட்டின் வேறொரு குணவிசேஷமென்னவென்றால்,கூத்துப்பார்ப்பதில் அவருக்குப்பெரும் பயித்தியம். 'கதகளி' என்னும் மலையாளதேசத்துக் கூத்துகளைப் பார்ப்பதென்றால் அவருக்கு அதிககொண்டாட்டம். வருஷத்தில் 365 க்கு அதிகமான நாளிருந்து, அந்த நாள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆட்டம் ஆடிபார்த்தால் கூட அவருக்கு ஆவல் தீராது. இதனால் கூத்துகளை ஆதரிப்பதில் இவர் மகா உதாரியென்றும் அவைகளின் குறைகுணங்களை யாராய்ந்தறிவதிலும் ஒருவிதத்தில் சமர்த்தராயிருந்தாரென்றும் பெயர்பெற்றிருந்தார். இவருடைய இளைய சகோதரர்கள் உள்ளபடியே கெட்டிக்காரர்களாயிருந்தும் அவர்கள் சுத்தமட்டிகளென்பது இந்த மேதாவியின் கருத்து.

நம்பூதிரிப்பாடு குளக்கரையில் எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கும்போது கேசவன் நம்பூதிரியின் கடிதம் வந்தது. அதைப் படித்தவுடனே இந்தக்ஷணத்தில் செருச்சேரி நம்பூதிரியை அழைத்துவரும்படி உத்திரவு செய்தார். வெற்றிலைப் பெட்டிக்காரனான கோவிந்தன் அந்த உத்தரவைப்பெற்றுச் செருச்சேரியை அழைத்துவர வெளியிட்டான். இந்தக் கோவிந்தனென்பவன் மகா சாமர்த்தியசாலியான திருட்டுப்பையல். யஜமானனுடைய சுபாவமுழுவதையும் நன்றாய் அறிந்து அவருடைய குணதோஷங்களை யெல்லாம் சொற்பங்கூடவிடாமல் குறித்துவைத்திருந்தான். ஆனபோதிலும்நம் பூதிரிப்பாட்டினிடத்தில்இவனுக்குஅதிக பக்திசிரத்தை யுண்டு. அவன் செருச்சேரி இல்லத்துக்குச் செல்லும்போது, கோவிந்தன் நம்பூதிரி போஜனம்முடித்துத் தெருத்தாழ்வாரத்துக்கு வந்து சதுரங்கமாடுவதற்கு ஜனம் சேர்த்துக்கொண்டிருந்தார். கோவிந்தனைப்பார்த்ததும் "என்னடா செய்தி? எதுக்காக இவ்வளவு அவசரமாய் வருகிறாய்?" என்றார்.

கோவிந்தன்—அங்கே கொஞ்சம் வந்துவிட்டுப் போகும்படி சொல்லச்சொன்னார்.

செரு.—நம்பூதிரி போஜனம் பண்ணியாயிற்றா?

கோவி.—இல்லை,குளக்கரையில் எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கிறார்.

செரு.—அப்போ எதுக்காக இவ்வளவு தடபுடல்? விசேஷ சங்கதி ஏதாவதுண்டோ? [இன்னும் வரும்.]

# மாணவர் பக்கம்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

## *Essay writing*

### 2. கதா வியாஸங்கள்

### NARRATIVE ESSAYS

### (2) வெளிநாட்டோர் சரிதை:-மைகேல் பாரடே.

### Lives of Foreigners:—Michael Faraday

குறிப்பு:—முகவுரை—பிறப்பும் இளமையும்—கஷ்டநிலை.—யௌவனம், வாழ்க்கைத் தொழில்—தேர்ச்சி, மேலானநிலை—முடிவு, கருத்து முதலியன.

மேல்நாட்டில் சிறப்புற்று விளங்கியவர்கள் பெரும்பாலாரும் ஆதியில் மிகத்தாழ்ந்த அல்லது ஸாதாரணமான நிலையிலிருந்து தமது மனோதிடம் ஆவல் முதலியவைகளாலேயே தாம் தாம் வாழ்க்கைத்தொழிலில் மிக விருத்தியடைந்து பேர்பெற்றவர்கள். இவர்கள் மிகுந்த கஷ்டங்களுக்கிடையில் தமக்கும் ருசித்த தொழில்களில் விடாது முயன்று கிடைத்த ஸாதனங்களைக்கொண்டு வேண்டியவைகளை ஏற்படுத்திக் கொண்டு தேர்ச்சி அடைந்த விதம் மிக அற்புதமாக இருக்கும். இம்மாதிரி தேரி முன்னுக்கு வந்தவர்களுள் மைகேல் பாரடே என்பவர் ஒருவர்.

இவர் குடும்பத்தவர்கள் வெகுநாளாக யார்க் மாகாணத்தில் ஸாதாரண நிலையில் இருந்தவர்கள். இவர் தகப்பனார் ஜேம்ஸ் பாரடே என்பவர் கல்யாணமானதும் கம்மாளன் தொழில் செய்ய லண்டன் நகரம் வந்து சேர்ந்தார். அங்கு வந்து கொஞ்ச நாளைக்கெல்லாம் மைகேல் பாரடே அவருக்கு மூன்றாம் பிள்ளையாகப் பிறந்தார். இவர் தன் தங்கையைப் பிடித்துக் கொண்டு தெருவில் அலைந்து திரிந்து ஸமவயதுக் குழந்தைகளுடன் இளமைப்பருவத்தில் அதிகமாக விளையாடி வந்தார். வயதாக அருகாமையிலிருந்த பள்ளிக்கூடமொன்றில் எண்ணும் எழுத்தும் கற்றுக் கொண்டார். இவ்வளவுதான் இவர் பள்ளிக்கூடத்தில் படித்தது. மற்றவை எல்லாம் இவர் தம்முயற்சியாலேயே ஸம்பாதித்தவை.

இவர் குடும்பம் ஸாதாரண நிலையிலிருந்ததால் இவர் ஏதாவது ஓர் தொழிலில் சீக்கிரம் அமர்ந்து இவரால் இயன்றமட்டும் ஸம்பாதிக்கவேண்டியது அவசியமாக ஏற்பட்டது. அப்பொழுது ஓர் ஸமாசாரப்பத்திரிகைக்காரரிடம் வேலையாளாக அமர, இவர் தினம் ஞாயிற்

றுக்கிழமையன்றுகூட ஓயாது சுற்றி யலைந்து பத்திரிகைகள் கொடுக்கவேண்டி வந்தது. இதில் பொறுத்துக்கொண்டு பாரடே ஒருவருஷம் இருந்துவிட்டு முடிவில் அங்கேயே வேலை கற்றுக்கொள்ள ஏழுவருஷம் ஒப்பந்தம் செய்துகொண்டு அமர்ந்தார். இவருக்கு இது கஷ்டமாகத் தோன்றியபோதிலும், 'எங்கிருந்தாலும் எவ்விதத்திலும் கஷ்டப்பட்டுத்தானே தீரவேண்டும்.' என்று தம்மை ஒருவாறு தேற்றிக்கொண்டு, தாம்செய்வனவற்றைத் திருந்தச் செய்துவிடுவதாகத் தீர்மானித்தார். இவரது வேலையைக்கண்ட யஜமானன் இவரிடமிருந்து வேலை கற்றுக்கொடுக்க முன்பணம் ஒன்றும் கேட்காது இவருக்குப் புஸ்தகம் அட்டைகட்டும் வேலையைச் சொல்லிக்கொடுத்தார். இவர் மனப்பூர்வமாக வேலைசெய்து வந்தார். இவர் யஜமானரும் யஜமானியும் மிக நல்லவர்களாக இருந்ததால் வேலையில் பிடிப்பில்லாவிடினும் அதைவிடாது ஒழுங்காகப் பார்த்து வந்தார். அட்டைகட்டத் தம்மிடம் வரும் புத்தகங்களுள் பிரகிருதி சாஸ்திர புஸ்தகங்களைக் கண்டால் இவர் விடாது அதைப்படித்தே தீர்ப்பார். இவருக்கு வஸ்து தத்வ சாஸ்திரத்தில் அதிகப்ரீதி. இவர் உடைந்த வீஸாவை வைத்துக்கொண்டு முதலில் ஓர் மின்சார யந்திரம் செய்து பரீக்ஷைகள் பார்த்தார். இவ்வாறு புஸ்தகங்களுக்கு அட்டை கட்டும் தொழிலில் இருந்துகொண்டே வஸ்து தத்வசாஸ்திரப் புஸ்தகங்கள் வாசித்தும், கூடியவரையில் பரிசோதனைகள் பார்த்தும் இவர் தமது அறிவை முதிரச் செய்துகொண்டு வந்தார்.

இப்படி இருக்கையில் இவர் சில ஸமயங்களில் லண்டனுள் வேலை விஷயமாகப் போவது உண்டு. அப்பொழுது டான்டம் துரை பிரகிருதி சாஸ்திர விஷயமாகச் சில உபந்யாசங்கள் தமது வீட்டில் இரவு 8 மணிக்குச் செய்துவரப் போகிறதாகவும், ஓர் உபன்யாஸத்திற் 1 ஷில்லிங் கொடுத்துக் கேட்க வரவேண்டும் என்பதாகவும் வழியில் ஒட்டியிருந்த பத்திரிகைகளால்இவருக்குத் தெரியவந்தது.இவர் யஜமானன் இவரை அக்காலத்திற்குச் சரியாக வேலையை முடித்துக்கொண்டு போய்விட அனுமதி கொடுத்தார். இவர் தமயன் உபன்யாஸம் கேட்பதற்கு வேண்டிய பணம் கொடுத்து உதவி செய்தார். 1810 முதல் 1811 வரை இந்த உபந்யாஸங்களைக் கேட்டும், அங்கு வந்தவர்களிடம்ஸம்பாஷித்தும், அவர்களிடமிருந்தும், டான்டம் அவர்களிடமிருந்தும் புஸ்தகங்கள் வாங்கி வாசித்தும் பாரடே தமது அறிவைத் தீட்டிக்கொண்டார்.

இம்மாதிரி இவர் தேர்ச்சியடைந்து வந்த காலத்தில் ஒருநாள் பிரிடன் வித்ய மண்டலம் என்ற புத்தகம் அட்டைகட்டுவதற்கு இவரிடம் வந்தது. அதில் மின்சார விஷயமாக எழுதியிருந்த வியாஸத்தைக் கண்டதும் புத்தகத்தை வைக்க மனம் வராதவராய் பாரடே ஆழ்ந்து அதை வாசிக்கத் தொடங்கினர். அப்பொழுது அங்கு வேலை கொடுத்திருந்தவராயும், ராஜாங்க வித்யாஸங்கத்தின் அங்கத்தினராயும் இருந்த டான்ஸ் என்பவர் அங்குவர, பாரடேக்குப் பிரகிருதி சாஸ்திர விஷயங்களில் இருந்த ஆவலைக் கண்டார். மிகுந்த ஸந்தோஷம் அடைந்து, தமது ஸங்கத்தில் ஸர் ஹம்பிரி டேவி என்ற தத்துவசாஸ்திரி கொடுக்கத்தீர்மானித்திருந்த நான்கு உபந்யாஸங்களைப் போய்க் கேட்டு வருவதற்கு அவசியம் வேண்டியதான சீட்டுகளைப் பாரடேக்குக் கொடுத்தார். இதை வைத்துக்கொண்டு இவர் அந்நான்கு உபந்யாஸங்களையும் கேட்டு, தம் தொழிலின் இடையில் அவைகளை ஞாபகத்திலிருந்து தொடர்ச்சியாக எழுதித் தம்கையாலே தகுந்த சித்ரங்களையும் எழுதி அமைத்தார்.

இதற்குள் வேலை கற்றுக்கொள்ள ஏற்படுத்திய காலம் முடிந்தது. பின்னர் வேறு ஒருவரிடம் இதே வேலையில் சம்பளத்திற்கு அமர்ந்தார். புதிய யஜமானர் நல்லவராக இல்லாதபடியால் வேறு நல்லவேலை கிடைத்தால் இதை விட்டுவிடவேண்டும் என்ற தீர்மானத்துடன் நாட்கள் கழித்துவந்தார். பிரகிருதி தத்வசாஸ்திர ஆராய்ச்சியில் இவர் இப்பொழுதும் விடாது பழகி வந்ததால் இம்மாதிரி சாஸ்திரத்தொழிலில் அமர்ந்துவிட்டால் நல்லது என்று இவருக்குப்பட்டது. உடனே இவர் ஸர்ஹம்பரிடேவிர்க்கு நேரே ஒருகடிதம் எழுதி அதில் அவர் கீழ் ஏதாவது தகுந்தவேலை காலியாக இருந்தால் தமக்குக் கொடுக்கும்படி கேட்டிருந்தார். தம் தேர்ச்சியை அவருக்குக் காட்டுவதற்காக, அவரிடம் இருந்து கேட்டிருந்த உபந்யாஸத்தை நன்றாகச் சித்திரங்களுடன் எழுதிக் கடிதத்தோடு அனுப்பியிருந்தார். டேவி இதைக் கண்டதும் பாரடேயின் தேர்ச்சிக்கும் நேர்மைக்கும் மிக மெச்சி சீக்கிரத்தில் தமது பரிசோதனைச்சாலையில் உதவிக்காக அவரை மாஸம் 5-பவுன் சம்பளத்தில் நியமித்துவிட்டார். பாரடே மார்ச்சு 1813-ஆல் இந்த வேலையை ஒப்புக்கொண்டு தமது தேர்ச்சியை நன்கு வெளிப்படுத்தி நாளடைவில் அந்த ராஜாங்க ஸங்கத்தில் டேவிக்குப் பின்னர் அக்ராஸனாதிபதியுமானர்.

இவ்வாறு வெகுகாலம் மனப்பூர்வமாகப் பாடுபட

யத்தனித்தால் அஸாத்யமென்பது மனிதனுக்கு ஒன்றும் இல்லை என்று தமது முயற்சிகளால் பார்ப்பவர்கள் மனதில் பதியும்படி செய்துகொண்டு இம்மேலான பதவியில் வெகுகாலம் இருந்து முடிவில் 1867-வருஷம் ஆகஸ்ட்டு மாதம் இவர் தேகம் நீங்கினர்.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்.

1. லார்ட் க்ளைவ்
2. லார்ட் வில்லியம் பெண்டிக்
3. லார்ட் மெகாலே
4. ஸர் ஐஸக் நியூடன்
5. ஜேம்ஸ் வாட்
6. ஸர் வில்லியம் [ஜோன்ஸ்
7. ஜார்ஜ் வாஷிங்டன்
8. எமர்ஸன்
9. லாங்பெல்லோ
10. வேர்ட்ஸ்வர்த்

### போதக்குறிப்புகள்.

இக்குறிப்புகள் எல்லா வியாஸ விஷயங்களிலும் விவரிக்க முடியாமலும் இருக்கலாம்.

1. முகவுரை.
2. பிறப்பும் இளமையும்
3. கஷ்ட நிலைகள்
4. யௌவனம், வாழ்க்கைத்தொழில்
5. தேர்ச்சி மேலான நிலை.
6. முடிவு, கருத்து முதலியன.

## மொழிபெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS.

### The Distribution of plants.

Plants are found on nearly all parts of the surface of the globe, but no two countries have all their plants alike. They are found in the greatest luxuriance and variety in hot and damp climates. They are not found in the very coldest or very driest regions, nor at very great depths in lakes, or in the ocean. As a rule, they diminish in size, as well as in number of kinds, in proceeding from the tropics to the frigid zones ; as regards size there are exceptions, as the gum trees of South Australia and the Wellingtonia of California, which are amongst the most gigantic of known plants ; the seaweeds of cold seas are also far more bulky than those of the tropical regions.

Besides the plants now growing upon the surface of the earth, the remains of many others that are no longer living anywhere, are found in rocks at various depths beneath it. Of these, those that lived most recently and are hence found in the more newly formed rocks, are like existing plants ; those that lived longer ago are less like existing ones, and are sometimes very different-looking indeed. In short, the longer ago the plants lived the less like they were to plants now living ; but however different are the plants that lived longest ago, they all seem to have grown much in the same way, to have depended on similar conditions, of light, heat, and moisture, and to have followed the same general course of life.

—*Hooker's Botany Primer pages* 14 *and* 15.

### ஸ்தாவரங்களின் அமைப்பு

பூமியில் சற்றேறக்குறைய எல்லாப்பாகங்களிலும் ஸ்தாவரங்கள் காணப்படுகின்றன; ஆனல் ஒருதேசத்தில் உள்ள ஸ்தாவரங்களைப்போல வேறு ஒரு தேசத்து ஸ்தாவரங்கள் இருப்பதில்லை. உஷ்ணதேசங்களிலும் சதுப்புதேசங்களிலும் அவைகள் மிகுந்த செழிப்பாயும் விசித்திரமாயும் விளங்குகின்றன. மிகக்குளிர்ந்து அல்லது வறண்டு கிடக்கும் பிராஞ்சியங்களிலும், எரி ஸமுத்திரம் முதலியவைகளில் மிக ஆழமான பாகங்களிலும் அவைகள் காணப்படா. உஷ்ணதேசம் முதல் மிகக்குளிர்ந்த தேசம் நோக்கிப் போகப்போக ஒழுங்காக அவைகள் உருவத்திலும், பேதத்திலும் குறைந்துகொண்டே வருகின்றன ; இவைகளுக்கு உருவ விஷயத்தில் சிற்சிலவிடங்களில் மாறுபாடுகளும் உண்டு; அவையாவன, தெரிந்த ஸ்தாவரங்களுள் மிகப்பெரியன வாகிய தேன் ஆஸ்திரேலியா பிஷின் மரங்களும், காலிபோர்னியாவிலுள்ளவெல்லிங்டோனியா என்ற மரங்களும் ஆகிய இவைகளே; மேலும் மிகக்குளிர்ந்த கடல்களுள் உள்ள கடற்பாசிகள் உஷ்ணதேசங்களில் உள்ளவைகளைவிட மிகப் பெரியனவாகவும் காணப்படுகின்றன.

இப்பொழுது பூமியின்மேல் வளர்ந்து வரும் ஸ்தாவரங்களும் அல்லாமல், பாறைகளுள் அநேக மட்டங்களில் இப்பொழுது வளராது க்ஷீணித்துப்போன ஸ்தாவரங்களின் மிகுதிகள் புதைந்து காணப்படுகின்றன. இவைகளுள் கொஞ்சநாளைக்குமுன்னர் வளர்ந்துகொண்டிருந்தவைகள் புதிதாக ஏற்பட்ட பாறைகளுள் இருந்து, இப்பொழுது இருக்கும் ஸ்தாவரங்களைப்போலவே இருக்கின்றன ; வெகு நாளைக்கு முன் வளர்ந்து பட்டுப்போனவைகளோ இக்காலத்தவைகளைப்போலிரா, சிற்சில விடங்களில் அவைமிகவும் மாறுபட்டே தோற்றுகின்றன. சுருங்கச்சொல்லப்புகில், ஸ்தாவரங்கள் வளர்ந்து வந்த காலம் இன்றைக்கு எவ்வளவுக்கெவ்வளவு முன்னருள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு அவைகள் இக்காலத்தவைகள் போன்றிராது மாறுபட்டிருக்கும் ; ஆனல் வெகு காலத்திற்கு முன் வளர்ந்து வந்தவைகள் எவ்வளவு மாறுபட்டுக் காணப்படினும், அவைகள் எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் வளர்ந்து வந்தன ; அதாவது அவைகள் ஒளி உஷ்ணம், ஈரம் இவைகளைப் பொறுத்தனவாகி, இக்காலத்து வளர்ச்சியின் பொதுமார்க்கங்களையே பின்பற்றியிருந்தன, என்பது வெளியாகிறது.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

ஜடபரதர் சரித்திரம்(2).—விட்டதுறையின் சிறப்பு—

எப்பொருளைச் சிந்திப்பான்
இவ்வுடல்விட் டேகும்போ
தப்பொருளே யேயொருவன்
ஆர்ந்திடுவன்—பொற்பினவன்
எப்பொழுதும் சிந்தித்
திருந்திடலால் அந்நினைப்பைச்
செப்பிய உண்மையினைத் தேர்.

என்பது கீதாவாக்கியம். இதன்படி மரணகாலத்தில் ஒருவனுக்கு எந்த எண்ணம் மனத்தில் ஊறிக்கொண்டிருக்கிறதோ அதற்கு ஏற்பவே அவனுக்கு அடுத்த ஜன்மம் வரும் என்பது ஆயிற்று. இதற்கேற்பவே பாதருக்கும், முடிவுகாலத்தில் அவர் மனம் மான்ரூபத்தியானத்திலேயே இருந்ததால், அடுத்த ஜன்மத்தில் மான் உருவம் வந்தது. இம்மாதிரி மேல் நோக்கிப் போகும் மஹான்களுக்கு ஏதோ பிரதிபந்த காரணமாக வரும் தாழ்ந்த ஜன்மங்களுக்கும் ஸாதாரண தாழ்ந்த ஜன்மத்திறகும் மிகுந்த வித்யாஸம் உண்டு. மோக்ஷமார்க்கத்தில் ஒருவன் செய்யும் முயற்சியை எவ்விதப் பிரதிபந்தங்களாலும் தடைகளாலும் அழிக்கவே முடியாது. ஆனால் பிரதிபந்தங்கள் அம்முயற்சியின் பலனை உடனே வரவொட்டாமல் கொஞ்சநாள் தடுத்து மாத்திரம் நிறுத்தும் திறனுடையன. இப்பிரதிபந்தங்களால் வரும் கஷ்டங்கள் இருந்துகொண்டிருக்கையிலேயே நன்முயற்சியில் விட்ட துறையின் சிறப்பால் அந்த விஷயம் ஒரு ஜீவன் மனத்தில் ஊறிக்கொண்டாவது அல்லது மறைந்துக்கொண்டாவது கிடக்கும். பிரதிபந்த வேகம் அடங்கியதும் இந்த விட்டதுறை வந்து தொட்டுக்கொள்ளும். உடனே விட்ட விடத்திலிருந்து மோக்ஷமார்க்க முயற்சி தொடங்கப்படும். ஸாதாரணப் பிராணிகள் கிரமமாக மேலான ஜன்மங்கள் அடைந்து நாளடைவில் சிறந்த மனிதஜன்மம் பெறவேண்டும். முறகூறியபடி பிரதிபந்த வேகத்தால் தாழ்ந்த ஜன்மம் அடையும். சிறப்பான ஜீவர்கள் அவ்வாறு இன்றி, பிரதிபந்த பலத்தால் ஏற்படும் ஜன்மங்கள் முடிந்ததும் உடனே மனித ஜன்மத்தை அடைந்து முன்விட்ட விடத்தில் தொடங்கி அந்த ஜன்மத்திலேயே பரமபதம் பெற்றாலும் பெறுவர். இவ்விரண்டு விஷயங்களில்தான் ஸாதாரண தாழ்ந்தஜன்மத்திற்கும், பிரதிபந்த பலத்தால் மஹான்களுக்கு வரும் தாழ்ந்த ஜன்மங்களுக்கும் முக்கியமான வித்யாஸம் இருப்பது.

பரதமான் (பரதருக்கு வந்த மான் உருவம்) ஸாதாரண மான்கள் போன்றதன்று. இதைக்கேட்டதும் சில புராணிகர்களும், சில மதத்தவர்களும் கூறுவதுபோல 'சரீரத்திலேயே இதற்கும் மற்றைய மான்களுக்கும் மிகப்பேதம் இருந்தது இதன் சரீரம் மற்றைய மான்களதுபோல மாம்ஸ ரக்தம் முதலியவைகளால் ஆக்கப்பட்டதல்ல. இதன் சரீரம் ஓர்வித திவ்விய சரீரம் அப்ராகிருதமானது' என்று எண்ணிவிடவே கூடாது. இம்மாதிரி கூறுவது சாஸ்திர ஒழுங்கிற்குப் பொருந்தியதல்ல. இவ்வாறு கூறுவது வீண் அற்புத வார்த்தை கூறி ஸாதாரண ஜனங்களைப் பிரமிக்கச் செய்யும் மதவித்தர்களது விளங்கா மொழிகளே ஒழிய வேறில்லை. இங்குக் கூற வந்தது யாதெனில் இந்தப்பரதமான் தேஹம் முதலிய ஸ்தூல விஷயங்களில் மற்றைய மான்கள் போலவே தான் இருந்தது; ஆனல் மனத்தில் இதற்கு மான்களுக்கு இல்லாத சிறந்த பக்தியும், அற்புத எண்ணங்களும் ஊறிக்கொண்டும், தன் பூர்வஜன்ம விருத்தாந்தம் ஞாபகத்தில் மாறாது இருந்துகொண்டும் இருந்தன. ஆகவே பிரதிபந்தத்தால் பரதருக்கு இந்த மான் ஜன்மம் வந்தபோதிலும், முன் ஜன்மத்தில் செய்துள்ள நிஷ்டையாதிகளின் சிறப்பைப் பிரதிபந்தங்களால் மறைக்க முடியவே இல்லை.

இம்மாதிரி ஊறும் எண்ணங்களால் இந்த மானுக்கு 'பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு' என்ற கதையாய் மிகுந்த பயம் ஏற்பட்டது. 'முன்ஜன்மத்தில் வெகுதூரம் மோக்ஷமார்க்கத்தில் விருத்தியாகிப் பரமபதம் பெற்று ஆனந்திக்கவேண்டிய ஸமயத்தில், ஜீவகாருண்யம் அபிமானமாகத் தடித்து நம்மை மோசம்செய்துவிட்டதே! அதனலல்லவோ இந்த ஜன்மம் நமக்கு வந்தது! இப்பொழுது அம்மாதிரி ஒன்றும் செய்ய முடியாமலும் நிஷ்டை முதலியவற்றில் பழக முடியாமலும் இருக்கிறதே! கேவலம் எண்ணமாத்திரத்தில் நிற்கவேண்டியதாயிற்றே!

கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா,மெய்த்தெளிவால்
வாட்டமாறு உற்பவநோய் மாறுமோ—நாட்டமுறு
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்.

'இப்படி இருக்க நம்மால் முடியாதென்று மற்றைய மான்களுடன் சேர்ந்தால் இந்த ஜன்மத்திற்கு ஏற்ற அபிமானதிகள் வந்து மூடிக்கொண்டு என்னை எந்த ஜன்மத்தில் கொண்டு வீழ்த்துமோ! அறியேன். ஆத

லால் இந்த ஜன்மத்திற்கேற்றபடி இருக்கவும் கூடாது,' என்று வெகுவாக எண்ணமிட்டது. தீர்க்க ஆலோசனை யின்பேரில் 'நான் முன் இருந்த கண்டகீதீரம் புலஹாசிரம் போய்ச்சேர்ந்து உலகவிஷயங்களை நாடாது தேஹதாரணை செய்துகொண்டு இம்மேலான சிந்தை யுடன் மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். பின்னர் கடவுள் காட்டும் வழிப்படி நடக்கட்டும்' என்று தீர்மானித்து அவ்வாறே செய்தது.

அங்குச் சென்றதும் இந்த மானுக்குப் பழைய ஞாபகங்கள் எல்லாம் முன்னிலும் அதிகமாக வந்து எக்கமும் பிடித்துவிட்டது. அங்கு நிர்மல சித்தர்களாக அநேக மஹான்கள் தவம் செய்துகொண்டிருந்தனர். 'இவர்களைப்போல நாமும் முன்ஜன்மத்தி லிருக்கவில்லையா! கைக்கு எட்டினது வாய்க்கெட்டாவண்ணம் செய்துகொண்டேனே! 'இனியேதென்கு உன்அருள் வருமோ எனக்கருதி' எங்கிற்று ஓர் ஸமயம். மற்ரோர் ஸமயம்' முன்னர் ஏமாந்துதான் இக்கதிவந்ததே! இனியும் அஜாக்ரதையாக இருந்தால் எக்கதி வருமோ!' என்று பயந்து, மனம் சலிக்கும் போதெல்லாம் அதை நேர்வழிப் படுத்திக்கொள்ளும். 'நல்ல வேளை மான் கூட்டங்களை விட்டுத் தப்பிப்பிழைத்து இங்கு வந்த தனுல் அல்லவா, இம்மஹான்களது ஸத்ஸஹவாஸம் கிடைத்தது. இதனுல் நம்மனம் சுத்த மாகிறது. நாம் முன்னர் செய்த தவம் ஞாபகம் வர அம்மாதிரியே மாருதிருக்கவேண்டும் என்ற அடங்கா ஆவல் உண்டாகின்றது. ஓர்வித ஸத்கர்மங்களுக்கும் யோக்யதை யில்லாத இந்த ஜன்மத்தில் கூட இந்த ஸத்ஸங்கத்தின் மஹிமையால் மனம் ஸம்பந்தப்பட்டவரையில் யாதொரு தாழ்வும் ஏற்படாதிருக்கின்றது' என்று திருப்தி அடையும் ஓர் ஸமயம். திருப்தியால் கர்வம் வந்து விடாதபடி அடிக்கடி 'எப்போ தொலையும் இத்துன்பம்'

'ஓயாதோ என்கவலை உள்ளே ஆனந்தவெள்ளம்
பாயாதோ அய்யா பகராய் பராபரமே'

என்று கூறியபடி இந்த மான் ஜன்மமும் அதனுல் ஏற்படும் கவலைகளும் எப்போ தொலையும்' என்று முடிவை எதிர்பார்த்தும் நிற்கும்.

இம்மாதிரி தபஸ்விகளைப் போலவே பிரபஞ்சவாழ்க்கையில் தாக்கற்று மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டு பரதமான் ஸாவதானமாகத் தன் காலத்தைக்கழித்து வந்தது. காலக்கிரமத்தில் இதற்குத் தேஹம் நழுவும் தருணம்வர அந்த ஸமயத்தை முன்னரே ஊஹித்துணர்ந்து அப்பொழுது சாந்தமனதுடன் பிரபஞ்ச வாஸனைகளை நீக்கிப் பரம நிஷ்டா நிலையில் மனதை வைத்துக்கொண்டு வெகு ஸாவதானமாகக் கண்டகீ நதியாகிய புண்ய தீர்த்தத்தில் மூழ்கி தேஹத்தை நழுவவிட்டு அடுத்த ஜன்மத்தில் ஓர் சிறந்த பிராஹ்மணருக்குப் பிள்ளையாகப்போய் பிறந்தது.

பரதரது மூன்ரும் ஜன்ம விருத்தாந்தத்தைப் பின்னர் எடுத்து விஸ்தரிப்போம்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## த்ரௌபதி அல்லது மனத்தினிலை கீழ்மை யொழிந்த காதை

"மலையில் விளைந்தாலும் உரலில் இடிபடும்" என்பது ஓர் பழமொழி. உயர்ந்த குலத்தில் பிறப்பினும் பெண்கள் தாம்கொண்ட கணவர்க்கு வழிபடாது இருக்கமுடியுமா? நற்குலத்தில் பிறந்து, நிறைந்த குணமும் அடைந்து, கற்புநிலை நிற்கின்ற பெண்கள் கணவர்களை ஆதரிக்க எதுதான் செய்யமாட்டார்கள்? பன்னிரண்டு வருஷம் வனத்தில் வாசமானபிறகு,ஒளிந்து யாராலும் அறியமுடியாதபடி வாழவேண்டியது,பாண்டவரது கடைமை. அதற்காகப் பாண்டவர்கள் பல வேஷங்கொண்டு விராடராஜனது அரண்மனையில் வேலைக்கு அமர்ந்தார்கள். அப்பொழுது தமது கணவரது மனத்தை ஸந்தோஷப்படுத்த, உயர்குலத்தில் பிறந்த பெண்கள் விரும்பாத பாங்கித்தொழிலை "ஸைரந்த்ரி" என்று சொல்லப்படுகிற பெயரோடு மேற்கொண்டு விராடராஜனது அந்தஃபுரத்தில் அமர்ந்தனள்.

விராடன் மனைவி ஸுதேஷ்ணை. அவளிடமே த்ரௌபதி வேலை செய்ய அமர்ந்தது. அங்கு ஏவிய தொழிலைச் செய்துகொண்டு பொழுதை மிகு வ்யஸனத்தோடு ஓட்டிக்கொண்டிருந்தாள்.

இதற்குள், "நீ யார்? யாரைச் சேர்ந்தவள்? இவ்வூர்க்கு எப்படி வந்தாய்? அழகென்னும் ஜ்வாலையின் கொழுந்து படர்ந்து விளங்கு முகத்தை யுடையவளே! உண்மையைக்கூறும். உவாமதி யொத்த முகமும், செந்தாமரை மலரைப் பழிக்குங் கண்ணும், வில்லைவளைத்த புருவமும், அழகு திரண்ட உருவமும், மெல்லிய மாதுசரீரமும் உடையாய்! உன்னை ஒப்பாரை நான் இதுவரையிலும் கண்டதில்லை. உனது குயிலைப்பழித்த குரலும், மேஹம்கவிந்த சந்திரனையொத்த கேசம் நிறைந்த நெற்றியும் இயற்கை யழகல்லவா? நீதேவிதானே? உனது முகத்தைக்கண்டும் மயங்காது இருக்கமுடியுமா? உனது முகாரவிந்தத்தில் பொருந்திய புருவங்களிரண்டும் காமனது கணைபோல் என்னை வாட்டுகின்றன. உனது திரண்டு உருண்டு தமக்கிணைத்தாமேயாக விளங்கும் அழகென்னு நெய் யாற் எனது காமப்பெருநெருப்பு பார்க்கப்பார்க்க உன்னை அடைய வேண்டுமென்னும் எண்ணத்தால்

தூண்டப்பெற்று, மிகத் தீக்ஷண்யமாக என்னுடல் ஆவி இரண்டையும் கொளுத்துகின்றது. அதற்குக் கருணை லவலேசமுங் கிடையாது. சித்ரப்பதுமை யொத்த உன் முகத்தில் முகங்கலந்து முத்தமிட்டு ஆனந்தப்பேரீடு அடைய வேண்டுமென்னு மாவலை நீயன்றி யார் அடக்குவார்? உன் நடையும் உன் வாயொலியும் என்னுடல் முழுதும் மயிர்க்கூச்சிடச் செய்கின்றன. உன்னைக் காணும் தோறும் ஆசையும் துன்பமும் கூடிக்குலாவுகின்றன. உன் கடைக்கண் பார்வையும், கற்பனை மொழியும் என் மனத்தை மயக்குகின்றன. நீ அழகிற் சிறந்தவள். உருவிற் சிறந்தவள். குணத்திலும் சிறந்தவள். நீ நல்லவள். பிறர் துன்பமடையக் காண விரும்பாதவள். மதம் பிடித்த யானையின் நடையினை உடையவள். மனத்திற் கினியவள். பார்வைக்கு எளியவள். நீ என்னைச் சேரவேண்டும். உன் விருப்பம் முழுதும் பலனடையச் செய்வேன். இக்கொடிய கீழ்மகள் வேலையைச் செய்தல் உனக்கழகல்ல. உனக்குத் தகுதியும் அல்ல. இக்கஷ்டத்தையும் படவேண்டியதில்லை. வாய்க்கினிக்க உண்ணவும், பார்க்கத்தகுந்த மனோரம்யங்களைக் காணவும், தேவாம்ருதம்போல் எதிலும் சிறந்ததை அடைந்து ஸுகம் பெறும்படி நான் செய்வேன். குபேர நிலையில் வைப்பேன். அடையவேண்டிய வயதில் ஸுகமடையாது இளமையை வீணாகக் கழிப்பதும் தகுமோ. அழகு பெற்றும் காட்டில் எரிக்கும் நிலவுபோல் பயனற்று இருப்பது தகுமோ? என் மனைவியர் யாவரையும் துறந்து உன்னையே மனைவியாக வரிப்பேன். அவர்கள் உனக்கு ஊழியம் செய்யக்கடவர். நானும் நீ யிட்டவேலை செய்யும் வேலைக்காரன் போல் உனக்கு ஊழியஞ்செய்து இன்பமடைவேன்." என்று **கீசகன்** எதிர் வந்து ஏங்கினன்.

" நான் **ஸைரந்த்ரீ**. கீழ்ஜாதி மகள். உன்னையடையத்தக்க பெருமிதம் உடையவள் அல்ல. என்னைத் தாங்கள் விரும்புவதில் பெருமை யடையத்தகாதவளைப் பெருமைப்படுத்தப் பார்க்கிறீர். நான் பிறர் மனைவி உனக்கு நன்மையுண்டாகட்டும்! உமது பதவிக்கு இக்குணம் பொருந்தாது. மனைவியர் அவ்வவர் கணவர்க்கே அன்புக்குரியவர். இது உண்மை மொழி. உமது ஹ்ருதயம் பிறர் மனைவியரை விரும்பாது, கெடுவழி செல்லாது பெருமை அடையட்டும்! கீழ்மை ஒழித்தலே நல்லோர் குணம். ஆசையிற் செல்லும் மனம் பாபத்திற்கு வழிதேடும். பின் தனக்கும் தெரியாது, மாயவழியிற் புகுந்து, அழிவென்னும் படுகுழியிற் பாய்ந்து அவமானமடையும். இது ஸத்தியம். "

என்று த்ரௌபதி கூறிய நியாய மொழிகள் கீழ்மையிலே மனம் பாய்ந்து செல்லும் கீசகனுடைய மனத்தில் பாய்ந்தன. தானே படர்ந்தெரியும் காமப் பெருநெருப்பைத் தூண்டியது. காமத்தால் விளையும் கொடுமை முழுதும் அறிந்திருந்தும், ஸமயபலத்தின் விசேஷத்தால் அழிவை உண்டாக்கக்கூடிய செயல்களில் மனம் ப்ரவர்த்தி அடையும்படியான நிலைமையை அடைந்தான்.

" அழகிற் சிறந்தவளே! உன்னால் மன்மத பாணங்களால் வருந்தும் என்னை அலக்ஷியம் செய்வது உனக்கழகன்று. என்னை இப்பொழுது துறப்பதால் விளையும் தீங்கிற்குப் பின் வருந்த நேராதிருக்காது. மதியற்றவளே! இவ்வூர் முழுதும் எனது. இவ்வூராரது உயிரைக் காப்பவனும் யான்தான். வீரத்தில் எனக்கு ஸமானமானவர் கிடையாது. அழகினலாவது, இளமையாலாவது, செல்வத்தாலாவது எனக்கிணையானவர் உலகிலில்லை. ஆசைப்பொருள் மிகுதியிலும் என்னை ஒப்பவர் யாருமில்லை. காமக் கடலைக் கடக்கத்தக்க புணையும் என்னை அல்லாது உலகிலில்லை. இனியும் உன் ஊழியம் விட்டு என்பால் ஆசை கொண்டு உன் ஆசைப்பொருள் யாவும் பெற்று என் முழுநாடும் பெற்று ஸுகம் பெறலாம். அதுவே உனக்கு ஸுகத்தை நாடும் வழி" என்று கீசகன் கூறினன்.

" ஹே! ஸூதன்மதலாய்! என் இவ்விதம் கற்றறி மூடனாக விளங்குகிறாய்? என்னை விரும்பி இன்றைக்கே உன்னுயிரை மாய்த்துக்கொள்ளாதே. வீணாக உயிரைக் கொலைசெய்யாதே. என்னை எளியவள் என்று எண்ணவேண்டாம். என்னைக்காக்க ஐவர் வீரர் இருக்கிறார்கள். அவர்கள் கந்தர்வர்கள். அவரே என் கணவர். கோபங்கொண்டால் உன் உயிர் வாங்காது போகார். நடக்காத வழியில் நடக்க முயல்கிறாய். வீணே அடாது செய்து உன்னுயிரை விடாதே! அறியாச் சிறுவன் அக்கரை அடைய கடலில் இறங்கியது போல் செய்யாதே. உத்தம வழிக்கென்று உழைக்க வேண்டிய உயிரை வீணாகக் கழிக்காதிரு. புத்தியற்றவனே! நீயாக என் வீணில் படுகுழியில் பாய்கிறாய். தன்னுயிரைக் கொலைசெய்யவரும் இரவை விரும்பும் பிணிப் பட்டவன்போல் என் எசித்தனுய். என்னை

விரும்புகிறாய்? தாய் மடியிலிருக்கும் குழந்தை இளம் பிறைச் சந்திரனை பிடிக்க முயல்வதுபோல் என்னை ஏன் விரும்புகிறாய்? என் கணவரது கோபத்திற்குப் பாத்திரனானபின் நீ எங்கு ஒளித்தாலும் சும்மா விடமாட்டார்கள். உன்னைக் கசக்கி, தசை எலும்பு ஒன்றும் அகப்படாதபடி பிசைந்து, உன் ரக்தத்தைப் பிழிவார்கள். இதில் சற்றும் ஸந்தேஹம் கிடையாது. உன் கீழ்மை எண்ணத்தை ஒழி."

ஸைரந்த்ரியின் மொழிகளைக் கேட்ட கீசகன் ஸுதேக்ஷணையிடம் வந்து, "அவளை எவ்வாறேனும் என்னைக் கூடும்படிச் செய்யவேண்டும். இல்லாவிடில் என்னுயிரை இன்றே விடுவேன்" என்றான். இம்மொழிகளைக் கேட்ட ஸுதேக்ஷணை தம்பியின்பால் அநுதாபமும், ஸைரந்த்ரியின் மனக்குழப்பத்தின் ஸ்வபாவத்தையும் ஆலோசித்து அவனது காமத்தைச் சற்றே தணிக்க எண்ணி, "விழாநாள்களைக் கொண்டாடச் செய். அப்பொழுது அவளைத் தேன் மதுபழம் இவைகளை எடுத்துவரச் செய்வேன். அப்பொழுது வார்த்தைகளால் தட்டிக் கொடுத்து, உன்னால் முடியுமானால், அவள் இசைந்தால், முடித்துக்கொள் என்றாள். அவ்வாறே விழாநாள் ஒன்றில் ஸைரந்த்ரியைக்கூவி 'நீ இப்பொழுது கீசகன் வீடு சென்று, எனக்கு மிகதாஹமாக இருக்கிறபடியால் கொஞ்சம், மது எடுத்துக்கொண்டு வா. உடனே போ. என்னால் தாஹம் பொறுக்கமுடியவில்லை என்றாள். "அம்மா! அவ்விடம் என்னை அனுப்பாதிரும். உமக்குத் தருமமாகும். அவர் வெட்கமற்றவர். அது உமக்கே தெரியும். என்கணவர்களை த்ரோஹம்செய்து அதர்ம வழியில் நடக்கமுடியாது. அவர் மன்மத பாணத்தால் தாபமடைந்திருப்பதால் என்னைக்கெடுக்க நிச்சயமாக முயல்வார். ஆகையால் வேறு யாரையாவது நீங்கள் அனுப்பும். நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்றாள் த்ரௌபதி. "நான் உன்னை அனுப்பிய போது ஒருநாளும் அவன் அப்படிச் செய்யமாட்டான்" என்று பதில் கூறினாள். த்ரௌபதியும் "எனக்கு என் கணவரன்றி வேறு யாரும் தெரியார். அவ்வுண்மை ஒன்றே என்னைக் கீசகனிடமிருந்து காக்குமாக!" என்று சொல்லிக்கொண்டு ஸூர்யதேவதையை ஸ்தோத்திரம் செய்துகொண்டு வழிநடந்தாள். அம்முறையைக் கேட்ட ஸூர்யனும் ஓர் ராக்ஷஸனைத் த்ரௌபதியைக் காக்க ஏவினான். யாரும் அறியாதவண்ணம் ஸைரந்த்ரியின் பின்னே அவனும் நடந்துவந்தான்.

த்ரௌபதி கீசகன் வீட்டில் வந்து "ஸுதேக்ஷணா தேவிக்குத் தாஹசாந்திக்குமுன்னே மதுதாரும்" என்றாள். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல ஸைரந்த்ரிவர கீசகன் ஆனந்த பரவசனாகித் தன் வழிப்பட்டாள் த்ரௌபதி என்னும் எண்ணம் குடிகொண்டவனாகி நிலைதவறி பேசலானான். "நீ போக வேண்டியதில்லை. வேறொருவனை ஸுதேக்ஷணைக்கு மதுகொண்டு தரச்செய்வேன். இந்நாளே நல்ல நாள். என் மனம் நிர்மலமாக இருக்கிறது. உனக்கு வேண்டிய ஆபரணங்கள் அணியச்செய்கிறேன் வா. தனியாக அமளி இடச்சொல்லி இருக்கிறேன்" என்றான் என்று சொல்லி அவள் வலது கையைப் பிடித்து மெல்ல இழுத்தான்.

"நான் என் மனதிலுங்கூட ஒருவிதமான கெட்ட எண்ணமும் என் கணவர்பால் கொண்டதில்லை. அவர்களை அன்றி வேறெவரையும் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. பார்த்ததுமில்லை. ஹே! பாபமே! என்னுடைய உண்மை நிலையால் உன்னழிவைக் காணாதிருக்க முடியாது. உன் வாழ்வை ஒழிக்க யானே காரணமாவேன்; கீழ்மை அடியோடொழிய இன்றைக்கே நாள் ஆகியது" என்று உரத்துக் கூவினாள்.

கூவித் தான் கையைத் திமிரியோட முயலும்பொழுது, அவளது புடவையின் முன்தானையைப் பிடித்துக்கொண்டு பின்னோட ஆரம்பித்தான். த்ரௌபதிக்கு ஸமயோசிதமாக மிக்க மனோதைர்யமுண்டாகி விட்டது. அவளுக்கும் தெரியாது ஒரு விதமாகிய மூடபலம் உண்டாகிவிட்டது. விட்டதும் கீசகனைத் தன்னை விடுவித்துக்கொள்ளும்பொருட்டு ஒரு புரட்டுப் புரட்டினாள். அவன் அசைவற்று பூமியில் வீழ்ந்தான். இதற்குள் ஸைரந்த்ரி விராடன் ஸபையை அடைந்தாள். ஸைரந்த்ரியைக் காக்கவந்த ராக்ஷஸனும் கீசகனை மோத அசைவற்ற மரம்போல் கீழ் வீழ்ந்திருந்தவன் விராட ஸபையில் அவளைத் தன்காலால் உதைத்தான். மாறு வேஷங்கொண்டு ஸபையிலிருந்த பீமனுக்குக் கோபமூள அதைத் தருமர் சாந்தப்படுத்தினர்.

இதற்குள் "ஹேராஜா! ஸந்யாசி நிலயத்திலிருந்தாலும் ஸரி, மற்று சொந்த ஊரிலிருப்பவரைப்பற்றி கவலை யில்லை, தமது பகைவரைக் கொலை செய்யும் பெருமை வாய்ந்தவரது மனைவியை ஒருஸூதன் மகன் உதைத்தான்! ஹா! எவருடைய வில்லிலாவியும் நாணொலியும் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கிறதோ அவரது மனைவியை ஹா! ஒரு ஸூதன் மகன்

உதைத்தான். அடக்கம், பொறுமை, சாந்தம், தயை, வீரம் முதலிய உன்னத குணமுடையவருடைய மனைவியை ஒரு ஸூதன் மகன் உதைத்தான்! கர்மத்தால் தடைப்பட்டிருக்கும் இவ்வுலகம் யாவையும் அழிக்கத்தக்க பெருமித முடையாருடைய மனைவியை ஒரு ஸூதன் மகன் உதைத்தான்! அவர்கள், வேண்டியார்க்கு வேண்டியன கொடுப்பவர் இப்பொழுது தெரியாமல் அலைகிறார்கள். இவ்வளவு பெருமை வாய்ந்தவர் ஒரு ஸூதன் மகன் என்னை இவ்வாறு அவமதிக்க அவனைத் தண்டியாதிருப்பது அழகா? தமது மனைவியைப் பிறர் வருத்தக்காண்பதும் அவர்க்கழகா? அவரது ஆண்மை எங்குபோகும்? இது விராடநகர். அஸத்ய நகரம். இவ்வூரில் அகப்பட்டுக்கொண்ட யான் என்ன செய்வேன். அரச ஸபையிலிருந்தும் வலியற்றிருக்கிறேன். ஹே விராட மஹாராஜா! உன் நடத்தை மிக ஒழுங்கு. வெகு நன்றாய் இருக்கின்றது. நீ ஓர் அரசன்! எதிரில் பார்த்துக்கொண்டிருக்கிறாய். திருடன்போல் நடந்துகொண்டாயே! அரச குணங்கள் எங்கிருந்து வரும். கீசகன் நெறி தப்பினவன். இம்மத்ஸ்ய நாட்டரசனுமவ்வளவே. இந்த ஸதஸில் இருப்பவரும் அவ்வளவே. இனத்தோடே இனஞ்சேரும்."

த்ரௌபதி மேற்கூறியவண்ணம் ப்ரலாபித்தாள். விராடன் 'உமது வ்யவஹாரத்தின் உண்மை தெரியாது. நான் எவ்வாறு நியாயம் நடத்துவது' என்றான். இதற்குள் ஸபையிலிருந்த தருமர் ஸைரந்த்ரியைப் பார்த்து "இவ்வம்பலத்தில் என் ஆடுகிறாய். ஸுதேஷ்ணை இடம் செல். இங்கு நிற்காதே. வீரர் மனைவி தமது கணவர்களுக்காக எக்கஷ்டத்தையும் பொறுப்பர். அவ்வாறு செய்வதால் உனக்கு நன்மையே உண்டாகலாம். உனது நாயகர்களாகிய கந்தர்வர் ஒருவேளை தமது கோபத்தைக்காட்ட இது தக்க ஸமயம் அல்லவென்றிருக்கலாம். உனக்குத் துன்பமுண்டாக்கினவர்களை அவர்கள் வீணில் விடார். நீ இங்கு ஓர் நடிபோல் ஆடாதே. இந்த ஸபையில் வந்து இரைச்சலிட்டுத் தொந்தரைசெய்யாதே. ஸுதேஷ்ணை இடம்போ. பயப்படவேண்டாம். உனக்குத்தீங்கு செய்பவனுடைய உயிரை வாங்காதிருக்கமாட்டார்" என்று சொன்னார். 'இந்தச் சூதால் அல்லவோ வருங்கஷ்டமெல்லாம்' என்று சொல்லிக்கொண்டு அழுது அரற்றிக்கொண்டு ஸுதேஷ்ணைமுன் சென்றாள். அவளும் அழுவதின் காரணம் யாது என்று கேட்டாள். கீசகன் நடத்தையைக்கூற 'அவனைக்கொன்றுவிட நான் செய்கிறேன். பயப்படவேண்டாம்' என்றாள் ஸுதேஷ்ணை. "அதற்குப் பயமில்லை, யார்க்கவன் அபராதம் செய்தானோ அவர் அவனை இன்றே மாய்த்துவிடுவார். அதற்காக உமக்குக் கவலைவேண்டாம்" என்று பதில் கூறிவிட்டுக் கீசகனை அன்றிரவே கொல்லவேண்டும் என்ற கருத்தோடு இரவுமுழுதும் நித்திரை இல்லாமல் சிந்தாஃக்ராந்தையாய் பீமன்பால் சென்று அவனை எழுப்பித் தன் துஃகம் முழுதும் கூறி அழுதாள்.

"என்னை ஸுதேஷ்ணைப் பரிஹாஸம் செய்வதையும் கவனித்தீரில்லை. என்னை அன்று ப்ரதிகாமனிழுக்க என் மனமசைந்தது. இப்பொழுது கீசகனுதைக்கவும் கண்டுகொண்டிருந்தீர். உங்களுக்காண்மையில்லையா? தனஞ்ஜயன், பீமன் என்னும் இவர்கள் எல்லாம் கைவிட்டு விடுவார்களா? உங்களாண்மை கழன்றுவிட்டதா? பாண்டவர் இருக்கவும் நான் இவ்வாறு துன்பப்படவேண்டுமோ? உங்களுக்கு வீரமிருந்தென்ன? பலமிருந்தென்ன? என்னைக் காக்க வலியற்றுப் போய்விட்டீர்களா? மாறுவேஷங்கொண்டதும் குணமும் மாறிவிடுமோ?" என்று பலவிதம் த்ரௌபதி கூற பீமன் கூறுவான்—

"நான் தருமரது கட்டால் அப்பொழுது வீணாகவிருந்தேன். நீ பயப்படவேண்டாம். காடை அடைந்து நாம் படுங்கஷ்டங்களை வ்யவஹரிக்கவேண்டுமோ! எத்தனைப்பெண்கள் கணவர்களுக்காகக்கஷ்டப்படவில்லை. காட்டில் இந்த்ரஸேனை கணவனை நாடிச் செல்லவில்லையா? ஸீதை தன் கொண்டவனுக்காக வனவாஸத்தை விரும்பவில்லையா? தனித்து அலையவில்லையா? ஆசையைக்கழித்து லோபாமுத்ரை அகஸ்தியரைநாடி காட்டிற்குச் செல்லவில்லையா? ஸாவித்ரி கணவனுக்காகத் தன்னுயிரை யளிக்க ஸித்தமாயிருக்கவில்லையா? அதேபோல் நீயும் எங்களுக்காகக் கஷ்டப்படுகிறாய்."

"என்மேல் கீசகனுக்காசை என்று என்னைப் பலமுறை கீசகன் வீட்டிற்கனுப்புகிறாள். அவன் தகாத மொழிகள் கூறுகிறான். காமத்துறையில் மூழ்கிக்கிடக்கிறான். இனி என்னால் பொறுக்கமுடியாது. இக்கீசகனே இவ்விராட நகர்க்குத் தலைவனாக விளங்குகிறான். அந்தத் துராத்மாவைக்கண்டால் என் வயிறு எரிகிறது. கற்பழித்து வாழ்பவனை வீணில் விடலாகாது. ஸத்தியத்திற்குப் பாடுபடும் நீங்கள் மனைவியைத் துறத்தல் ஆகுமா? மனைவியைக் காப்பதால் ஸந்ததியைக் காக்கிறீர். ஸந்ததியைக் காப்பதால் ஆத்மா காக்கப்படுகிறது. மனைவியிடம் தானே உருதரித்து வருவதல்ல

வா? அதனாலல்லவா மனைவிக்கு ஐயை என்று பெயர். மனைவியும் கணவரைக் காக்கவேண்டும். நீங்களும் என்னைக் காக்கவேண்டும். ஜடாஸுரனிடத்திலிருந்து காத்ததும் நீங்களே! ஜயந்ரனிடமிருந்து காத்ததும் நீங்களே! இனி கீசகனிடமிருந்து காக்கவேண்டியதும் நீங்களே! அவ்வாறு செய்யாவிடில் விஷத்தை உண்டு உயிரை மாய்த்துக்கொள்வேனே ஒழிய அப்பொல்லா கீசகனுக் காளாகமாட்டேன்" என்று த்ரௌபதி அழுதுக்கொண்டு சொன்னாள்.

பீமனும் 'நீ பயப்படவேண்டாம். அவன் இரவில் கூத்துக்குரவை எல்லாமானதும் உறங்கவருவான். அப்பொழுது அவனிடம் வருவதாக வா. நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று தேற்றரவு கூறினான்.

த்ரௌபதியும் கந்தர்வர்களுக்குத் தெரியாது கீசகனிடம் வருவதாக ஒத்துக்கொண்டாள். ஆனால் ஸுதேக்ஷணை முதலிய யாவருக்கும் தெரியக்கூடாதென்று கேட்டுக்கொண்டாள். கந்தர்வர்களுக்குத் தான் கீசகனிடம் வந்ததாகவும் தெரியக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டாள். (தொடரும்.)

---

வெற்றிலையின் குணங்கள்.—வெற்றிலைக்கு அடியில் கண்ட வியாதிகளை ஒழிப்பதில் அதிக சக்தி உண்டு:—

1. ஜீரண சக்தியை விருத்தி செய்வதில் இதற்கு நிகர் வேறொன்றுமில்லை.

2. வயிற்றுக் கடுப்பு, மலபந்தம், மலத்துடன் ரத்தச் சீழ் வடிதல், இவைகளுக்கு ஏழு வெற்றிலையுடன் ஒரு நாட்டுப் பாக்கைச் சேர்த்து ஒரு நாளைக்கு ஐந்து தரம் போட்டுக் கொண்டால் அந்த வியாதிகள் இரண்டே நாளில் சௌக்கியமாகிவிடும்.

3. பார்வைக்குறைவு, ஞாபகக்குறைவு, நரம்புத் தளர்ச்சி உள்ளவர்கள் வெற்றிலையைத் தினம் உபயோகிக்கவேண்டும்.

4. தேள் கொட்டினதற்கும் கடித்ததற்கும் வசம்புத்துளை வெற்றிலைச்சாற்றுடன் சேர்த்து அரைத்து முப்பது நிமிஷத்திற்கு ஒருதரம் பூசினால் வலியிராது.

5. தெரியாமல் மண்ணெண்ணெயைக் குடித்தவர்கள், வீசம்படி வெற்றிலைச் சாற்றை பசுமோருடன் கலந்து சாப்பிட்டால் மிகவும் நல்லது. பத்துநிமிஷத்தில் குணமாகும்.

6. நீடித்த ஆயுளை விரும்புகிறவர்கள் வெற்றிலையை ஒருநாளும் கைவிடார்கள்.

எப்பொழுதும் ரஸத்தை உள்விழுங்கிச் சக்கையை உமிழ்ந்துவிட வேண்டும்.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

**காம்போடியா பருத்திச் சாகுபடி.**—தென் இலாகா விவசாய டிப்டி டைரக்டர் மிஸ்டர் எச். ஸி. ஸாம்ப்சன் தெரிவிக்கிறார்:—

"கம்போடியா பருத்திச் சாகுபடியில் கவனம் உள்ளோர் நெல்லிக்குப்பத்துக்கு அடுத்த பாலூர் விவசாயப் பண்ணையில் நேர்த்தியாய் வளர்ந்திருக்கும் கம்போடியா பருத்தியை இப்பொழுது போய்ப் பார்வையிடலாம். பருத்திக்காய்கள் வெடித்துப் பருத்தி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நேரில்போய்ப் பார்ப்பவர்களுக்குக் கம்போடியா பருத்திச் சாகுபடியைக் குறித்து வேண்டிய விஷயங்கள் பண்ணை மானேஜர் தெரிவிப்பார்."

* * *

**ஆகாயகமன யந்திர வாயிலாகத் தபால்.**—அலகாபாத் பொருட்காட்சியில் விடப்படும் ரதங்கள் மூலமாகத் தபால் அனுப்பப் போகிறார்களென்றும், காம்டேன் விண்டாம் என்பவர் அப்பரீட்சையைச் செய்து பார்ப்பதற்கு அலகாபாத் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அதனை யங்கீகரித்திருக்கிறாரென்றும் தெரிகின்றன. பொருட்காட்சிக் கட்டடத்திலிருந்து அதற்கு வெளியே யிருக்கும் தபால் ஆபீஸுக்குக் கடிதங்கள் ரதங்கள் மூலமாக அனுப்பப்படும். அவற்றைப் பேக்கட் என்ற ஆகாயகமனி கொண்டுபோவார்.

* * *

**சென்னை மாகாணத்தில் மாடல் ஹைஸ்கூல்கள்.**—சென்னை மாகாணத்தில் மாடல்(மாதிரி,)ஹைஸ்கூல்கள் சில ஸ்தாபிப்பதைப் பற்றி மேலதிகாரிகளுக்கு மாகாணக் கவர்ன்மெண்டார் அனுப்பியிருந்த பிரேபணைகளை இப்போது இந்தியா மந்திரி கவனித்து வருகிறார். அம்மாதிரி சர்க்கார் செலவில் மாடல் ஹைஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்படக் கூடாதென்று இந்தியாவிலும் இங்கிலாண்டிலுமுள்ள பாதிரிமார்கள் பலமாய் வாதிக்கப் போகிறார்களென்று காண்கிறது. அவர்கள் இப்பொழுது தங்கள் கண்டன விண்ணப்பத்துக்குக் கையெழுத்துக்கள் சேர்த்து வருவதாய்க் காண்கிறது.

* * *

**இந்தியாவின் ஏற்றுமதியும் இறக்குமதியும்.**—சென்ற மார்ச்சு மாதத்தில் அயல் நாட்டிலிருந்து ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள சாமான்கள் இறக்கு

மதியா யிருக்கின்றன. சரக்குகள ஏற்றுமதிக்காக 97½ லக்ஷம் ரூபாய் அட்வான்ஸாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 60 லக்ஷம் பெறுமானமுள்ள பஞ்சுத் துணிகளும், 5 லக்ஷம் பெறுமானமுள்ள மெஷீன் சாமான்களும், 10 லக்ஷம் பெறுமானமுள்ள ரயில் சாமான்களும் இறக்குமதியாயிருக்கின்றன.

* * *

**தென்னுபிரிக்காவில் யூதர்கள்.**—தென்னுபிரிக்காவில் இந்தியர்கள் மட்டுந்தான் விசேஷத் தொல்லைகளை யனுபவிக்கவேண்டியவர்களாயிருக்கிறுர்களென்பதில்லை. அங்கு யூதர்கள்கூட (Jews) வெள்ளையர்களால் வருத்தப்படுத்தப் படுகிறுர்களென்று தெரிகிறது. புதிய குடியேற்றச் சட்ட விதிகளை யூதர்கள் சரியென்று ஒப்புக்கொள்ளவில்லை. அச்சட்ட விதிகளை அமுலுக்குக் கொண்டுவரும் உத்தியோகஸ்தர்கள் இந்தியர்களை மட்டுமே யன்றி யூதர்களையும் ஆட்டிவைக்கிறுர்களாம்.

* * *

**கம்பியில்லாத் தந்தி.**—மிஸ்டர் பார்மன் என்பவர் ஆகாயவிமானி பங் என்னுமிடத்தில் ஆகாய விமானத்திலேறிப் பறந்து கொண்டிருந்தபோது பத்து மைல் தூரத்தில் கம்பியில்லாத் தந்தியில் பேசினுராம்.

* * *

**கல்மழை.**—விருதுப்பட்டி நிருபரொருவர் மதராஸ் மெயில் பத்திரிகைக்கு எழுதுகிறுர்.—"சென்ற வியாழக்கிழமையன்று (20-4-11) பெய்த கல் மழையில் ரஸ்தாக்களெல்லாம் 1, 2 அங்குலமுள்ள தட்டையும் உருண்டையுமான கற்கள் மயமாயிருந்தது விநோதமாயிருந்தது. கற்கள் மங்கல் வெள்ளை நிறமா யிருக்கின்றன. இம்மாதிரி கல்மழை இன்னம் எப்பொழுது காண்பதோ?"

* * *

**ஊமையர் பேசப் படிப்பித்தல்.**—பாளையங்கோட்டையிலே செவிடர் ஊமையர்க்கு ஓர் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதில் இந்திய இலங்கைப்பகுதிகளிலிருந்து 118 மாணுக்கர் சென்று பேசப்படிக்கிறுர்கள். குருடரைப் படிப்பிப்பது போல் ஊமையர் செவிடரைப் படிப்பித்துக்கொள்வது அதிகம் இலகுவல்ல. செவியுணர்வுள்ளவர்கள் தொனிகளை அவதானித்து அந்தப்படி தாமுமுச்சரித்துக் கொள்ளுகிறுர்கள். ஊமையர் செவிடர் அந்த உணர்ச்சியற்றவர்களாயிருப்பதினுலேயே பேச அறியாதவர்களாயிருக்கிறுர்கள். மேற்படி பாடசாலையிலே மாணுக்கர் பேசப்பழகும் முறை புத்தகப்படிப்பினுலல்ல. உபாத்தியாயர் பேச உதடுகளசையும் விதத்தைக் குறிப்பாய்ப் பார்த்துக்கொண்டிருந்து மாணுக்கர் ஒவ்வொரு சொல்லையு முச்சரிக்கப் பயிலுகின்றுர்கள். இவ்வித அவதானிப்பினுல் மாணுக்கர் சொற்களை யுச்சரிக்கப் பழகுவது மிகக் கஷ்டமாயிருக்கின்றது. ஆனுல் அவர்களுக்கு மனனசக்தியும், அவதானக்கூர்மையும் அதிகமாயிருப்பதினுற் பொதுவாய்ப் போதிய அளவு அனுகூலமடைந்து வருகிறுர்கள். தற்போது பிரயோகிக்கப்படும் முறைப்படி ஒருவன் சொற்களைத் தெளிவாய்ப் பேசப்பழக எட்டுவருடங்கள் செல்லும்.

திருநெல்வேலியிலே சிலநாட்களுக்கு முன் நடந்த ஓர் பரீட்சையிலே செவிடும் ஊமையுமான 20 மாணுக்கர் இங்கிலீஷ் தமிழ் என்னும் இரு பாஷையிலும் ஓர் சரித்திரத்தைத் தெளிவாய்ச் சொன்னுர்கள். இவ்விதமாய் மேற்படி பாடசாலையிற் செய்யப்படும் வேலைகளனுகூலப்படுவதைக்கண்டு இந்தியாவிலுள்ள விசேஷ பிரபுக்கள் பலர் இம்முயற்சியைத் தூண்டி நடத்துவதற்கு விசேஷ கரிசனை காட்டிவருகிறுர்கள்.

இந்தப் பாடசாலையை ஸ்தாபித்தவர் மிஸ். ரிறேன்சன் என்னும் ஓர் அம்மாளேயாம். காலஞ்சென்ற விக்டோரியா இராணியாரவர்கள் இந்தியாவிலுள்ள குருடர் செவிடர் மனத்தெளிவை யடையத் தக்கதான அறிவு வெளிச்சம் பெறச் செய்யவேண்டிய தகத்திய மென்பதின் பேரில் ஒருமுறை ஓர் கடிதமெழுதியிருந்தார். அதின் மூலமாய் அவர் இந்தியாவிலுள்ள குருடர் செவிடர்மீது காட்டிய அனுதாபமே மேற்படி அம்மாளின் மனதை அதிகமாய் ஏவத்தொடங்கிற்று. உடனே அவர் இவ்விஷயத்தின்பேரில் யோசனைசெய்து தொடக்கத்திற் குருடருக்கு ஓர் பாடசாலை ஸ்தாபித்து நடத்திவந்தார். அதை நடத்திவரும்போது செவிடர், ஊமையரைப் பேசப் படிப்பித்தலே அதிலும் பார்க்க அவசியமென்பதை யுணர்ந்து சிறிது காலத்துக்குள் பாளயங்கோட்டையிலேஇந்தப் பாடசாலையை ஸ்தாபித்தார். இது இப்போது அவருடைய விருப்பப்படி சிறந்தோங்குகின்றது.

மிஸ். ரிறேன்சன் என்னும் இந்த அம்மாள் சிலகாலத்துக்குமுன் கொழும்புக்கு வந்து குருடர், செவிடர், ஊமையர்க்கு ஓர் பாடசாலை ஸ்தாபித்தற்காய் அங்குள்ள தயாள சீலரான பிரபுக்கள், பெருமாட்டிகள் சிலர் முயற்சிசெய்ததைக் கண்டார். அவ்வேளையிலே குருடர், ஊமையர், செவிடர் என்னும் முப்பகுப்பினரையு மொருங்குசேர்த்துப் படிப்பிப்பது பிரயாசம்

குருடரை ஒருபகுதியாயும், செவிடர் ஊமையரை ஒரு பகுதியாயுஞ் சேர்த்துவைத்துப் படிப்பிக்கிற காரியம் அனுகூல மாகுமென யோசனை சொல்லிப் போயிருக்கின்றார். அவருடைய ஆலோசனையைப் பின்பற்றியே இங்குள்ள காரியங்களை நடத்துவார்களாம்.

***

**மரங்களுக்கு மலாம்பூசுதல்.**—சூரிச்சு என்னுமிடத்திலிருக்கும் ரசாயன சாஸ்திரியாரொருவர், மரங்களுக்கும் மலாம்பூசும் வித்தையைக் கண்டுபிடித்திருக்கிறார். இரும்பு, செம்பு, வெள்ளி முதலிய லோகங்களை ஆவியாக்கி, அவற்றின் ஆவி மரத்தின்மேற் பட்டுக் குளிரும்படி செய்தபின் அதனை மலாம்பூசும் இயந்திரத்துக்கெதிரே பிடித்தால், மலாம் மெல்லிதாகப் பரவுமாம்.

***

**ஆகாயக்கப்பற் பந்தயம்.**—இங்கிலாந்திற் பிரசுரமாகும் "டேயிலிமெயில்" என்னும் புதியப்பத்திரிகை ஆகாயக்கப்பற் பந்தய மொன்றை நடத்தி 10,000 பவுண் வெகுமதி கொடுக்க உடன்பட்டிருக்கின்றது. இதிலேற்படும் ஆகாயக் கப்பல்கள் பெரிய பிரித்தானியாவைச் சுற்றிப் பறக்கவேண்டியதாம். பிரயாண தூரம் 1000 மைல். இந்தப்பிரயாணத்திலே கப்பல்கள் சந்திக்கவேண்டிய இடங்களெல்லாம் இப்போதே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. சந்திக்கக் குறிக்கப்பட்டுள்ள எல்லா இடங்களின் இடைத்தூரத்தையுஞ் சேர்த்தே மேற்சொல்லப்பட்ட 1000 மைல் கணிக்கப்பட்டது. வருகிற ஆடி மாதம் 22-ந் தேதி பிரயாணம் ஆரம்பிக்கப்படும். முதற் சுற்றி முடிக்குங் கப்பலுக்குப் பத்திராதிபர் வெகுமதி கொடுப்பார்கள்.

***

**ஜப்பான்தேச வர்த்தகவிருத்தி.**—ஜப்பான் தேசத்தவர் அத்தேசத்தி விறக்குமதியாகும் பிறதேசப் பொருட்களுக்கு நூற்றுக்கு அறுபதுவீதந் துறைமுக வரி விதித்திருக்கிறார்கள். இக்கடும்விதி பிறநாட்டுப் பொருட்கள் அங்குவராது தடுப்பதற்குஞ் சுதேச பொருட்கள் மதிப்புப்பெறுதற்கு முதவியாம்.

***

**காசி ஹிந்து யூனிவர்ஸிடி:**—ஆனரபில் பண்டித மதன்மோகன் மாலவியா அவர்கள் ஹிந்து யூனிவர்ஸிடி யொன்று ஸ்தாபிக்க ஐந்தாறு வருஷமாய் முயன்று வருகிறார். அதற்கு மூலதனம் இப்போது 9,55,000 ரூபாய் வரையிற் சேர்ந்திருக்கின்றது. அவர் தமது வக்கீல்வேலையைக் கவனிப்பதைவிட்டு மேற்படி யூனிவர்சிடியை ஸ்தாபனஞ் செய்வதிலேயே கண்ணும் கருத்துமா யிருக்கின்றார். இது காசியில் ஸ்தாபிக்கப்படுமாம். இது விஷயத்தில் மிஸ்ஸஸ் அன்னிபெசன்டம்மாளும் ஒத்துழைக்க முன்வந் திருக்கிறாராம். இதனால் அன்னிபெசன்டம்மாள் காசியில் ஸ்தாபிக்க வுத்தேசித்திருந்த யூனிவர்ஸிடிப் பிரயத்தனம் இனியில்லையென்று தெரிகின்றது. இப்போது இவ்யூனிவர்ஸிடிக்காக ஆனரபில் - மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யர் 5000 ரூபாய் நன்கொடை யளித்திருக்கின்றார். இதற்கு 40 லட்சம் ரூ. மூலதனம் வேண்டியிருக்கின்றது.

***

**விலையுயர்ந்தபடம்:**—அமெரிக்காவில் ஒரு பிரபுவினிடத்தில் ஒரு படமிருக்கிறதாம்; 160,000 ரூபாய் மதிப்புடையதாம்.

***

**சீனாவில் பிளேக்கின் மூலத்தைக் கண்டவர்:**—இப்போது சீனாவில் வந்திருக்கும் புரொபெஸர் பெட்ரி என்பவர் ஈக்களைப் போன்று பறக்குந் தன்மையுடைய 36 பிராணிகளை 12 மலையெலிகளில் கண்டுபிடித்து, இப்பிராணிகளின் மூலமாக மனிதர்கட்குப் பிளேக் உண்டாகின்றதென்று கூறுகின்றார். சீனாவிலிப்போது பிளேக் வியாதி யொழிந்திருக்கின்றது. இதுகாறும் சீனாவில் பிளேக் வியாதியா லிறந்தவர்கள் 60000-பேருக்கு மேற்பட்டவர்களாம்.

***

**மிகப்பெரிய ரயில்வே ஸ்டேஷன்:**—உலகத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன்களில் இங்கிலாந்திலுள்ள கிளாப்ஹாம் என்னும் ஜங்ஷன் ஸ்டேஷனே மிகப் பெரியதாம். இதில் பிரதிதினமும் 1400 ரயில் வண்டித்தொடர்கள் வந்து போகின்றனவாம்.

***

**சம்பளமின்றி வித்தை கற்பித்தல்.**—லண்டன்மா நகரில் முனிசிபாலிடியாரும், கவர்ன்மெண்டாரும் மற்றைய சங்கத்தார்களும் சிறுபிள்ளைகட்குச் சம்பளமின்றிக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று ஆறுகோடி ரூபாய் செலவு செய்யத் தீர்மானித்திருக்கின்றார்கள்.

***

**கப்பல் விபத்து.**—சைனாவிற்கும் ஜப்பானுக்கும் நடுவே மூன்று கப்பல்களுக்காபத்துண்டாயின. இம் மூன்று கப்பல்களுள் மிபேர் என்னும் கப்பல் கடலில் முழுகிவிட்டது. இதிலிருந்தவர்களுள் நான்கு பேர் சினர்கள் மாண்டார்கள்! மற்றக் கப்பல்களிலிருந்தவர்களுள் ஒருவரும் சாகவில்லை.